மன்னாரில் நுங்குத் திருவிழா
(விரிவு பக்:12)

**உதயன்**
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 165 சித்திரை 27ஆம் நாள் வியாழக்கிழமை 10 மே 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## பருப்புக்கான வரியும் அதிகரிப்பு

கொழும்பு, மே 10
இறக்குமதி செய்யப்படும் பருப்புக்கு விதிக்கப்பட்டிருந்த வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.
உடைத்த ஒரு கிலோ கிராம் பருப்புக்கு 3 ரூபா வரி இதுவரை விதிக்கப்பட்டது. நேற்று >> 06

# மைத்திரியின் கொள்கை விளக்க உரை: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிருப்தி

### இன்றைய விவாதத்தில் எம்.பிக்கள் வெளிப்படுத்துவர்

யாழ்ப்பாணம், மே 10
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் நிகழ்த்திய கொள்கை விளக்க உரை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏமாற்றத்தை வெளியிட்டுள்ளது. தமிழ் மக்களின் நீண்டகால மற்றும் உடனடிப் பிரச்சினைகளுக்கு எப்படித் தீர்வை வழங்கப் போகின்றார் என்ற வரைபடமோ அவரது பேச்சில் தொனிக்கவில்லை என்றும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் >> 06

### 10ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

# பேரெழுச்சியுடன் கடைப்பிடிக்க சுயாதீனக் குழு நியமிக்கப்படும்

### வடக்கு முதலமைச்சர் விக்கி நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 10
தமிழர் இன அழிப்பின் அடையாளமான முள்ளிவாய்க்காலின் 10ஆம் ஆண்டு நினைவேந்தல் நாள் அடுத்த ஆண்டு பேரெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்படும். வடக்கு மாகாண அரசு இல்லாவிடினும் நினைவேந்தலை தொடர்ந்து நடத்துவதற்காக பொது அமைப்புக்களின் பங்களிப்புடன் சுயாதீனக் குழு நிறுவப்படும். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று அறிவித்தார்.
முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை வடக்கு >> 23

## மைத்திரியிடம் மண்டியிட்ட பொன்சேகா

கொழும்பு, மே 10
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை கடந்த 6ஆம் திகதி நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கடுமையாக விமர்சித்திருந்த அமைச்சர் சரத் பொன்சேகா அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.
அரச தலைவர் தலைமையில் நேற்று நடைபெற்ற புதிய அமைச்சரவையின் முதலாவது கூட்டத்தின் பின்னரே அவர் அரச தலைவரிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியிருந்த >> 06

## பல்கலை மாணவரின் பின்னணியில் பணம் அதுவே அவர்கள் அடம்பிடிக்கக் காரணம்

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் பகிரங்கக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 10
யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களுக்கு எங்கிருந்தோ வருமானம் வருகின்றது என்பதால்தான் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை கடைப்பிடிப்பதில் ஈடுபட்டுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் குற் >> 23

முதல்வரின் அறிவிப்பை அடுத்து

## பல்கலைக்கழக மாணவர்கள் தனித்து அஞ்சலிக்க முடிவு

*மாணவர் ஒன்றியம் நேற்றிரவு விடுத்த அறிக்கையில் தெரிவிப்பு* >> 06

## 10 க்கும் குறைவான அமைப்புக்களே பங்கேற்பு

### மாணவர் ஒன்றியமும் கலந்து கொள்ளவில்லை

யாழ்ப்பாணம், மே 10
முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவது தொடர்பில் ஆராய்வதற்கு பொது அமைப்புக்களுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்திருந்தபோதும், பத்துக்கும் >> 06

## இரணைதீவில் 15 நிமிடங்கள் புல்லுவெட்டிய கஜேந்திரகுமார்



கிளிநொச்சி, மே 10
இரணைதீவில் கடற்படையின் ஆக்கிரமிப்புக்கு எதிராக நிலமீட்பு போராட்டம் நடத்தி வரும் மக்களை சந்திக்க தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் >> 06

நினைவேந்தலின்

## முதன்மைச் சுடரை நான் ஏற்றமாட்டேன்

### விக்கி திட்டவட்டம்

யாழ்ப்பாணம், மே 10
வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் முதன்மை ஈகச் சுடரை பாதிக்கப்பட்ட மக்களில் இருந்து யாராவது ஒருவர் ஏற்றட்டும். >> 06

## துப்பாக்கி பறிகொடுத்த வான்படை சிப்பாய் கைது

முல்லைத்தீவு, மே 10
கேப்பாபிலவில் வான்படையின் காவலரணில் இரு நாள்களுக்கு முன்னர் துப்பாக்கி காணாமற்போன சம்பவம் தொடர்பில், துப்பாக்கிக்குரிய வான்படைச் சிப்பாய் பொலிஸாரால் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.
துப்பாக்கி காணாமற்போனமை தொடர்பில் இராணுவப் பொலிஸார், படையி >> 06

மோசடி வழக்குகளைத் துரிதப்படுத்தும்

## நீதித்துறை திருத்தச் சட்டம் நிறைவேற்றம்

>> 06

## வவுனியா சிறை அநீதிகளுக்காக பொங்கியெழும் சட்டத்தரணிகள்

### இன்று கவனவீர்ப்புப் போராட்டம்

வவுனியா, மே 10
வவுனியா சிறைச்சாலைக்குள் நடக்கும் அநீதிகளுக்கு எதிராகவும், அங்குள்ள கைதிகளின் உரிமைகள் மீறப்படுவதைக் கண்டித்தும் வவுனியா மாவட்டச் சட்டத்தரணிகள் சங்கத்தினால் >> 06





மட்டக்களப்பு மாவட்ட செஞ்சிலுவை சங்கத்தினரால் உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் பாசிக்குடா கடற்கரையில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டச் செஞ்சிலுவை சங்கத்தின் தலைவர் த.வசந்தராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வாழைச்சேனைப் பிரதேச சபை தவிசாளர் ஸோபா ஜெயரஞ்சித், வாழைச்சேனை, கோறளைப்பற்றுப் பிரதேச சபையின் ஊழியர்களும் கலந்து கொண்டனர். (ற-ரி5)

# மின்சாரசபை ஊழியர் சேவைப் புறக்கணிப்பு

கொழும்பு, மே 10

மின் பிறப்பாக்கத் திட்டம் தொடர்பான தமது கோரிக்கைகளுக்கு தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரி, நாடளாவிய ரீதியில் மின்சார சபை பொறியியலாளர்கள் சங்கம் நேற்று சேவைப்புறக்கணிப்புப் போராட்டத்தை மேற்கொண்டது.

உரிய நேரத்தில் மாத்திரம் சேவையாற்றுதல், திடீர் அழைப்புகளுக்கு ஏற்ப சேவைக்கு வருகை தராமை மற்றும் உரிய பாதுகாப்பு நடவடிக்கையின்றி சேவையாற்றுவதில் இருந்து விலகுதல் ஆகிய விடயங்களை உள்ளடக்கி சேவைப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

அத்தியாவசிய சேவைகள் இடையூறின்றி முன்னெடுக்கப்படுவதாகவும் தமது கோரிக்கைகளுக்கு தீர்வைப் பெற்றுத் தரும்வரை தொடர்ச் சியாகச் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளோம் எனவும் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளோர் தெரிவித்தனர்.

இந்த கோரிக்கைகள் எமக்காக முன்வைக்கப்பட்டவை அல்ல. இது மக்களுக்காக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (ற-ரி5)

# சக்திவேலுக்கு பிணை

ஹற்றன்.மே 10

இ.தொ.காவின் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஏ.பி.சக்திவேலை 5 ஆயிரம் ரூபா ரொக்க பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது.

மத்திய மாகாண சபை உறுப்பினர் ஏ.பி சக்திவேலுக்கு எதிராக ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தில் ஹற்றன் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்குகள் மூன்றுக்கு முன்னிலையாகாததால் இவருக்கு எதிராக நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது.

இவர் நேற்றுச் நீதிமன்றத்தில் முன்னிலையானபோது பிணை அனு மதி வழங்கப்பட்டது. ஹற்றன் நகரில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் இவருக்கு எதிராக பிடியாணை பிறப்பித்திருந்தது. (ற-ரி5)

# கூட்டு எதிரணி வேட்பாளரே அடுத்த அரச தலைவராவார்

## அடித்துக் கூறுகின்றார் பிரசன்ன

யார் என்ன கூறினாலும் கூட்டு எதிரணி தலைமையிலான கட்சிகள் நிறுத்தும் வேட்பாளரேநாட்டின் அடுத்த அரசதலைவராகத் தெரிவு செய்யப்படுவார்.

இவ்வாறு கூட்டு எதிரணியின் ஒருங்கிணைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினரும் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்ச தலைமை தாங்கும் கூட்டு எதிர்க்கட்சி தலைமையிலான அணிக்கு நாட்டு மக்களின் 60 வீதமான வாக்கு வங்கி உள்ளது.

நாட்டில் நடைபெற்ற மே தினக் கூட்டங்களில் வெற்றிகரமான மிகப் பெரிய மே தினக் கூட்டத்தை நடத்திய பெருமை கூட்டு எதிர்க்கட்சிக்கு கிடைத்துள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் கிருலப்பனை, காலிமுகத்திடல் மற்றும் காலியில் நடைபெற்ற மே தினக் கூட்டங்கள் அதற்குச் சாட்சியாக இருக்கின்றன.

கடந்த வருடம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டம் காலியில் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் வந்த மக்களை விட இந்த முறை கூட்டு எதிர்க்கட்சியின் கூட்டத்துக்கு வந்தனர். கூட்டு எதிர்க் கட்சி அரசை ஆட்டிப் படைக்கும் சக்தியாக மாறியுள்ளது. அரசை விட எமக்கு மக்களின் ஆதரவு இருக்கின்றது என்பதை நாங்கள் கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் மூலம் உலகுக்குக் காட்டியுள்ளோம்

அரசுக்கு எதிராக நாடு முழுவதும் நடத்திய கூட்டங்களில் நாங்கள் எமது பலத்தைக் காட்டினோம். தற்போது நாட்டை ஆட்சி செய்யும் அரசு மக்களின் ஆதரவில்லாத அரசு. கூட்டு எதிர்க்கட்சியின் மக்கள் பலம் அரச தலைவரை மட்டக்களப்பு நோக்கித் தள்ளியது.

தலைமை அமைச்சர் தலைமையிலான கட்சியை உள்ளக விளையாட்டு அரங்கத்தை நோக்கித் தள்ளியுள்ளது.

அரசில் அங்கம் வகிக்கும் இரண்டு பிரதான கட்சிகள் தமது மே தினக் கூட்டங்களை கூட நடத்திக்கொள்ள முடியா தளவில் பலவீனமடைந்துள்ளன.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் பொதுச் செயலாளர்கள் செய்த புண்ணியம் காரணமாக வரலாற்றில் முதல் முறையாக இந்தமுறை சுதந்திரக்கட்சியின் மே தினக் கூட்டத்தில் தொழிற்சங்கங்கள் கலந்துக்கொள்ளவில்லை - என்றார். (ற)

# கேரளக் கஞ்சாவுடன் இளைஞன் கைது

திருகோணமலை,மே.10

திருகோணமலை, சீனன்குடா, பகுதியில் கேரளக் கஞ்சா வைத்திருந்த இளைஞர் ஒருவரை சீனன் குடாப் பொலிஸார் கைது செய்தனர்.

சீனன்குடா, சமன்புர பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய இளைஞர் ஒருவரே கைதானவராவார்.

சந்தேக நபரிடமிருந்து, ஒருகிராம் கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

வேறு ஒருவருக்கு கஞ்சா வழங்குவதற்காக காத்துக்கொண்டிருந்தபோதே, சந்தேக நபரைக் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற-ரி2)

# சட்டவிரோத மணல் ஏற்றிய இருவர் கைது

மட்டக்களப்பு, மே10

வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாகனேரி, புலிபாய்ந்தகல் ஆகிய பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச்சென்ற இரண்டு சந்தேக நபர்களை நேற்றுமுன்தினம் வாழைச்சேனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சட்டவிரோதமாக மணல் ஏற்றப் பயன்படுத்திய இரண்டு உழவு இயந்திரங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் பொண்டுகள்சேனை, வாகனேரி, ஆத்துச்சேனை புலிபாய்ந்தகல் போன்ற பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றுவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்தச் சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைவாழைச் சேனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# மகிந்தானந்தவின் வழக்கு ஜூன் 26க்கு

கொழும்பு, மே10

சட்டவிரோதமான முறையில் சம்பாதித்த 27 மில்லியன் ரூபாவைப் பயன்படுத்தி கொழும்பு, கிங்சி வீதியில் வீடொன்றை கொள்வனவு செய்தார் என்ற குற்றச்சாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 26ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் துசித் முதலிகேவின் நெறிப்படுத்தலின் கீழ் இந்த விசாரணைகள் நடைபெறுகின்றன. குற்றம் சுமத்தப்பட்டுள்ள மகிந்தானந்த அளுத்கமகேயின் சாரதியாகப் பணிப்புரிந்த வசந்த ராஜபக்ச என்பவரிடம் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மகிந்தானந்த அளுத்கமகே, பணச் சலவை சட்டத்தின் கீழ் குற்றமிழைத்துள்ளார் என கூறி சட்டமா அதிபர் இந்த வழக்கை தொடர்ந்துள்ளார். (ற-ரி5)



# பசிலின் மனு மீதான வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, மே10

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க விசாரிப்பதற்கு தடை விதிக்க கோரிய மனுவை எதிர்வரும் 18ஆம் திகதி வரை பிற்போடுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேன்முறையீட்டு நீதிபதிகளான ப்ரீதி பத்மன் சுரசேன மற்றும் அர்ஜுன ஒபேசேகர முன்னிலையில் நேற்று இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அண்மையில் சீல் துணி விவகாரம் தொடர்பான வழக்கில் தீர்ப்பளித்த மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க, கடந்த ஆட்சிக் காலத்தின் போது, அரச அதிகாரிகளின் அழுத்தங்களுக்கு மத்தியில் செயற்பட்டு வந்தார் என்று நீதிமன்ற த்தில் கருத்து வெளியிட்டார் எனவும் இது போன்ற கருத்துக்களை கூறும் நீதிபதியி டம் நியாயத்தை எதிர்பார்க்க முடியாது எனவும் தனது மனுவில் பசில் ராஜபக்ச சுட்டிக்காட்டியுள்ளார்.

தனக்கு எதிரான வழக்கை பிறிதொரு நீதிபதியிடம் மாற்ற உத்தரவிடுமாறும், மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

கடந்த அரசதலைவர் தேர்தல் காலத்தில் திவிநெகும திணைக்களத்துக்குச் சொந்தமான, நிதியைப் பயன்படுத்தி, மகிந்த ராஜபக்சவின் உருவத்துடனான சுமார் 50 இலட்சம் பஞ்சாங்கங்களை அச்சிட்டார் என பசிலுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ற-ரி5)

# கங்கையில் மூழ்கிய இளைஞர் மாயம்

கொழும்பு, மே 10

கிங் கங்கையில் மூழ்கி இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார். இந்தச் சம்வம் நேற்று நடந்தது.

மீமுரே பிரதேசத்துக்கு பலகொல்லப் பகுதியில் இருந்து சுற்றுலா வந்த குழு ஒன்று கிங் கங்கையில் நீராடிக்கொண்டிருந்த போது அதில் ஒருவர் நீரில் மூழ்கியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பலகொல்ல, தும்பர உயன பகுதியை சேர்ந்த 18 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு நீரில் மூழ்கி காணாமற் போயுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பிரதேசவாசிகள் ஒன்றிணைந்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (ற-ரி5)



## துன்னாலையில் கைக்குண்டு கண்டெடுப்பு

துன்னாலை.மே.10
துன்னாலை கிழக்குப் பகுதியில் கைக்குண்டு ஒன்று நேற்றுக் கண்டெடுக்கப்பட்டது.
பழைய வளவு ஒன்றில் விறகு எடுக்கச் சென்ற ஒருவரே கைக்குண்டு கிடப்பதைக் கண்டுள்ளார்.
இதனையடுத்து பருத்தித்துறை .பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு, கைக்குண்டு மீட்கப்பட்டது. இது பழைய காலத்துக் கைக்குண்டாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. மேலதிக விசாரணைகளைப் பருத்தித்துறைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர. (ற.ரி2,26)

## மகாநாம மற்றும் திஸாநாயக்க தொடர்ந்தும் விளக்கமறியலில்

கொழும்பு.மே.10
கையூட்டுப்பெற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அரசலைவர் அலுவலகத்தின் உயரதிகாரியும் மற்றும் அரச மரக்கூட்டுத் தாபனத்தின் தலைவரும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களை எதிர்வரும் 22 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.
அரச தலைவர் அலுவலகத்தைச் சேர்ந்த கலாநிதி மகாநாம, அரச மரக்கூட்டுத் தாபனத் தலைவர் பி. திஸாநாயக்க ஆகியோரே கடந்த 3 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.
கந்தளாய் சீனித் தொழிற்சாலைக் காணியின் பெயர் மாற்ற நடவடிக்கையை விரைவில் முடிப்பதாகக்கூறி 30 மில்லியன் ரூபா இந்தியர் ஒருவருடன் பேரம் பேசப்பட்டது.
அதன்படி முதற்கட்டமாக 2 கோடி ரூபா கையூட்டு அவர்கள் பெற்றுள்ளனர். இக்குற்றச்சாட்டுத் தொடர்பிலேயே இருவரும் கைதானார்கள். (ற.ரி2)

# சிகரெட் உற்பத்தியில் வீழ்ச்சி

### மருத்துவர் பாலித அபேகோன் தெரிவிப்பு

**கொழும்பு,மே.10**
**நாட்டில் சிகரெட் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சிகரெட் உற்பத்தியில் 600 மில்லியன் வீழ்ச்சி கடந்த ஆண்டில் ஏற்பட்டுள்ளதாக புகையிலைமற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் தலைவர் மருத்துவர் பாலித அபேகோன் தெரிவித்துள்ளார்.**

2016 ஆம் ஆண்டில் சிகரெட் உற்பத்தி 4300 மில்லியனாகக் காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் 3700 மில்லியனாகக் காணப்பட்ட சிகரெட் உற்பத்தி தற்போது. வீழ்ச்சியடைந்துள்ளதாக புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் பாலித அபேகோன் குறிப்பிட்டுள்ளார். புகைபிடித்தலைக் குறைப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் கடந்த வருடங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதுவே இந்த வீழ்ச்சியில் தாக்கம் செலுத்துவதாக புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் மேலும் தெரிவித்தார். (ற.ரி2)

## மயக்கமடைந்தவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு.மே.10
மயக்கமடைந்த நிலையில் சேர்க்கப்பட்ட குடும்பத்தலைவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.
இந்த சம்பவம் மட்டக்களப்பு நகரில் இடம்பெற்றது.
கல்குடா, காளிகோயில் வீதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான தாமோதரம் ஞானசுந்தரம் (வயது-43) என்பவரே சாவடைந்தவராவார்.
வழமைபோன்று வீட்டிலிருந்தவர் நேற்று முன்தினம் திடீரென மயக்கமுற்றுள்ளார். உடனடியாக வாழைச்சேனை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார்.
உயிரிழந்தவர் தனது சட்டபூர்வமான மனைவியைப் பிரிந்து, இன்னொரு பெண்ணுடன் வாழ்க்கை நடத்தி வந்த அவர் கடன் வழங்கு நிறுவனங்களிடமிருந்து பெற்று வந்த கடன் தொல்லையால் மன விரக்தியுற்றிருந்ததாகவும், இதனால் இரு குடும்பங்களுக்குமிடையில் தகராறு நிலவிவந்ததாகவும் உறவினர்கள் தெரிவித்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற.ரி2,46)

### தகாது நடக்க முயற்சித்த குற்றச்சாட்டில் கைதான

## தொடருந்து உத்தியோகத்தர் பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், மே 10
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் பயணித்த தொடருந்தில் பெண் ஒருவருடன் தகாத முறையில் நடந்துகொண்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தொடருந்து உத்தியோகத்தர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தொடருந்தில் தமிழ்க் குடும்பப் பெண் ஒருவர் வவுனியா தொடருந்து நிலையத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்தார். தொடருந்தில் மக்கள் கூட்டம் அதிகமில்லாத நிலையில் சிட்டை பரிசோதிக்கும் ஊழியர் ஒருவர் அந்தப் பெண்ணுடன் தகாது நடக்க முயற்சித்தார் என்று கூறப்படுகின்றது.
அதை அவதானித்த ஏனையோர் அந்த ஊழியரிடம் அது தொடர்பில் கேள்வியெழுப்பினர். ஊழியர் அவர்களைத் தாக்க முயற்சித்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
தமிழர்களை அவர் கீழ்த்தரமான வார்த்தைகளால் திட்டியதுடன், நீங்கள் தமிழ் என்றால் என்னை ஒன்றும் செய்ய முடியாது. பொலிஸாராலும் என்னை ஒன்றும் செய்ய முடியாது. இங்கு நான்தான் பெரியவன் என்று அவர் மிரட்டியுள்ளார். சம்பவ இடத்தில் இருந்த ஊடகவியலாளர் ஒருவரையும் மிரட்டியுள்ளார்.
தொடருந்து யாழ்ப்பாணம் தொடருந்து நிலையத்தை அடைந்ததும் இந்தச் சம்பவம் தொடர்பில் தொடருந்து நிலைய அதிபரிடம் பெண் முறையிட்டார்.
ஆதாரமாகக் காணொலியும் வழங்கப்பட்டது.
சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று கூறப்படும் ஊழியரைக் கைது செய்த பொலிஸார் அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டனர். சந்தேகநபரை நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் முற்படுத்தினர். சந்தேநபரைப் பிணையில் செல்ல அனுமதிப்பதற்குப் பொலிஸார் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. சந்தேகநபரை நிபந்தனையுடனான பிணையில் செல்ல நீதிவான் சின்னத்துரை சதீஸ்கரன் உத்தரவிட்டார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக் குழுவிடமும் முறையிடப்பட்டுள்ளது. (ற-37)

### ஸ்ரீதர் கட்டடத்தை கையளிக்கக் கோரும்

## டக்ளஸுக்கு எதிரான மனு ஜூன் 6 அன்று விசாரணை

யாழ்ப்பாணம், மே 10
யாழ்ப்பாணம் நகரில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகம் இயங்கும் ஸ்ரீதர் கட்டடத்தின் உரித்தை மீளப்பெற்றுத்தரவேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதி விசாரணைக்குஎடுக்கப்படவுள்ளது.
இரட்ணசபாபதி ஸ்ரீதர் உட்பட 6 பேர் மனுதாரர்களாகவும், ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவை எதிர்மனுதாரராகவும் குறிப்பிட்டு சட்டத்தரணி கேசவன் சயந்தனால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது.
1996 ஆம் ஆண்டு நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலையைப் பயன்படுத்தி அனுமதி எதுவுமின்றிச் சட்டவிரோதமாகக் குடியேறிய முதலாவது மனுதாரர் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக வாடகை ஏதும் வழங்காது ஆதனத்தையும், கட்டடத்தையும் வைத்துள்ளார். அதனால் உரிமையாளர்களான எமக்கு மாதம் ஒன்றுக்கு 75 ஆயிரம் ரூபா வீதம் ஏற்பட்ட இழப்பும் அதற்குரிய வட்டியையும் இணைந்து இதுவரை காலத்துக்குமான இழப்பீடாக 100 மில்லியன் ரூபாவை எதிர்மனுதாரர் வழங்க வேண்டும். தற்போது இடம்பெறும் வழக்குச் செலவுடன் கட்டடத்துடன் கூடிய ஆதனத்தின் உரித்தையும் பெற்றுத் தர வேண்டும் என்று மனுதாரர்கள் கோரியுள்ளனர்.
இந்த மனுவை எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதி அழைக்குமாறு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீபதிப வி. இராமகமலன் அனுமதித்தார். (ற-37)

## ஹெரோயினுடன் ஒருவர் கைது

கொழும்பு.மே.10
ஒருதொகை ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
வெல்லம்பிட்டியவில், லங்சியாவத்தைப் பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.
வெல்லம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டார்.
பொலிஸ் போதைத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேகநபரிடமிருந்து 604 கிராம் 920 மில்லி கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் 53 ஆயிரத்து. 780 ரூபா பணமும் கைப்பற்றப்பட்டது.
பொலிஸ் போதைத்தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற.ரி2)

## ஈ.பி.ஆர்.எல்.எவ். பொறுப்பாளர் மீது வவுனியாவில் தாக்குதல்!

வவுனியா. மே 10
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வவுனியா மாவட்டப்பொறுப்பாளர் க. பரமேஸ்வரன் மீது தாக்குதலுக்கு இலக்கான நிலையில் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வீடு திரும்பினார் என்று தெரிவிக்கப்பட்டது.
பரமேஸ்வரனை நேற்றுமுன்தினம் மாலை இருவர் தொலைபேசியில் அழைத்தனர் என்றும், மக்கள் தேவைகளைப் பற்றிப் பேசுவதற்கு அழைக்கின்றார்கள் என்று நினைத்து அவர் சென்றபோது அவரைக் கண்மூடித்தனமாகத் தாக்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த பரமேஸ்வரனை அந்தப்பகுதி மக்கள் மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர்.
தாக்கியவர்களை பரமேஸ்வரன் இனங்காட்டியுள்ளார் என்றும் வவுனியா பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-110)

## அதிகாரிகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

இரத்தினபுரி.மே.10
இரத்தினபுரி கலவானை தமிழ் வித்தியாலய பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் சிலர் நேற்றுக் காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
பாடசாலைக்குப் போதிய ஆசிரியர்களை அனுப்புவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இரத்தினபுரி கலவானை பிரதான வீதியில் தேதுரு கந்தைப் பகுதியை மறித்து இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. (ற.ரி2)

## வீடுடைத்து திருடிய மூவர் கைது

திருகோணமலை.மே.10
திருகோணமலை, நிலாவெளிப் பகுதியில் வீடொன்றை உடைத்து பணம் மற்றும் நகைகளைத் திருடிய மூவர் கைது செய்யப்பட்டனர்.
நிலாவெளி, இக்பால் நகர் மற்றும் ஆக்குளம் பகுதியைச் சேர்ந்த 25, 23, மற்றும் 24 வயதுடைய மூவரே கைது செய்யப்பட்டதாக நிலாவெளிப் பொலிஸார் தெரிவித்தனர்.
வீட்டில், யாருமில்லாத நேரத்தை அவதானித்து குறித்த வீட்டை உடைத்து இரண்டுபவுண் தங்கநகை மற்றும் ஒரு இலட்சம் ரூபா பணமும் திருடப்பட்டது என்று முறைப்பாடு செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இதனையடுத்தே சந்தேகநபர்கள் கைதானதாகவும் மேலதிக விசாரணைகளைத் தாம் முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ற.ரி2,40)

மாணவனைத் தாக்கிய குற்றச்சாட்டில் கைதான

## ஆசிரியருக்கு பிணை

சாவகச்சேரி, மே 10
14வயதுமாணவனைத்தாக்கியகுற்றச்சாட்டில் கைதாகிய தமிழ்ப்பாட ஆசிரியரைப் பிணையில் செல்ல அனுமதித்தது நீதிமன்று.
இந்தச்சம்பவம்நேற்றுதென்மராட்சி தெற்கில் உள்ள பாடசாலையொன்றில் இடம்பெற்றுள்ளது.
நேற்றுப்பாடசாலையில்வகுப்புநடைபெற்றுக்கொண்டிருந்தவேளையில் ஆசிரியரை மாணவன் ஏசியதால் ஆசிரியர் மோசமாகத் தாக்கினார் என சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார் ஆசிரியரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.
வழக்கை விசாரித்த நீதிவான் ஆசிரியரை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்ல அனுமதித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# மிருசுவில் பேருந்து சேவையை எழுதுமட்டுவாழ்வரை நீடிக்கவும்


பாடசாலைச் சமூகம் கோரிக்கை

தென்மராட்சி, மே 10
**யாழ்ப்பாணத்திலிருந்து மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்ட துர்க்கை அம்பாள் ஆலயம்வரை தினமும் நடத்தப்படும் பேருந்து சேவையை அங்கிருந்து சுமார் ஒன்றரைக்கிலோமீற்றர் தூரத்தில் உள்ள எழுதுமட்டுவாழ் வடக்கு அ.த.க.பாடசாலை வரை நீடிக்குமாறு பாடசாலையின் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் இ.போ.சவின் யாழ்ப்பாண சாலை முகாமையாளரைக் கோரியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.**

தினமும் யாழ்ப்பாணத்திலிருந்து மிருசுவில்துர்க்கைஅம்பாள்ஆலயம்வரை இ.போ.ச.பேருந்து சேவைகள் நடத்தப்படுகிறன.
இந்தப் பேருந்தில் பயணிக்கும் எழுதுமட்டுவாழ் வடக்கு அ.த.க. பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் ஆலயத்துக்கு முன்பாக இறங்கி ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பாடசாலைக்கு நடந்து செல்கின்றனர்.
பாடசாலைமுடிந்துவரும்போதும் நடந்துவந்து பேருந்தில் பயணிக்கவேண்டியுள்ளது.
எனவே துர்க்கை அம்பாள் ஆலயம்வரை காலையிலும் பிற்பகலிலும், இடம்பெறும் பேருந்து சேவையை பாடசாலை வரை நடத்துங்கள் என்று அவர்கள் கோரியுள்ளனர்என்றும்தெரிவிக்கப்பட்டது. (4-9)

## பகவத்கீதை விளக்கவுரை

யாழ்ப்பாணம், மே 10
யாழ்ப்பாணத்தில் வியாழக்கிழமைகளில், ஸ்ரீமத் பகவத்கீதை விளக்கவுரை நல்லூரிலுள்ள சின்மயா மிஷனில் மாலை 5 மணி முதல் 6 மணிவரை நடைபெறுகின்றது.
இதில் இன்று வியாழக்கிழமை 'வணங்கப்பட வேண்டிய வர்களை எதிர்க்கலாமா' என்ற தலைப்பில் விரிவுரை இடம்பெறவுள்ளது.
ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-8)



மாவிட்டபுரம் வீணிய வரை அம்மன் ஆலயத்துக்குப் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. தேருக்கான கலசம் அணிவிக்கும் நிகழ்வில் நாடாளு மன்ற உறுப்பினர் இ.அங்கஜனின் பிரத்தியேகச்செயலாளரும் கரவெட்டிபிரதேச சபை உறுப்பினருமான ச. இராமநாதன் கலந்து கொண்டார்.

## அடுத்தடுத்து விபத்துகளை ஏற்படுத்திய சாரதி வாகனத்தைவிட்டு தப்பியோட்டம்

அதில் தறித்த வேப்பங்குற்றிகள்




யாழ்ப்பாணம், மே 10
சட்டவிரோதமாகத்தறித்த வேம்புமரத்தை வாகனத்தில் ஏற்றிச் சென்றவர் கல்வியங்காடு, பரமேஸ்வராச் சந்தி ஆகிய இடங்களில் இரண்டு மோட்டார் சைக்கிள்களை முட்டிமோதியதால்வாகனத்தைக்கைவிட்டுத்தப்பியோடினார்.
சம்பவம் நேற்று இடம்பெற்றது.
யாழ்ப்பாணம், கல்வியங்காடு பகுதியூடாகப் பயணித்த வேளையில் பருத்தித்துறை வீதியில் மோட்டார் சைக்கிளைமோதியநிலையில்நிறுத்தாமல்சென்றமகேந்திரா வாகனத்தை சில இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் விரட்டியுள்ளனர். வாகன சாரதி வாகனத்தை நிறுத்தாது வேகமாகச்செலுத்திநெல்வேலி சிவன் அம்மன்வீதியூடாகப் பயணித்து பலாலி வீதியை அடைந்துள்ளார்.
பலாலிவீதியில்மோட்டார்சைக்கிளில்பயணித்தகல்வித் திணைக்கள அதிகாரியை வாகனம் மோதித் தள்ளிய வாறுதப்பியோடமுயன்றசமயம் அதிகாரிவாகனத்தை மடக்க முயன்றுள்ளார். இதனால் வாகனத்தின் சாரதி வாகனத்தைக் கைவிட்டுக் குதித்துத் தப்பியோடினார்.
பொலிஸாருக்குத்தகவல்வழங்கப்பட்டது. வாகனத்தைச் சோதனையிட்ட பொலிஸார் உடன் தறித்து ஏற்றிய வேம்புமரம் இருப்பதனால் அனுமதியற்றமரமாக இருக்கலாம்என்றசந்தேகத்தின் அடிப்படையில்வாகனத்தைப் பொலிஸ்நிலையத்துக்கு எடுத்துச்சென்றனர். (4-105)

## யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் கழிவு சேகரிக்கும் பெட்டிகள்

யாழ்ப்பாணம், மே 10
யாழ்ப்பாணமாநகரபிரதேசத்தில்திண்மக்கழிவுப்பொருள்களைச்சேகரிக்கும் பெட்டிகள்பரவலாக வைக்கப்பட்டுவருகின்றன.
முதன்மைச் சந்திகள், வீதிகள், பொது இடங்கள் போன்றவற்றில் கழிவுகள் சேகரிக்கும் பெட்டிகள் வைக்கப்பட்டு வருகின்றன என்று மாநகர கழிவகற்றும் பிரிவினர் தெரிவித்தனர்.
உக்கும், உக்காத கண்ணாடி போன்ற கழிவுப் பொருள்களைச் சேகரிக்கக் கூடிய வகையில் இந்தப் பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.
திண்மக் கழிவகற்றும் திட்டத்தில், கழிவுகள்சேகரிக்கும்பெட்டிகள்பாடசாலைகள், அரசநிறுவனங்கள்போன்றவற்றிலும்வைக்கப்பட்டுவருகின்றன. (எ-17)

## தேர்க் குதிரைகளைத் திருடும் முயற்சி தோற்றதும் ஓட்டம்


வலி.தென்மேற்கு, மே 10
சித்திரத் தேரில் பொருத்தப்பட்டிருந்த குதிரைகளை எடுத்துச் செல்ல முற்பட்ட திருடர்கள், காரியம் கூடாமையால் தேரிலிருந்து கழற்றிய குதிரைகளை அந்த இடத்தில் விட்டுவிட்டு சைக்கிளில்ஏறித்தப்பிச்சென்றுவிட்டனர். திருடர்களின்நடமாட்டம்சி.சி.ரி.வி கமராவில் பதியப்பட்டிருப்பதைத் தொடர்ந்துதிருடர்களைத்தேடிக்கண்டுபிடிப்பதில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். இந்தத் துணிகரமான சம்பவம் சுழந்தவாரம்கட்டுடைஅரசடிப்பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது.
இதுதொடர்பில்மேலும்தெரியவருவதாவது:
வயல்வெளியில் அமைந்துள்ள பழமை வாய்ந்த கட்டுடை அரசடிப் பிள்ளையார் ஆலயத்திலுள்ள சித்திரத்தேரின் முன்புறமாக பல இலட்சம் ரூபா பெறுமதியான 3 குதிரைகள் பொருத்தப்பட்டிருந்தன. இந்தத் தேரில் பொருத்தப்பட்டிருந்த குதிரைகளைத்திருடிச்செல்லும் நோக்குடன் மேற்படிஆலயத்துக்குச்சம்பவதினம் மாலை 6 மணியளவில் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் சைக்கிளை தேர்முட்டியில் மறைத்து வைத்து விட்டு தேர்க் கொட்டகைக் கதவை உடைத்து உள்ளே சென்று குதிரைகளைக் கழற்றுவதில் ஈடுபட்டிருந்தனர்.
ஒரு குதிரையைக் கழற்றிக் கீழே வைத்த திருடர், மற்றைய குதிரையைக் கழற்ற முற்பட்டபோது கொட்டகைக்குள் கேட்ட சத்தத்தில் சந்தேகம் கொண்ட ஆலயக் குருக்கள் அந்த இடத்துக்குச் சென்றதும் காரியம் கைகூடாத திருடர் கொட்டகைக்குள் ளிருந்துவெளியேறிசைக்கிளில்ஏறித் தப்பிச் சென்றுள்ளனர். இந்தத் திருட்டுத்தொடர்பில்மானிப்பாய்பொலிஸில் முறைப்பாடு செய்தமையைத் தொடர்ந்து, அங்கு பொருத்தப்பட்டிருந்தசி.சி.ரி.வி கமராவில்திருடர்பற்றியவிவரம்பதியப்பட்டிருந்தமையால் திருடரைத் தேடிக் கண்டு பிடிப்பதில் பொலிஸார்ஈடுபட்டுள்ளனர். (எ-115)

## புத்தாண்டு விழா ஹாட்லியில் இன்று

பருத்தித்துறை, மே 10
பருத்தித்துறைகல்விக் கோட்டம், கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்தும் தமிழ் சிங்கள புத்தாண்டுவிழாபருத்தித்துறைஹாட்லிக் கல்லூரியில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.
பருத்தித்துறைக்கோட்டக்கல்விஅதிகாரி மா.நவநீதமணி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகப் பருத்தித்துறை நகர சபை தவிசாளர் ஜோசப் இருதயராஜா, வடமராட்சிவலயக்கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார், பருத்தித்துறைஹாட்லிக் கல்லூரி அதிபர் த.முகுந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (422)

## தனியார் காணிகளில் நடப்பட்ட மின்கம்பங்களால் தெரு விளக்குகள் பொருத்த முடியாத நிலை

தென்மராட்சி, மே 10
எழுதுமட்டுவாழ்சந்தியின்கிழக்கு மற்றும் மேற்குப் புறங்களில் தனியார் காணிகளில் மின்கம்பங்கள் நடப்பட்டுள்ளதால் தெரு விளக்குகள் பொருத்த முடியாத நிலை பிரதேச சபைக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் தெருவிளக்கின்றி அந்தப் பகுதி மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. மின்கம்பங்கள்பொருத்தப்பட்ட வேளையில் முதன்மைச் சாலைசீரமைப்புப்பணிகள் நடைபெற்றதனால் உயர் அழுத்த மின்கம்பங் கள் சாலையோரத்தில் நடப்படாமல் அருகில் உள்ள தனியார் காணிகளில் நட்டு மின்னிணைப்புவழங்கப்பட்டது.
தற்போது பிரதேச சபையால் மக்கள் பங்களிப்புடனான ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்ட வேலைகளில் தெரு விளக்குத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ள நிலையில் தனியார் காணிகளில் உள்ள மின்கம்பங்களில் தெருவிளக்குப்பொருத்தமுடியாத நிலைகாணப்படுகிறது.
முதன்மைச் சாலையில் பயணித்து எழுதுமட்டுவாழ் சந்தியில் இறங்கும் மக்கள் இருளில் அச்சத்துடன் தமது வீடுகளுக்குச் செல்ல வேண்டியுள்ளதெனவும்தெரிவிக்கப்பட்டது.
இந்த நிலையில் அண்மையில் இதேபகுதியில்சைக்கிளில்சென்ற பெண்ணின் தங்க நகைகளைப் பறிக்கமுயன்ற சம்பவமும் இடம்பெற்றது. எனவே இவ்வாறான செயல்கள் தொடராமல் இருக்க தனியார் காணிகளில் பொருத்தப்பட்டுள்ளமின்கம்பங்களைமுதன்மைச் சாலையோரத்துடன் நட்டு தெருவிளக்குகளைப் பொருத்த வேண்டுமெனவும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இதேவேளை எழுதுமட்டுவாழ் சந்தியிலிருந்து நாகர் கோவில் சாலையில் சபையால் ஏற்கனவே பொருத்தப்பட்டிருந்த தெரு விளக்குகள் இரண்டு வருடங்களுக்கு முன்னரே பழுதடைந்துள்ளதால் புதிய தெருவிளக்குகளை இந்தச் சாலையில் பொருத்துமாறும் கேட்டுள்ளனர். (9)



## அஞ்சல் மாதத்தையொட்டிய முத்திரைக் கண்காட்சி

சாவகச்சேரி, மே10
அஞ்சல் மாதத்தையொட்டி சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தினர் சாவகச்சேரி அஞ்சலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் முத்திரை தொடர்பான கண்காட்சியை நடத்திமாணவர்களுக்குமுத்திரைப்பயன்பாடு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர். சாவகச்சேரி இந்துக் கல்லாரியின் கற்றல் வள நிலையத்தில் நேற்று முத்திரைக் கண்காட்சியை நடத்தினர்.

சாவகச்சேரி அஞ்சல் அதிபர் லம்பேர்ட் இன்பராஜ் தலைமையில் நடைபெற்ற கண்காட்சியை கல்லூரிஅதிபர்ந. சர்வேஸ்வரன்திறந்து வைத்தார்.

பெருமளவு மாணவர்கள் முத்திரைகளைப் பார்வையிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. கடந்த வாரம் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் முத்திரைக் கண்காட்சி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ-9)

# வெற்றி தோல்வியை சமமாக மதிக்கும் மனப்பாங்கு போட்டிகளால் உருவாகும்

*சரவணபவன் எம்.பி எடுத்துரைப்பு*

**யாழ்ப்பாணம்,மே 10**
**வெற்றி வேண்டுமென்றால் எதிர்நீச்சல் போட வேண்டும். வெற்றியும் தோல்வியும் ஒரு வீரனின் மனப்பாங்கை மாற்றியமைக்கக் கூடியன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.**





சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றத்தின்பாரம்பரியவிளையாட்டுப்போட்டி அண்மையில் இடம்பெற்றது. அதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
பலவருடங்களாக இந்த நிகழ்வுக்கு நான் சமூகமளித்து வருகின்றேன். உங்களின் ஒற்றுமை போட்டித் திறன் என்பன மென்மேலும் மிளிர்ந்து வருவதாகக் காண்பதில்மகிழ்ச்சியடைகின்றேன். தேசியமட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்ற, உங்கள் கலை, கலாசாரப் பாரம்பரியங்களை மேலும் வளர்த்துக் கொள்ள இவ்வாறான போட்டிகள் வழிவகுக்கும்.

சிங்கள, முஸ்லிம், கிறிஸ்தவர்களுக்கென கலைகலாசாரப் பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. எமது சமயத்துக்கென இவ்வாறானதொன்று இல்லை. இதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் தொடர்பு கொண்டுநடவடிக்கை எடுக்கவுள்ளேன்-என்றார்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரின் பாரியாரும், வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர், சபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கயிறு இழுத்தல், சங்கீதக் கதிரை மற்றும் விநோத உடைப் போட்டிகள்எனபலபாரம்பரியவிளையாட்டுக்கள் இடம்பெற்றன. போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை விருந்தி னர்கள்வழங்கிக்கௌரவித்தனர். (எ-29)

## அரிசியிலான மிக்சர் தயாரிப்பு பயிற்சி நெறி

பருத்தித்துறை, மே10
சுயதொழில்முயற்சியாளர்களைஉருவாக்கும் நோக்கில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் விதாதா வள நிலையத்தால் நாளைமற்றும்14ஆம்திகதிபுலோலிவடக்கு மாதர் சங்க மண்டபத்தில் (கிராம அலுவலகத்துக்கு அருகில்) காலை 9 மணிக்கு அரிசியிலானமிக்சர்தயாரிப்புக்கானபயிற்சிநடத்தப்படவுள்ளது. இந்தப் பயிற்சி நெறியில் கலந்துகொள்ளபருத்தித்துறைபிரதேசசெயலகத்தில்பதிவுகளைமேற்கொண்டஅனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்துள்ளார். (எ)

# கறிமுருங்கைச் செய்கை யாழ்ப்பாணத்தில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே10
யாழ்ப்பாணக் குடாநாட்டில் விவசாயிகள் மேற்கொண்ட கறிமுருங்கைச்செய்கைமூலம்அதிகவிளைச்சல்கிடைத்துள்ளது. தற்போதைய கடுமையான வறட்சி, வெப்ப நிலை போன்ற கால நிலைக்குஏற்றவாறுகறிமுருங்கைகள்அதிகளவில்காய்த்துள்ளன என்று விவசாய திணைக்களம் தெரிவித்தது.

குடாநாட்டில்பல்வேறுஇடங்களிலும்பரவலாகசெய்கையாளர்கள் இந்தச்செய்கையில்ஈடுபட்டுள்ளனர். தற்போது அவை அறுவடை செய்யப்படுகின்றன. சந்தைகளுக்கு அவை தாராளமாக வந்து சேர்கின்றன. இதேசமயம்வன்னிப்பிரதேசத்தில்இருந்தும்பெருமளவு கறிமுருங்கைக் காய்கள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படுகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-17)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே10
யாழ்ப்பாண மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர்கள் நம்பிக்கை நிதியத்தின் ஒன்பதாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் பொ. கமலநாதன் தலைமையில் யாழ்ப்பாண செயலக மகாநாட்டுமண்டபத்தில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் என்று நிதியத்தின்செயலாளர் க. கதிரமலை தெரிவித்துள்ளார். (எ)




யாழ்ப்பாண மாவட்ட பார ஊர்தி கூட்டுறவுச் சங்கத்தால், நல்லூரிலுள்ள கருவி மாற்றுத்திறனாளிகளின்சமூகவளநிலைய அலுவலகப்பாவனைக்காகமூன்று உலோக அலுமாரிகள் நன்கொடையாக நேற்றுமுன் தினம் வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் பார ஊர்திச் சங்கத்தின் தலைவர், செயலாளர் உட்படப்பல அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். (எ)

## கச்சாயில் 700 மீற்றர் நீளமான வீதியைச் சீரமைக்கக் கோரிக்கை



யாழ்ப்பாணம், மே10
மீசாலை அல்லாரை வீதியிலிருந்து சாவகச்சேரிகச்சாய்வீதிக்குச் செல்லும் 700 மீற்றர் வரையான வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் உள்ளது. அதனால் இடையூறுகளை எதிர்கொள்வதால் விரைவில்சீரமைத்துத்தருமாறு பிரதேசமக்கள் கோருகின்றனர்.

கச்சாய்வீதிப்பக்கமாகஇந்த வீதியின் ஒரு சிறு பகுதியான200மீற்றர் தூரம் சில மாதங்களுக்கு முன்னர் திருத்தப்பட்டுத்தாரும் இடப்பட்டுள்ளது. மிகுதியான 500 மீற்றர் வரையான தூரம் இன்னும் திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகவே காணப்படுகின்றது.

இந்த வீதியில் கமலாம்பிகை வித்தியாசாலையும் விஷ்ணு கோவில் , காளி கோவில் போன்றனவும், வாசிகசாலை, முன்பள்ளி என்பனவும்இருக்கின்றன. அதனால் இந்த வீதியால் பயணிக்கும் ஆசிரியர்களும், மாணவர்களும், மழைகாலங்களில்பெரிதும் கஸ்டப்படுகிறார்கள்.

கண்டிவீதியால் செல்லப் பயப்படும்வயோதிபர்களும் இந்தவீதியைமீசாலையிலிருந்துசாவகச்சேரிக்குச்செல்வதற்குப்பயன்படுத்திவருகிறார்கள்.

கண்டி வீதி அகலிக்கப்பட்டு இருவழிப்பாதையாகஇருந்தாலும்அதன் இருகரைகளிலும் விடப்பட்டு இருக்கும் இடம்பெரும்பாலும்ஒருஅடிக்குஉட்பட்டதாகவேகாணப்படுகின்றது.

அதனால்நடந்துசெல்பவர்களும், சாதாரண சைக்கிளில் செல்பவர்களும் அந்த வீதியால் பயணிக்கப் பயப்படுகிறார்கள். பின்னால்வரும் வாகனங்கள்கூட அவர்களை மோதிக் கொள்கின்றன.

அநேகமான வாகன ஓட்டிகளுக்கு வேகமாகச் செல்வதில் மட்டுமே கவனம் இருக்கிறதே தவிர விபத்து இல்லாமல் செல்ல வேண்டும் என்பதில் கவனம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆகவே சம்பந்தப்பட்ட சபையினர் இந்த வீதி விடயத்தில் கவனம் எடுத்து விரைவில் சீரமைக்கவேண்டும்என்று கூறுகின்றனர். (4)

*சமுர்த்திப் பயனாளிகளுக்கு*

# 'கிரியபியச' திட்டத்தின்கீழ் வீடு திருத்துவதற்கு உதவி

யாழ்ப்பாணம், மே10
யாழ்ப்பாண மாவட்ட சமுர்த்திப் பயனாளிகள் 36 பேருக்கு 'கிரியபியச' திட்டத்தின்கீழ்வீடுதிருத்துவதற்கானநிதிஉதவி வழங்கப்படவுள்ளதாக மாவட்ட சமுர்த்தி பிரிவு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
சமுர்த்திப் பயனாளிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு அரசால் 'கிரியபியச' என்னும் சிறப்பான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந்தத்திட்டத்தின்கீழ்மக்கள்வாழ்வதற்குஏற்ற அடிப்படையான தங்குமிடம் இருக்கவேண்டும் என்பதைக்கருத்தில் கொண்டு உதவித் திட்டம் வழங்கப்படவுள்ளது.

நடப்புவருடத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 36 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குடியிருப்பதற்கு ஏற்ற வீடு இல்லாதவர்களுக்கு சிறிய தற்காலிக வீடு அமைப்பதற்கும், வீடுகள் அமைக்கப்பட்டு வாழ்வதற்கு ஏற்ற வசதிகள் இல்லாத, கட்டுமான வேலைகள் நிறைவு பெறாமல் உள்ளவர்களுக்கு வீடு திருத்துவதற்கான நிதியும் வழங்கப்படவுள்ளது.

இந்தநிதிமூன்றுகட்டங்களாகவழங்கப்படவுள்ளது. தற்காலிக குடியிருப்பு ஒன்றை அமைப்பதற்கு 2இலட்சம் ரூபாவும், வீடு திருத்துவதற்கு ஒரு இலட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இந்த நிதியை பயனாளிகள் வழமையான கடன் தொகை திருப்பிச் செலுத்துவதை போல மீள செலுத்தத் தேவையில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (எ-7)

## பருப்புக்கான...

நள்ளிரவிலிருந்து 9 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று உடைக்காத ஒரு கிலோ கிராம் பருப்புக்கான வரி 6 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

புதிய வரி நேற்று நள்ளிரவிலிருந்து ஆறு மாதங்களுக்கு நடைமுறையில் இருக்கும் என்று நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (5)

## நீதித்துறை...

கொழும்பு, மே 10

நிரந்தர நீதாய மேல் நீதிமன்றை (ட்ரயல் அட் பார்) அமைப்பதற்கான சட்டவரைவு 119 மேலதிக வாக்குகளால் நாடாளுமன்றில் நேற்று நிறைவேற்றப்பட்டது. சட்டவரைவுக்கு எதிராக 52 வாக்குகள் அளிக்கப்பட்டன. இந்த விவாதத்தை நிறுத்துவதற்கு மகிந்த அணி பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டபோதும், அதனையும் மீறி விவாதம் நடத்தப்பட்டு சட்டவரைவு நிறைவேற்றப்பட்டது.

நிதி மோசடிகள் மற்றும் இலஞ்ச ஊழல்கள் பற்றி விசாரணை நடத்துவதற்காக நிரந்தர நீதாய மேல் நீதிமன்றங்களை அமைப்பதற்காக சட்டவரைவு மீது நாடாளுமன்றில் நேற்று விவாதம் இடம்பெற்றது. பெரும் ஊழல் மோசடிகள் மற்றும் திருட்டுச் சம்பவங்கள் சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு மூன்று நீதிபதிகள் அடங்கிய நிரந்தர நீதாய மேல் நீதிமன்றங்களை அமைப்பதற்கு நீதித்துறை சிறப்பு ஏற்பாடுகள் திருத்த சட்டவரைவு நீதியமைச்சர் தலதா அத்துகோரலவினால் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த சட்டவரைவுக்கு எதிராக மகிந்த ஆதரவு கூட்டு எதிரணி உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தது. அதனை ஆராய்ந்த உயர் நீதிமன்றம் நாடாளுமன்றின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றவேண்டும் அல்லது அரசமைப்புக்கு முரணான சரத்துக்களில் திருத்தங்கள் செய்யப்படவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது.

தினப்பணிகள் முடிவடைந்த பின்னர் சட்டவரைவு மீதான விவாதம் நேற்று ஆரம்பமானது. இதன்போது தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, புதிய நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ளது. சட்டவரைவு புதிதாக சமர்ப்பிக்கப்படவேண்டும். இந்தச் சட்டவரைவு துறைசார் மேற்பார்வை குழுவிலும் ஆராயப்படவில்லை. திருத்தங்கள் சம்பந்தமாகவும் அந்தக் குழுவில் கலந்துரையாடப்படவில்லை. விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளக்கூடாது, என்று வலியுறுத்தினார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டு புதிய நாடாளுமன்றத் தொடர் கூடினாலும் துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் கலையாது. அவற்றைப் புதிதாக நியமிக்கத் தேவையில்லை. உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரமே அரசால் திருத்தங்கள் செய்யப்பட்டு, சட்டவரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது- என்றார். (5)

## முதன்மைச்...

நான் ஏற்ற மாட்டேன். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பொது அமைப்புக்களுடனான கலந்துரையாடல் முதலமைச்சர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு மாகாண சபை ஒருங்கிணைக்கும் முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தில் முதன்மை ஈகைச் சுடரை போரால் பாதிக்கப்பட்ட அல்லது உறவுகளைப் பறிகொடுத்த தரப்புக்களில் இருந்து யாரவது ஒருவர் அதனை ஏற்ற வேண்டும். முதன்மை ஈகச் சுடரை நான் ஏற்ற மாட்டேன் என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார்.

இதேவேளை கூட்டத்தில் கலந்து கொண்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பொதுச் சுடரை யார் ஏற்றுவது என்பது தொடர்பிலேயே பல பிரச்சினைகள் உருவாகின்றன. அந்த விடயத்தில் உங்களின் முடிவு வரவேற்கத்தக்கது. அன்றைய தினம் வடக்கு மாகாண சபை சார்பாக ஒரு அறிவித்தல் உரையை மாகாண முதல்வர் என்ற ரீதியில் நீங்கள் மேற்கொள்ள வேண்டும். அது உலகத்துக்கு எமது பிரச்சினைகளை எடுத்துக் கூறும் உரையாக அமைய வேண்டும் என்று குறிப்பிட்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் உரையாற்றுவது எந்தளவுக்கு சாத்தியப்படும் என்று தெரியவில்லை. அவ்வாறான உரை நிகழ்த்துவதாக இருந்தால் முதல் நாளே ஊடகங்கள் ஊடாக அதை வெளியிடுவது பொருத்தமாக இருக்கும் - என்றார். (5,8)

## இரணைதீவில்...

கள் சென்றிருந்தனர்.

இதன்போது மக்களுக்குத் தேவையான உலருணவும் கொண்டு சென்றனர். இந்தப் பயணத்தின்போது துப்புரவு கருவிகளையும் கொண்டு சென்று, மக்களின் நிலங்களையும் துப்பரவு செய்தனர்.

கட்சியின் செயலர் செல்வராசா கஜேந்திரன் வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு புல்லு வெட்டும் கருவியை பாவித்து புல்லுவெட்டினார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்கள் சுமார் 15 நிமிடங்களே புல்லுவெட்டினர். அவர்களுடன் சென்ற கட்சி உறுப்பினர்கள் சுமார் 3 மணித்தியாலங்கள் துப்புரவு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (5,6)

## வவுனியாவில்...

இன்று காலை 9 மணிக்கு, வவுனியா நீதிமன்ற வளாகத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வவுனியா சிறைச்சாலைக் கைதி ஒருவர், வவுனியா சிறைச்சாலையில் பணம் கொடுப்பவர்களுக்கே வசதிகள் செய்து கொடுக்கப்படுவதாகவும் ஏனையோருக்கு உரிய வசதிகள் கிடைப்பதில்லை என்றும் கடந்த 4ஆம் திகதி நீதிமன்றில் தெரிவித்திருந்தார். இதன் அடிப்படையிலேயே இன்றைய கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (5,110)

## மைத்திரியின்...

பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். கொள்கை விளக்க உரை மீதான இன்றைய விவாதத்தில் தமது அதிருப்தியை வெளிக்காட்டவுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. அரச தலைவரின் கொள்கை விளக்க உரை மீது இன்று விவாதம் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து வாக்கெடுப்பு நடத்தப்படலாம் என்ற அடிப்படையில், அதன்போது கூட்டமைப்பு எவ்வாறான நிலைப்பாடு எடுப்பது என்பது தொடர்பில் ஆராய்வதற்கே நேற்றைய கூட்டம் நடத்தப்பட்டது.

அரச தலைவரின் கொள்கை விளக்க உரை, சபை ஒத்திவைப்புத் தீர்மானமாகவே இன்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதால், அதன் மீது வாக்கெடுப்பு நடக்காது.

இருப்பினும், அரச தலைவரின் உரை தொடர்பில் கூட்டமைப்பின் நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச தலைவரின் உரை தொடர்பில் பெரும் ஏமாற்றத்தை வெளியிட்டனர். அரசியல் தீர்வு தொடர்பில் எதுவுமே அவர் குறிப்பிடாமை தொடர்பில் கடும் அதிருப்தியை வெளியிட்டனர். கூட்டமைப்பின் தலைமையும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளது.

அரச தலைவரின் கொள்கை விளக்க உரையில் தமிழ் மக்கள் பிரச்சினையை குறிப்பிடப்படாமை தொடர்பாக இன்றைய விவாதத்தில் பேசுமாறு கூட்டமைப்புத் தலைமை நேற்றைய கூட்டத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துள்ளது. (5)

## மைத்திரியிடம்...

அமைச்சர் சரத் பொன்சேகா, அரச தலைவரின் செயற்பாடுகள் தொடர்பில் கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தார். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை, அரச தலைவர் மைத்திரிபாலவே பாதுகாப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

பொன்சேகாவின் கருத்துக்கு, ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும் எதிர்ப்புக் கிளம்பியிருந்தது. தலைமை அமைச்சர் ரணிலின் ஆலோசனைக்கு அமைவாக, பொன்சேகா நேற்று மன்னிப்புக் கோரியுள்ளார். (5)

## துப்பாக்கி...

னர், வான் படையினர், பொலிஸார், காவலரணைச் சுற்றியுள்ள காட்டுப் பகுதிகளில் கடந்த இரு தினங்களாக தேடுதல் மேற்கொண்டிருந்தனர். துப்பாக்கி மீட்கப்படவில்லை.

இந்த நிலையில் துப்பாக்கியை காவலரணில் அன்றைய தினம் வைத்திருந்த வான்படைச் சிப்பாயை பொலிஸார் கைது செய்துள்ளனர். (5,ரி3)

## பல்கலைக்கழக...

கொழும்பு, மே 10

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்துவது என்று நாம் திட்டமிட்டதன் பிரகாரம் மக்கள் கனவை நிறைவேற்றியே தீருவோம். இதற்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம்பெறும்.

பல்கலைக்கழக அனைத்துப்பீடங்களின் மாணவர் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், தொழில்நுட்ப கல்லூரிகளின் மாணவ பிரதிநிதிகள் மற்றும் கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவ பிரதிநிதிகளும், கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வாறு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்றிரவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழ் இனத்தின் ஒற்றுமையை உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டும் எனும் உயர்ந்த நோக்கம் கொண்ட சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்காகவே மாணவர்களும் பொது மக்களும் இணைந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஏற்பாடுகளை செய்த வண்ணம் உள்ளோம். ஆனால் குறிப்பிட்ட சில அரசியல்வாதிகள் தமது அதிகாரத்தை வைத்துக் கொண்டு மாணவர்களின் தூரநோக்குடனான செயற்பாடுகளுக்கு தடைகளை ஏற்படுத்த முனைகின்றமை மாணவ சமூகம் முன்னின்று நடத்துவதானது தமது சுயலாப அரசியலுக்கும் இளைய சமுதாயம் அரசியல் விடயங்களிலும் உணர்வு பூர்வமான விடயங்களிலும் நுழைந்து விடக்கூடாது என்று மாணவர் சமுதாயத்தினதும் பாதிக்கப்பட்ட சமூகத்தினதும் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்.

### நாம் ஏன் நடத்துகின்றோம்

வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஏன் இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை பொறுப்பேற்க வேண்டும் என்று சிலர் கேட்கலாம்.

சாத்வீகப் போராட்டங்களை இரும்புக் கரங்களால் அரசு நசுக்கி விட்டது. இந்த நிலையில் தான் தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு விசுவா சத்துடனும் அர்ப்பணிப்புடனும் தமிழ் பொதுமக்களை ஒரே தமிழினமாக ஒன்று திரட்டி தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடினார்கள். இதற்காக அரசியல்வாதிகளையும் கட்சி வேறுபாடின்றி ஒன்றிணைத்து பன்னாட்டு ஆதரவையும் பெறத்தக்கவகையில் போராட்டத்தை நகர்த்திச் சென்றிருந்தார்கள்.

ஆயுதப் பேராட்டம் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு பன்னாட்டுச் சமூகத்தின் உதவியுடன் பேரினவாதம் மேற்கொண்ட கொடிய போரின் விளைவாக முள்ளிவாய்க்கால் மண்ணில் மௌனிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிகராக மக்களை ஒன்று திரட்ட மக்களைத்தலைமை தாங்க அதுவும் குறிப்பாக இந்த முள்ளிவாய்க்கால் பேரவலத்தை ஒழுங்கமைத்து நடத்தவோ, தலைமை தாங்கவோ நீங்கள் தகுதியுடையவர்களா என்று ஒவ்வொரு தமிழ் அரசியல்வாதிகளும் குறிப்பாக வடக்கு மாகாண சபை அங்கத்தவர்களும், உங்கள் மனச்சாட்சியைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

### அரசியல் லாபம் தேடுகிறார்கள்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் தமது உறவுகளை இழந்து பல வலிகளைச் சுமந்த தமிழ் மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பது மாணவர் சமூகத்தின் வேண்டுகோளாகும். மக்களின் அரசியல் பிரதிநிதிகளான தாங்கள் குறிப்பாக வடக்கு மாகாண சபை, கிழக்கு மாகாண சபை சார்ந்த அரசியல்வாதிகள் மாணவர்களால் ஏற்பாடு செய்யப்படுகின்ற இந்த முள்ளிவாய்க்கால் பேரவல நினைவேந்தலில் மக்களோடு சேர்ந்து கலந்து கொள்ளுங்கள். மாறாக மக்களின் பேரவலத்தை சந்தித்த முள்ளிவாய்க்கால் மண்ணில் அரசியல் லாபத்தைத் தேட முயற்சி செய்யாதீர்கள்.

தமிழர்களின் ஒற்றுமையை தமிழ் மக்களை எந்தவித வேறுபாடுகளுமின்றி ஒன்றிணைந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நிகழ்த்துவதன் மூலம் பன்னாட்டுச் சமூகத்துக்கு ஓர் செய்தியை எடுத்துக்கூற வேண்டும். அரசியல் கலப்பு இன்றி புனிதமாக இந்த அவல நாளை நினைவுகூர வேண்டும். மக்களின் இழப்பில் எவரும் அரசியல் செய்யவோ பதவிகள் பெறவோ இடமளிக்கக் கூடாது.

என்ன காரணத்துக்காக தமிழினம் இந்த முள்ளிவாய்க்கால் மண்ணில் பேரிழப்பைச் சந்தித்ததோ அந்த உரிமையை பெறுவதற்கு அந்த புனிதநாளில் எந்த களங்கமும் ஏற்பட்டுவிடக் கூடாது. இவற்றை கருத்திற்கொண்டு யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தற்போதைய சூழ்நிலையில் தனது தார்மீகப் பொறுப்பை உணர்ந்து கொள்கிறது.

### மாணவர்களே அக்கறையானவர்கள்

தமிழ் மக்களின் அரசியலில் ஏற்படும் முடிவுகளில் பெரும் தாக்கத்தை செலுத்தத்தக்க வகையில் மாணவர் ஒன்றியத்தின் செயற்பாடுகள் காலம்காலமாக இருந்து வருகின்றன. தற்போது இருக்கும் மந்தமான அரசியல் போக்கினால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை வடமாகாண சபைதான் நடத்த வேண்டும் எனும் முறைமையை நடைமுறைப்படுத்தினால் அது எதிர்காலத்தில் தமிழ் மக்கள் வடக்கு கிழக்கு ரீதியாக எழுச்சி கொண்டு தமது உரிமையை வென்றெடுப்பதை கேள்விக்குறியாக மாற்றிவிடும். அரசியல்வாதிகளைவிட மக்கள் பிரச்சினைகளில் பல்கலைக்கழக மாணவர்கள் அதிகளவு கரிசனையோடு ஈடுபாடு கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறார்கள். அரசியல் பலம் என்பதற்கு அப்பால் மாணவர் சக்தி மாணவர் ஒன்றுபட்ட பலத்தினை கொண்டு மக்களை ஒருங்கிணைத்து வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து ஒழுங்கமைக்கும் நினைவேந்தல் நிகழ்வுக்கு வட்க்கு மாகாணசபை இடையூறு இல்லாமல் ஆதரவை வழங்க வேண்டுமென்பதற்காக நாம் இரண்டு தடவைகள் அலுவலக ரீதியாக முதலமைச்சரைச் சந்தித்து அன்புரிமையோடு கேட்டிருந்தோம்.

ஆனால் மாணவர்களாகிய எமது கோரிக்கையுடன் உடன்படாமல் நிராகரித்துக் கொண்டார். இதன் தொடர்ச்சியாக கடந்த 7ஆம் திகதி திங்கட்கிழமை கலந்துரையாடுவோம் என வரச் சொல்லிவிட்டு எம்மோடு எந்தவிதத்திலும் எமது கருத்தை செவிமடுக்காமல் தாம் ஏற்கனவே எடுத்துக் கொண்ட தீர்மானத்தை எமக்குத் தெரிவித்தனர். அதன் தொடர்ச்சியாக எமக்கு அவர்களது தீர்மானத்தில் உடன்பாடு இல்லாத காரணத்தினால் நேற்றுப் புதன்கிழமை நடந்த மாகாண சபையின் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மாநாட்டில் நாம் கலந்துகொள்ளாமல் தவிர்த்திருந்தோம்.

### ஒத்துழைப்பு வழங்குங்கள்

கடந்த காலங்களில் ஏற்பட்ட விரும்பத்தகாத நிகழ்வுகள் நடைபெறாமல் பார்த்துக் கொள்ளவே நாம் வடமாகாண சபை இதனை பொறுப்பெடுத்து நடாத்துவது பொருத்தமற்றது என்று கூறிவருகின்றோம். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் இந்த நிகழ்வை ஒழுங்கமைக்கக் கேட்பதைப் போல் ஒவ்வொருவரும் வந்து கேட்கலாம் என்று கூறுவது சரியான பாதையை மாற்றுவதற்கான செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம். ஆனால் சம்பந்தப்பட்ட தரப்பினர் உண்மையை உணர்ந்து மாணவர்களால் ஒழுங்கமைக்கப்படும் மக்கள் எழுச்சிக்கு ஆதரவு வழங்குவதை விடுத்து உண்மைக்கு மாறான தகவல்களை வெளியிடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றுள்ளது. (5,8)

## 10க்கும்...

குறைவான பொது அமைப்புக்களே பங்கேற்றிருந்தன.

வடக்கு மாகாண சபை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்தும் என்று கடந்த திங்கட் கிழமை முடிவெடுத்திருந்தது. மாகாண சபையுடன் இணைந்து நினை வேந்தல் நிகழ்வைக் கடைப்பிடிக்க ஆர்வமுள்ள பொது அமைப்புக்களை 9ஆம் திகதி நடைபெறும் கலந்துரையாடலில் பங்கேற்க முதலமைச்சர் அழைப்பு விடுத்திருந்தார்.

வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழு, புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கம், புதுக்குடியிருப்பு மாற்றத்துக்கான இளையோர் அமைப்பு, ஜனநாயகப் போராளிகள் கட்சி உள்ளிட்ட 10க்கும் குறைவான அமைப்புக்களே நேற்றைய கூட்டத்தில் பங்கேற்றிருந்தன.

யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் ஏற்கனவே அறிவித்ததைப்போன்று கூட்டத்தில் பங்கேற்கவில்லை. (5,8)

# தமிழ் ஆசிரியர் உயிரிழந்தார் அதிபர் மீது குற்றச்சாட்டுகள்

## விசாரணை நடத்தவேண்டும் என்று தமிழர் ஆசிரியர் சங்கம் கோருகிறது

யாழ்ப்பாணம், மே 10

தமிழ்ப்பாடத்தில் திறமையுள்ள ஆசிரியர் ஒருவர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார். அதற்கு, பாடசாலை ஒன்றின் அதிபரின் நெருக்கீடுகளே காரணம் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. எனினும் இறப்புக்கான உரிய காரணம்தெரிவிக்கப்படவில்லை. யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த கவிதா ஜெயசீலன் (வயது - 40) என்பவரே நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் புறநகர்ப்பகுதியில் உள்ள கலவன் பாடசாலை ஒன்றில் நீண்ட காலம் குறித்த ஆசிரியர் கடமையாற்றியிருந்தார். சில வாரங்களுக்கு முன்னர் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்தார். எனினும் அவர் முன்னர் கடமையாற்றிய பாடசாலை அதிபர், குறித்த ஆசிரியருக்கு நெருக்கீடுகள் கொடுத்துள்ளார் என்று அதிபருக்கு எதிராகச் சங்கம் கடும் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. அதனால் தான் குறித்த ஆசிரியர் தவறான முடிவு எடுத்தார் என்றும் சங்கம் குற்றஞ்சாட்டுகிறது.

"இடமாற்றம்பெற்றுச்சென்ற அந்த ஆசிரியரை குறித்த அதிபர், தனது பாடசாலைக்கு மாலை வேளை வந்து கற்பிக்கவேண்டும் என்று நெருக்கீடுகள் கொடுத்ததோடு, சம்பள ஏற்றப் படிவத்தை வழங்காது தடுத்து நிறுத்தியுள்ளார். இது தொடர்பில் ஆசிரியை வலயக் கல்வித் திணைக்களத்தில் முறையிட்டும் எந்தப் பயனும் இருக்கவில்லை. மாறாக பணிப்பாளரால் எச்சரிக்கப்பட்டார். ஏற்கனவே இந்தப் பாடசாலையில் கடமையாற்றிய மற்றொரு ஆசிரியை குறித்த பாடசாலை அதிபரால் பாதிக்கப்பட்டு வேறுபாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். அதிபர் இனரீதியான பாகுபாட்டைக் கொண்டிருக்கிறார் என்றே அறியப்படுகின்றது. எனவே இவை குறித்து மாகாணக் கல்வித் திணைக்களம் நடத்துகின்ற போலியான விசாரணைகளை நிறுத்தி, மாகாணக் கல்வி அமைச்சு நேரடியாக விசாரணை நடத்த வேண்டும்" என்று சங்கத்தின் குற்றச்சாட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் குற்றச்சாட்டுக் குறித்த செய்திக் குறிப்பு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆனால்குறித்தகுற்றச்சாட்டுகளை குற்றஞ்சாட்டப்படும் பாடசாலை அதிபர் மறுக்கிறார். "குறித்த ஆசிரியை இடமாற்றம் பெற்றபோதும் பிற்பகலில் மாணவர்களுக்கு வகுப்பு எடுப்பதாகத் தானாகவே கூறினார். அவருக்கு சம்பள ஏற்றப் படிவத்தை தான் கடமையிலிருந்து காலத்துக்குரியதை வழங்க முடியும். அதற்கு முதல் இருந்த அதிபர் தற்போது பாடசாலையில் இல்லை. அதனை வழங்க முடியாது என்று கருதுகிறேன். இது குறித்து கோட்டக் கல்விப் பணிப்பாளருடன் பேசியிருக்கிறேன்" என்று குறித்த பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர்களுள் ஒருவரான மாணிக்கராசாவிடம் இது தொடர்பில் கேட்ட போது, "குறித்த ஆசிரியருக்கு தொந்தரவு (ரோச்சர்) இருந்திருக்கிறது. அது வழமையாக எல்லாப் பாடசாலைகளிலும் உள்ள விடயம் தானே. அதிபர்கள் ஆசிரியர்களைப் பேசுவது வழமை தானே. ஆனால் உயிரிழப்புக்கு அதுதான் காரணம் என்றும் கூறமுடியாது. ஆசிரியைக்கு நோய் இருந்ததாகக் கூறப்படுகிறது. அது காரணமாக இருக்கலாம்" என்று தெரிவித்தார்.

"குறித்த ஆசிரியை தமிழ்ப் பாடத்தில் மிகச்சிறந்த, உத்வேகமுடையவர். செயலுருவாக்கத் திறனுடையவர் என்று சக ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

"முன்னர் குறித்த ஆசிரியருக்கு மன அழுத்தம் இருந்துள்ளதால் தன்னை வருத்தியிருந்தார். கடந்த 3 வருடங்களாக அவ்வாறான எந்தப் பிரச்சினையும் இல்லை, ஆரோக்கியமாகவே இருந்தார். திடீரென ஏன் தவறான முடிவு எடுத்தார் என்று தெரியவில்லை" என்று இறப்பு விசாரணையில் கூறப்பட்டது.

"இது பற்றிய முறைப்பாடு அல்லது தகவல்கள் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை. முறைப்பாடு வந்தால் அது பற்றிக் கவனஞ் செலுத்தப்படும்" என்று வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்தார். (4)

# ரணிலின் யோசனைக்கு மைத்திரி போர்க்கொடி!



## சமுர்த்தி வங்கி விவகாரத்தையடுத்து அரசியல் களத்தில் மீண்டும் சர்ச்சை

கொழும்பு, மே 10

சமுர்த்தி வங்கியை மத்திய வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரும் ரணில் விக்கிரமசிங்கவின் யோசனைக்கு மைத்திரிபால சிறிசேன கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

சமுர்த்திக் கட்டமைப்பில் மறுசீரமைப்பு அவசியமாகின்றபோதிலும், அதை மத்தியவங்கியின்கீழ்கொண்டு வருவதற்கு அவசியமில்லை என்று அரச தலைவர் கூறியுள்ளார் என்று அரச தலைவர் செயலக வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம் கடந்த 6ஆம் திகதி கொழும்பு, சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்றது. இதில் உரையாற்றிய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, சமுர்த்தி வங்கி விரைவில் மத்திய வங்கியின் கீழ் கொண்டுவரப்படும் என்று தெரிவித்திருந்தார்.

ரணிலின் இந்த யோசனைக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ரணிலின் யோசனைக்கு அரச தலைவரும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார். (5)

# தொடருந்து ஊழியர் போராட்டம் கைவிடப்பட்டது

கொழும்பு, மே 10

நேற்று நண்பகல் 12 மணி முதல் ஆரம்பிக்கப்பட்ட பணிப் புறக்கணிப்பு போராட்டத்தை நிறுத்திக் கொள்வதாக தொடருந்து ஊழியர்களின் தொழிற் சங்கம் அறிவித்துள்ளது. தொடருந்து ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அமைச்சரவை அனுமதியளித்துள்ள காரணத்தால் அவர்கள் போராட்டத்தை கைவிடத் தீர்மானித்துள்ளனர். (5)

# சமுர்த்தி வங்கியில் ரூ.675 கோடி மாயம்

## முன்னாள் அமைச்சரே விசாரணை கோருகிறார்

கொழும்பு, மே 10

சமுர்த்தி வங்கியில் 675 கோடி ரூபா மோசடி இடம்பெற்றுள்ளது என்று தலைமை அமைச்சர் அறிவித்துள்ளமை படுபயங்கரமான குற்றச்சாட்டாகும் என்று தெரிவித்த முன்னாள் சமுர்த்தி விவகார அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க, இது தொடர்பில் சபைக்கு ரணில் தெளிவுபடுத்தவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சிறப்புக் கூற்றொன்றை விடுத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய தலைமை அமைச்சர் ரணில் விக்கிர மசிங்க, சமுர்த்தி வங்கியில் 675 கோடி ரூபா மாயமாகியுள்ளது எனக் குற்றஞ்சாட்டியுள்ளார். 675 கோடி அல்ல 0.75 சதவீத கோடி மோசடி இடம்பெற்றிருந்தால்கூட அது தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும். சமுர்த்தி அமைச்சராக நானே பதவி வகித்தேன். பொறுப்பேற்பதற்கும் நான் தயாராகவே இருக்கின்றேன் - என்றார். (5)



# பல்கலை மாணவர் கொழும்பில் பேரணி பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம்

கொழும்பு, மே 10

சைட்டம் மருத்துவக் கல்லூரி விவகாரத்தில் அரசின் செயற்பாட்டுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் நேற்று ஈடுபட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் மீது கண்ணீர் புகைக்குண்டு மற்றும் நீர்தாரைப் பிரயோகம் என்பன பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டன.

உயர்கல்வி அமைச்சுக்கு முன்னால் வைத்து ஆர்ப்பாட்டக்காரர்களை கண்ணீர் புகைக்குண்டு மற்றும் நீர்தாரைப் பிரயோகம் மேற்கொண்டு பொலிஸார் கலைத்துள்ளனர்.

இதேவேளை, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு பேரணிக்கு கொழும்பு நீதிவான் மன்றினால் உத்தரவொன்று பிறப்பிக்கப்பட்டது.

எதிர்ப்பு பேரணியை அமைதியான முறையில் மேற்கொள்ளுமாறு தெரிவித்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தலும் மற்றும் அரச நிறுவனங்களில் அத்துமீறி நுழைதலும் இதன் போது தடை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவண் குணசேகர தெரிவித்தார். (5)

# சட்டங்கள் தாமதமாகுவதால் குற்றவாளிகள் தப்ப வாய்ப்பு

## நாடாளுமன்றில் சுமந்திரன் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 10

குற்றவியல் வழக்குகளில் தாமதம் என்பதே பெரும் பிரச்சினையாக உள்ளது. சட்டங்கள் தாமதப்படுத்தப்படுவதைப் பயன்படுத்தி பெரிய குற்றச்செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் தப்பித்துக் கொள்கின்றனர். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நீதித்துறை திருத்தச் சட்டவரைவு, தண்டனைச் சட்டக்கோவை திருத்தச் சட்டவரைவு, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை திருத்தச் சட்டவரைவு ஆகியன மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அதிகாரத்தில் இருப்பவர்கள் முக்கியமாக அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்கள் உரியநேரத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. ஆட்சி மாற்றமொன்று ஏற்படும்வரை அவ்வாறானவர்களுக்கு எதிரான வழக்குகள் இழுத்தடிக்கப்படும். அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் இந்த நடவடிக்கைகள் முழுமையாக முடிவுக்குக் கொண்டு வரப்படும். ஊழல், மோசடிகள் உயர்ந்த மட்டத்தில் ஈடுபடுவதற்கு இதுவே பிரதான காரணமாகும்.

முக்கியமான அரசியல் புள்ளிகள் தொடர்புபட்ட குற்றச் செயல்கள் பற்றிய விசாரணைகளை நடத்தி முடிப்பதற்கு ஐந்து ஆண்டு நாடாளுமன்றக் காலம் போதுமானதாக இல்லை. ஆட்சி மாற்றங்களின் பின்னர் மோசடிக்காரர்கள் நிரந்தரமாகத் தப்பிச்செல்லும் வரலாறும் காணப்படுகின்றது.

ஊழல், மோசடிகள் தொடர்பான விடயத்தில் நடவடிக்கை எடுப்பதாகக் கூறி இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. துரதிர்ஷ்டவசமாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மூன்று ஆண்டுகளில் ஒரு வழக்கில் மாத்திரமே தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அந்த வழக்கும் தற்போது மேன்முறையீட்டுக்கு உட்பட்டுள்ளது.

பொதுவான சட்ட அடிப்படையின்கீழ் இரண்டு மேன்முறையீடுகளுக்கு அதாவது. மேலும் ஒரு தசாப்தத்துக்கு வழக்கை இழுத்துச் செல்ல முடியும்.

துரிதமான விசாரணைகளை மேற்கொள்ளும் நோக்கில் தயாரிக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும் வழக்குகள் காலதாமதமாக இடம்பெறுவதைக் காணமுடிகின்றது.

இருபது வருடங்கள் வழக்கு இழுபட்டுச் செல்லும் நிலைமையும் உள்ளது. இதற்கு சிறந்த உதாரணமாக முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்கவை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் வழக்கைக் கூறமுடியும்.

17 ஆண்டுகளின் பின்னரே இந்த வழக்கில் தண்டனை வழங்கப்பட்டது. இந்த வழக்கில் இந்து மதகுரு ஒருவரும், அவருடைய மனைவியும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். மதகுருவுக்கு 17 ஆண்டுகளின் பின்னர் தண்டனை வழங்கப்பட, அவருடைய மனைவி 17 ஆண்டுகளின் பின்னர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார். அதுவரை அவர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்ட அவர் மனோநிலை பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார். இது சட்டத்துறையில் காணப்படும் காலதாமதத்துக்கு சிறந்த உதாரணமாகும் - என்றார். (5)



## தேநீர் விருந்தை புறக்கணித்த மைத்திரிபால

கொழும்பு, மே 10
சமகாலத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு இடையில் முரண்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாடாளுமன்ற அமர்வுகள் நேற்று முன்தினம் ஆரம்பித்தன. அதன் பின்னர் இடம்பெற்ற தேநீர் விருந்தில் கலந்து கொள்ளாமல் அரச தலைவர் அங்கிருந்து சென்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சருக்கும் இடையிலான அரசியல் விரிசலே இதற்கு காரணம் என்று குறிப்பிட்டுள்ளது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் சம்பிரதாய பூர்வமான தேநீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (5)

## கீச்சகத்துக்குள் நுழைந்த 'ஆசாமி' விவகாரம்

# சி.ஐ.டி விசாரணைக்கு ஊடகவியலாளர் அழைப்பு

கொழும்பு, மே 10
அரச தலைவர் ஊடகப் பிரிவின் கீச்சகத் தளத்துக்குள் புகுந்த 'ஆசாமி'யால் கொழும்பு அரசியலில் பரபரப்பு ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் அது தொடர்பில் கீச்சகப் பதிவு வெளியிட்ட பி.பி.சி. செய்திச் சேவையின் ஊடகவியலாளர் அஸாம் அமீன் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டார்.

அரச தலைவர் மைத்திரிபால தனது கீச்சகத்தில் நாடாளுமன்றில் தான் ஆற்றிய கொள்கை விளக்க உரையின் ஒரு பகுதியை நேற்றுமுன்தினம் பதிவிட்டார். அந்தப் பதிவுக்கு பதிலளித்து அரச தலைவரின் ஊடகப் பிரிவு கீச்சகத்தால் பதிவு மேற்கொள்ளப்பட்டது.

'நீங்கள் சிறந்த பேச்சாளர். ஆனால் உங்களால் தெரிவிக்கப்படும் கருத்துக்களை எவ்வாறு உறுதிப்படுத்துவீர்கள். செயலில் காட்டுங்கள்' என்று அந்தப் பதிவில் குறிப்பிட்டிருந்தது. இது அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இருப்பினும் சில நிமிடங்களில் இந்தப் பதிவு நீக்கப்பட்டது.

இது தொடர்பில் விளக்கமளித்துள்ள அரச தலைவர் ஊடகப் பிரிவு, அரச தலைவர் ஊடகப் பிரிவின் கீச்சகத்துக்குள் ஊடுருவிய 'ஆசாமி' ஒருவரே மேற்படிப் பதிவை இட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் 'ஆசாமி'யால் மேற்கொள்ளப்பட்ட கீச்சகப் பதிவை, தனது கீச்சகத் தளத்தில் பதிவிட்ட பி.பி.சி. செய்திச் சேவையின் ஊடகவியலாளர் அஸாம் அமீன், குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டார். (5)

## அமெரிக்கப் படையினருக்கு பாலியல் துன்புறுத்தல்

### இளைஞன் கைது

கொழும்பு, மே 10
திருகோணமலை உப்புவெளிப்பொலிஸ்பிரிவுக்குட்பட்ட சுற்றுலா விடுதியொன்றில் அமெரிக்கக் கடற்படையின் இளம் பெண்கள் இருவரைப் பாலியல் துன்புறுத்தல் செய்ய முயற்சித்த விடுதியின் ஊழியர் ஒருவரைக் கைது செய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
2018 பசுபிக் பங்காண்மை நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நிமித்தம் யூ.எஸ்.என்.எஸ். மேர்சி எனும் அமெரிக்கக் கடற்படை வைத்தியசாலைக் கப்பலில் வந்த இரு அமெரிக்க இளம்பெண்கள் தமக்குக் கிடைத்த ஓய்வு நேரத்தில் உப்புவெளிப் பகுதியிலுள்ள சுற்றுலா விடுதிக்குச் சென்றனர்.

அங்கு அவர்கள் தங்கியிருந்தவாறு தமக்கு மென்பானம் கொண்டு வந்து தருமாறு விடுதியின் சேவையாளரிடம் தெரிவித்தனர்.

மென்பானத்துடன் அறைக்குச் சென்ற ஊழியர் அங்கு தனிமையிலிருந்த இளம் பெண்களைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்த முயற்சித்தார்.

இளம்பெண்கள் இருவரும் பொலிஸாரிடம் முறையிட்டதையடுத்துப் பொலிஸார் இளைஞரைக் கைது செய்தனர். (5)

## மைத்திரியின் கூற்றுக்கு பதில் கூற முடியாது


### முன்னாள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவிப்பு



கொழும்பு, மே 10
அரசியலிலிருந்து 2020 ஆம் ஆண்டு ஓய்வு பெறுவதில்லையென அரச தலைவர் மைத்திரிபால தெரிவித்த கருத்துத் தொடர்பில் தமது குழுவின் நிலைப்பாடு குறித்து உடனடியாகப் பதிலளிக்க முடியாது என்று அரசிலிருந்து விலகிச் சென்ற 16 பேர் கொண்ட குழுவிலுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.

தமது குழுவினருடன் கலந்துரையாடிய பின்னர் இது தொடர்பில் நிலைப்பாடொன்றை எடுக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். தமது குழு கூட்டு எதிர்க்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து செயற்பட வேண்டியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (5)

கேலிச்சித்திரம்




நன்றி: அவந்த ஆட்டிகல

## மொரிசியஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்ட இலங்கையர்கள்

கொழும்பு, மே 10
ஆள் கடத்தல்காரர்களால் அழைத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் இலங்கையைச் சேர்ந்த சிலர் மொரிசியஸில் தடுத்து வைக்கப்பட்டனர்.

சிசெல்ஸிள்ள இலங்கைக்கான தூதுவர் டிக்கிரி ஹேரத் குணதிலக்க இது தொடர்பாகத் தெரிவித்ததாவது:
இவர்கள் பெருந்தொகையான பணத்தைச் செலவிட்டுத் தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் இங்கு வந்தனர்.

இவர்களிடம் அந்த நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கான ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிய ஆவணம் இல்லாமையால் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

7 இலங்கையர்களையும் நாட்டுக்குத்திருப்பியனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது - என்றார். (5)

## அமெரிக்க இன்டல்

# கண்காட்சியில் பங்கேற்க 4 மாணவர்கள் பயணம்

கொழும்பு, மே 10
அமெரிக்காவின் இன்டல் நிறுவனத்தின் விஞ்ஞான மற்றும் பொறியியல் கண்காட்சியில் கலந்து கொள்வதற்கு பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட இளம் விஞ்ஞானிகள் 4 பேர் அமெரிக்கா பயணமாகின்றனர்.

இவர்களுக்கான பயணச்சீட்டு கல்வி அமைச்சின் ஊடாக வழங்கி வைக்கப்பட்டது. கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் நேற்றுக் காலை பயணச்சீட்டுக்களைக் கல்வி இராஜாங்க அமைச்சின் பணியகத்தில் வைத்து வழங்கினார்.

அமெரிக்காவின் இன்டல் நிறுவனத்தின் விஞ்ஞான மற்றும் பொறியியல் கண்காட்சி நாளை மறுதினம் 12 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதிவரை பெனின்சுலா நகரில் நடைபெறவுள்ளது. இந்தக் கண்காட்சியில் பன்னாட்டு ரீதியாக 72 நாடுகளைச் சோந்த ஆயிரத்து 700 மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கைப் பொறியியலாளர் கல்வியகம் வருடம் தோறும் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 20 மாணவர்களைத் தெரிவு செய்து இரண்டு கட்டமாகப் போட்டிகளை நடத்துகின்றது. இந்தப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெறுகின்ற மாணவர்கள் ஆண்டுதோறும் அமெரிக்காவில் நடைபெறுகின்ற கண்காட்சியில் கலந்து கொள்வதற்குத் தெரிவு செய்யப்படுகின்றர். அதன் அடிப்படையிலேயே இந்த ஆண்டும் தெரிவு செய்யப்பட்டுப் பங்குபற்றுகின்றனர்.

கிம்ஹான் விஜேவர்தன (சென் அன்ரனிஸ் கல்லூரி -கண்டி), கஜிந்து பண்டார (சென் அன்ரனிஸ் கல்லூரி -கண்டி), சுபுன்சில்வா (டெமகினோன் கல்லூரி - கந்தானை) ருமல் இந்துவர (ஆனந்தா தேசியக் கல்லூரி - புத்தளம்) ஆகிய நான்கு மாணவர்களே தெரிவு செய்யப்பட்டனர். (5)



## மைத்திரியின் உரை வெறும் 'சப்பை'

### கூறுகிறது மகிந்த அணி



கொழும்பு, மே 10
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கொள்கை அறிவிப்பு உரையில் புதிதாக எந்தவொரு விடயமும் இல்லையெனக் கூட்டுஎதிர்க்கட்சியின் தலைவர் தினேஸ் குணவர்தன குற்றஞ்சாட்டினார்.

வெறுமனேநிகழ்வொன்றை நடத்தி நாடாளுமன்றத்தைச் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தமையே அரச தலைவரால் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டு புதிய அமர்வொன்றை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வில் உரையாற்றிய முன்னாள் அரச தலைவர்கள், அரசினால் முன்னெடுக்கப்படவுள்ள புதிய வேலைத்திட்டங்கள் அல்லது எதிர்காலச் செயற்றிட்டங்கள் பற்றியே குறிப்பிட்டிருந்தனர்.

எனினும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் உரையில் ஒரு விடயமாவது புதியதாகக் குறிப்பிடப்படவில்லை. அரசுக்குள் முரண்பாடுள்ளது என்பதை அரச தலைவர் மைத்திரி தனது உரையிலேயே கூறியிருந்தார் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (5)

# அழகுசாதன கிறீம் ஒழுங்குபடுத்தலுக்கு வருகிறது சட்டம்

## நுகர்வோர் அதிகார சபை தெரிவிப்பு

கொழும்பு, மே 10

சருமத்தை அழகுபடுத்தப் பயன்படுத்தப்படும் பெரும்பாலான கிறீம் வகைகள் உடம்புக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதனால் இதனை ஒழுங்குபடுத்தும் புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்தது.

சருமத்தில் பூசப்படும் கிறீம் வகையில் அடங்கியுள்ள மூலப்பொருள்கள், அவற்றைப் பயன்படுத்த வேண்டிய முறை குறித்த விடயங்கள் அடங்கிய ஆவணமும் அதில் கட்டாயம் அச்சிடப்படும்வகையில்சட்டம்நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இது தொடர்பான அரசிதழ் அறிவித்தலில் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபைத் தலைவர் ஹஸித திலகரத்ன கைச்சாத்திட்டுள்ளார். சம்பந்தப்பட்ட சட்டத்துக்கு அமைவாகச் செயற்படுவதற்குத் தயாரிப்பாளர்களுக்கும், விநியோகஸ்தர்களுக்கும் 6 மாத கால அவகாசம் வழங்கப்படவுள்ளது.

சருமத்தில் பூசப்படும் சில கிறீம் வகைகள் தரமற்றது என்பது தெரிய வந்தது. அத்தோடு பயன்படுத்த வேண்டிய அளவு குறிப்பிடப்படாமையால் சருமத்தில் கூடுதலான கிறீம் பயன்படுத்தப்படுகின்றது. இதனால் உடம்புக்குஏற்படும்பாதிப்பை கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளதாகநுகர்வோர் அதிகார சபை தெரிவித்தது. (5)

# வீடமைப்பு அதிகார சபையின் இரு அதிகாரிகள் பதவி நீக்கம்

## தொல்பொருள் பிரதேசத்தை சேதமாக்கினராம்

கொழும்பு, மே 10

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள் இருவரை பணி நீக்கம் செய்துள்ளதாக அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இப்பலோகம பகுதியில் உள்ள பெலும்கல எனும் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை அழித்தமை தொடர்பில் இவர்கள் இருவரையும் பணி நீக்கம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் அநுராதபுர மாவட்டத்தின் முகாமையாளரும் தொழில்நுட்ப அதிகாரியுமே இவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் வீடமைப்புத் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதாகக் கூறி அநுராதபுரம் பெலும்கல எனும் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த 15 ஏக்கர் நிலத்தை அழித்தமை தொடர்பில் ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)



# நாம் இன்னமும் சு.கவினர்தான்

## சொல்கிறார் டிலான்

கொழும்பு, மே 10

நாம் கூட்டு எதிர்க் கட்சியின் பின்னாலோ அல்லது சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் பின்னாலோ செல்ல வேண்டியதில்லை. அரச தலைவர் மிக விரைவில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை முழுமையாக மறுசீரமைப்புச் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளார். இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

'சிறிலங்கா சுதந்திரக் 'கட்சியில் இருந்து கொண்டு செயற்படுவதற்கு எமக்கு அரச தலைவரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமாகிய மைத்திரிபால சிறிசேன அனுமதி வழங்கியுள்ளார். நாம் வேறு கட்சிகளின் பின்னால் செல்ல வேண்டியதில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அரசுடன் உள்ள சிலர் தான் தற்பொழுதே ஐக்கிய தேசியக் கட்சியிடம் விலைபோயுள்ளனர்' என்றும் டிலான் பெரேரா குறிப்பிட்டார். (5)

# மின்சார சபை பொறியிலாளர்களின் கோரிக்கை விரைவில் நிறைவேறும்

## அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய



கொழும்பு, மே 10

மின்சார சபையின் பொறியிலாளர்களுடைய கோரிக்கைகளை விரைவில் நிறைவேற்றுவதாக மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

கலப்பு உற்பத்தித் திட்டத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் கூறினார்.

தமது கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை உரிய நேரத்தில் மாத்திரம் வேலை செய்யும் தொழிற்சங்கப்போராட்டத்தை மேற்கொள்வதாக இலங்கை மின்சார சபையின் பொறியிலாளர் சங்கம் தெரிவித்தது.

இலங்கை மின்சார சபையின் பொறியிலாளர் சங்கத்தின் உரிய நேரத்தில் மாத்திரம் வேலை செய்யும்தொழிற்சங்கப்போராட்டம் நேற்றுமுன்தினம் மாலை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)



# இலங்கையரின் தகவல்கள் பாதுகாக்கப்படும்

## வைபர் செயலி நிறுவனம் அறிவிப்பு

கொழும்பு, மே 10

இலங்கைப் பயனர்களின் தகவல்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று வைபர் தொடர்பாடல் செயலி நிறுவனம் உறுதிமொழி வழங்கியது.

தகவல்களின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படும் என்று அந்த நிறுவனம் குறிப்பிட்டது. இணையத்தில் பல்வேறு தகவல் கசிவுச் சம்பவங்கள் பதிவாகியுள்ள நிலையில் இந்தக் கருத்து வெளியிடப்பட்டது.

இலங்கையில் எட்டு மில்லியன் பயனர்கள் வைபர் சேவையைப் பயன்படுத்தி வருகின்றனர். வைபர் மிகவும் பாதுகாப்பான ஓர் தொடர்பாடல் முறைமை என்று அந்த நிறுவனம் தெரிவித்தது. (5)

# மக்கள் பணத்தை வீணடித்த மைத்திரி

## சாடுகிறது ஜே.வி.பி.



கொழும்பு, மே 10

நாடாளுமன்றத்தில் அரச தலைவர் மைத்திரி தலைமையில் நேற்று இடம்பெற்ற சபை அமர்வு நிகழ்வுகள் கால வீணடிப்பும், பொது மக்களின் பணத்தை விரயமாக்கும் ஒரு நடவடிக்கை. இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க தெரிவித்தார்.

இதற்காக அரசு செய்துள்ள செலவு விவரத்தை வெளியிடுமாறும் அவர் சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அரச தலைவர் நேற்றுமுன்தினம் தனது உரையில் காத்திரமான செயற்பாட்டு ரீதியிலான அறிக்கைகள் எதனையும் முன்வைக்கவில்லை. இந்தச் சபை அமர்வு ஒரு வீணான நடவடிக்கையேயன்றி வேறில்லை.

தனது கட்சிக்குள் உள்ள முரண்பாட்டைச் சமாளிப்பதற்கே அரச தலைவர் மைத்திரி நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தார் என்றும் குறிப்பிட்டார். (5)

# கப்ராலிடம் வாக்கு மூலம் பெற நீதிமன்றம் அனுமதி



கொழும்பு, மே 10

முன்னாள் மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலிடம் வாக்கு மூலம் பெற்றுக் கொள்வதற்கு பொலிஸ் நிதி மோசடிப் பிரிவுக்கு கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதி வழங்கியது.

பொதுநலவாய நாடுகளின் மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிக்கான ஏலம் விடும் திட்டமொன்றின் போது 698 மில்லியன் ரூபா நிதி மோசடி இடம்பெற்றதாகக் கூறப்படும் விடயம் தொடர்பில் வாக்குமூலத்தைப் பெற்றுக் கொள்வதற்கும், அவரது வங்கிக் கணக்குகளைப் பரிசீலனை செய்யவும் பொலிஸ் நிதி மோசடிப் பிரிவுக்குக் கோட்டை நீதிவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. (5)

# சு.கவில் இன்னும் 10பேர் எம்முடன் இணைவார்கள்

## கூறுகிறார் எஸ்.பி.திசாநாயக்க



கொழும்பு, மே 10

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அரசுடன் உள்ள மேலும் 10 பேர் இன்னும் ஓரிரு தினங்களில் எம்முடன் கூட்டுச் சேர்வார்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசு அமைக்க நீண்ட காலம் காத்திருக்க வேண்டியதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (5)

# பிரபாகரனுக்கு விக்னேஸ்வரன் அஞ்சலி செய்யவுள்ளாராம்

## சொல்கிறது சிங்கள ஊடகம்

கொழும்பு, மே 10

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எதிர்வரும் 18ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு நினைவஞ்சலி செலுத்தவுள்ளதாகச் சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு எதிர்வரும் 18ம் திகதி முள்ளிவாய்க்காலில் நினைவஞ்சலி நிகழ்வை நடத்துவதற்கு வடக்கு மாகாண முதலமைச்சரும் மாகாண அமைச்சர்களும் கடந்த 7ஆம் திகதி தீர்மானம் எடுத்துள்ளனர். முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலில் போரில் உயிர் நீத்தவர்களை நினைவு கூரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிக்கு அருகாமையில் இந்த நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

வட மாகாண முதலமைச்சரின் பணியகத்தில் நடைபெற்ற பேச்சுக்களின் போது நினைவஞ்சலி நிகழ்வு குறித்துத் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு போரில் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

போரில் உயிரிழந்த வேலுப்பிள்ளை பிரபாகரன் உள்ளிட்ட புலித் தலைவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நினைவஞ்சலி செலுத்தும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்பார் எனவும் சிங்கள ஊடகச் செய்தியில் கூறப்பட்டது. (5)

## 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**கதிரவேலு கந்தையா**

(இரத்தினம் மெக்கானிக்)

மலர்வு
08.07.1947

உதிர்வு
21.04.1998

(cs 16453) (13.17)

இருபது ஆண்டுகள் ஓடிச்சென்றாலும்
எம் குடும்பத்தின் துயரம் ஆறாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

அச்சுவேலி தெற்கு. குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

கடைச்சப்பை, கிளானையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஓய்வுபெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியரும், எமது ஆலய நான்காம் திருவிழா உபயகாரருமான

**வல்லிபுரம் செல்வரத்தினம்**

அவர்கள் லண்டனில் காலமான செய்திகேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ மகாமுத்துமாரியம்மன்
தேவஸ்தானம்,
கீரிமலை.

(CS 16484)
(10)


# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

**FACULTY OF MEDICINE**

1. **Senior Professor/Professor of** Anatomy/ Physiology/ Community & Family Medicine/ Pathology/ Forensic Medicine/ Pharmacology/ Medicine/ Psychiatry/ Obstetrics & Gynaecology/ Paediatrics / Surgery
2. **Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in** Anatomy/ Biochemistry/ Physiology/ Community & Family Medicine/ Pathology/ Microbiology/ Parasitology/ Forensic Medicine /Pharmacology/ Medicine/ Psychiatry/ Obstetrics & Gynaecology/ Paediatrics/Surgery/Nuclear Medicine

**Note 1**:

I. Applications for the above posts will be entertained from the candidates with **MBBS degree** as their first degree

II. For the Posts of Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary), preference will be given to those who have/are doing/are willing to do **the post graduate degree as given below against the subject:**

i. Anatomy – MD in Surgery/Radiology
ii. Biochemistry – a) MD in General Medicine/Chemical Pathology
b) Postgraduate Degree in Clinical Genetics
iii. Physiology – MD in General Medicine/Anaesthesiology/Paediatrics/Surgery/Obstetrics & Gynaecolgy/ Emergency Medicine
iv. Community & Family Medicine – MD in Community Medicine/Family Medicine
v. Pathology – MD in Haematology/Histopathology
vi. Microbiology – MD in Clinical Microbiology/Medical Microbiology
vii. Forensic Medicine – MD in Forensic Medicine
viii. Pharmacology – a) MD in Clinical Pharmacology/General Medicine/ Paediatrics/ Anaesthesiology
b) Ph.D in Pharmacology/Clinical Pharmacology
ix. Nuclear Medicine – MD in Radiology
x. Medicine – MD in Gastroenterology/Nephrology
xi. Psychiatry – MD in Psychiatry
xii. Obstetrics & Gynaecology – MD in Obstetrics & Gynaecology
xiii. Paediatrics – MD in Neonatology/Paediatric Neurology
xiv. Surgery – MD in Anaesthesiology

3. **Temporary Research Assistant** in Community & Family Medicine/Surgery
4. **Temporary Scientific Assistant** in Microbiology/Parasitology

**UNIT OF ALLIED HEALTH SCIENCES, FACULTY OF MEDICINE**

5. **Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in** Nursing/ Pharmacy/ Medical Laboratory Sciences

**Note 2:**

Applications for the above posts will be entertained from the candidates who have **the degree as given below against the subject** as their first degree:

i. Nursing – B.Sc in Nursing
ii. Pharmacy – B.Pharmacy
iii. Medical Laboratory Sciences – B.Sc in Medical Laboratory Sciences

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.128870- 11x2740 - 159010/-p.m |
| Professor | Rs.108490 - 13x2520 - 141250/-p.m |
| Senior Lecturer Gr.I | Rs.87415 – 7x2020– 101555/-p.m |
| Senior Lecturer Gr.II | Rs.76275 – 11x1520– 92995/-p.m |
| Lecturer (Probationary) | Rs.53235 – 10x1240 – 65635/-p.m |
| Temporary Research Assistant | Rs.40,324/-(fixed) p.m |
| Temporary Scientific Assistant | Rs.38,628/-(fixed) p.m |

**Note:**

The above salary scales are fully operative w.e.f 01.01.2020 and the placement of salary applicable to the posts for the years 2019 & 2020 will be made in accordance with the University Grants Commission Circular No.17/2016 dated 05.12.2016.

In addition to the above salary,

1. The following allowances will be paid in the percentage of the basic salary to the financial value existed as at 31.12.2015 for all permanent posts:

i) Academic allowance

| | |
|---|---|
| Senior Professor | - 167% |
| Professor | - 162% |
| Senior Lecturer Gr.I/Gr.II | – 151% |
| Lecturer (Probationary) | – 115% |

ii) Additional monthly allowance – 20% of the basic salary
iii) Research allowance - 35% (based on the research activity)

2. Cost of living allowance of Rs.7,800/-p.m.

**Statutory benefits:**

1) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
2) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
3) Gratuity payments
4) Employees' Trust Fund benefits
5) Free Medical Services

**Closing date:**

Applications should reach us on or before the date given below:

**Post of Senior Professor/Professor** - **06.07.2018**
**Other posts** - **20.06.2018**

Applications and other documents for the Post of Senior Professor/Professor shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. Applications for the other posts shall be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka with the certified photocopies of the educational & professional qualifications (with statement of the Degrees and service certificates.)

Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank Account No: **162-1-001-6-0000880** of Bursar, University of Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar, Academic Establishments, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a self – addressed stamped envelope 23x10 c.m. in size along with the paid Bank Slip to the above address.

The candidates who apply for **more than one** post should submit **separate application** along with separate **Bank slip**. The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA, SRI LANKA.
09.05.2018


ES Printers

அனைத்தும் தனித்துவமான கனினி வடிவமைப்புடன்




மக் பிரிண்ட்
(MUG)
450/=



Books Binding




Banners

தொடர்புகளுக்கு,
021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## இறுதிநேரத்தில்கைவிடப்பட்டது படையினர் வசமுள்ள நிலங்கள் தொடர்பில் ஆராயும் கூட்டம்

முல்லைத்தீவு, மே10

முல்லைத்தீவுமாவட்டத்தில் படையினர்வசமுள்ளநிலங்கள் தொடர்பிலும் அதன் சரியான அளவுகள் தொடர்பிலும் ஆராயும் நோக்கில் நேற்றுமுன்தினம் மாவட்டச்செயலகத்தில் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்புக் கலந்துரையாடல் திகதி குறிப்பிடப்படாதுஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வடக்குமாகாணத்தில்படையினர் வசமுள்ள நிலங்கள் தொடர்பில் சகல மாவட்டச் செயலாளர்களையும் அழைத்துஅரசதலைவரின் செயலாளர் தலைமையில் சிறப்புச் சந்திப்பொன்று கடந்த ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி இடம்பெற்றது.

இதில் வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட மாவட்டச் செயலாளர்கள் படைத் தளபதிகள், வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர்கள், வடக்குமாகாண முதலமைச்சரின் அமைச்சின் செயலாளர், மீள்குடியேற்றஅமைச்சின்செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்தசந்திப்பில்படையினரால் இதுவரை விடுவிக்கப்பட்டநிலப்பரப்புக்கள்தொடர்பிலும் தற்போதும் படைவசமுள்ளநிலங்கள்இதில்படையினரால் விடுவிப்பதாக இணக்கம் காணப்பட்ட நிலங்கள்தொடர்பில்மாவட்டரீதியில் புள்ளி விவரங்கள் தெரிவிக்கப்பட்டன.

முல்லைத்தீவுமாவட்டத்தில் தற்போது மக்களுக்குச் சொந்தமானஆயிரத்து150 ஏக்கர் நிலம் மட்டுமே படையினர் வசம் உள்ளதாக படைத்தரப்புச் சுட்டிக்காட்டியிருந்த நிலையில் தமது தகவலின்பிரகாரமும்மக்களின்கூற்றுப்படியும்குறித்த அளவானது தவறானதாக உள்ளது என மாவட்டச் செயலாளர்மற்றும்மாகாண தலைமைச்செயலாளர்ஆகியோர் சுட்டிக் காட்டியிருந்தனர்.

இதன் பிரகாரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினர் வசமுள்ள நிலங்கள் தொடர்பில் மாவட்டத்துக்கு நேரடியாகச்சென்று மாவட்டச் செயலாளர் தலைமையில் சிறப்புச் சந்திப்பில் சரியான அளவை இனங்காணுமாறு அரச தலைவரின் செயலாளரால் கூறப்பட்டது.

இதன் அடிப்படையில் முப்படையினர், நில அளவைத் திணைக்கள அதிகாரிகள், வடக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர், பிரதேசசெயலாளர்களைஉள்ளடக்கிய சிறப்புக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாவட்டச்செயலகத்தில் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டபோதிலும் குறித்த கலந்துரையாடல்இறுதிநேரத்தில்இரத்துச் செய்யப்பட்டது. இதனால் ஏமாற்றம் அடைந்துள்ளதாக மாவட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரனைத்தொடர்புகொண்டு கேட்டபோது,

அரசதலைவரின் நாடாளுமன்ற சிறப்பு உரைக்காக மாவட்ட இராணுவ மற்றும் கடற்படைத் தளபதிகள் கொழும்புக்குச் செல்வதாக அறிவிக்கப்பட்டதனையடுத்து குறித்த சந்திப்பு பிற்போடப்பட்டது. இருப்பினும் அடுத்த வார முற்பகுதியில் இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன- என்றார். (எ-105)

# வடக்கு அரச சேவைகளில் சிங்களவர்களே ஆதிக்கம்

## *மாற்றவேண்டும் என்கிறார் மாகாண கல்வி அமைச்சர்*

**முல்லைத்தீவு, மே 10**

**வடக்கில் அரச சேவைகளில் சிங்கள இனத்தவர்களின் ஆதிக்கமே காணப்படுகின்றது. அரச சேவைகளில் கணக்காளர் முதல் சாதாரண மின்மானி வாசிப்பவர் வரைக்கும் சிங்களவர்களே காணப்படுகின்றார்கள். இந்த நிலையை மாற்றவேண்டும்.**

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.



கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த ஜி.சி.ஈ சாதாரண தேர்வில் சிறந்த சித்திகளைப் பெற்ற184மாணவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வும் வாழ்க்கைத்திறன் விருத்தி செயலமர்வும்மாங்குளத்தில் பெரண்டினா நிறுவனத்தின் ஏற்பாட்டில்நேற்றுமுன்தினம் இடம்பெற்றன.

அதில்அவர்மேலும்தெரிவித்ததாவது:

வடக்குப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விவசாய, மீன்பிடி, அரச உத்தியோகம்ஆகியமூன்றும்காணப்படுகின்றன. தொழிற்றுறை என்று குறிப்பிடுமளவுக்கு வேறு விடயம் எதுவும்இங்குஇல்லை. அப்படிஒன்று உருவாகவும் இல்லை.

1960ஆம் ஆண்டுகளில், இலங்கையின் மொத்த சனத்தொகையில் 12.5 வீதமானவர்கள் வடக்குக் கிழக்கைச் சேர்ந்தவர்கள். அதில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகும் மாணவர்களின்தொகை25தொடக்கம்30வீதம். முன்னர் மருத்துவம், பொறியியல் போன்றமுக்கியமானவற்றில்கணிசமான இடங்களைப்பெற்றுள்ளோம்.

இவற்றைத்தாங்கிக்கொள்ளமுடியாத சிங்கள அரசு1972ஆம் ஆண்டுதரப்படுத்தல் முறையைக் கொண்டுவந்தது. தமிழர்கள்தங்கள்இனவிகிதாசாரத்துக்கு மேலாக பல்கலைக்கழக ஆசனங்களைப் பெற்றுக் கொள்கின்றார்கள்.

தரப்படுத்தல் சட்டத்தைக் கொண்டு வந்து தமிழ் மக்களின் உயர்கல்வியைப் பறிப்பதற்கு நடவடிக்கை எடுத்தார்கள். அதனையும் தாண்டியே வடக்கு மாணவர்கள் முன்நோக்கி வந்தார்கள். படித்தவர்கள் போரால் நாட்டைவிட்டு ஓடினார்கள். தமிழினம்இப்போதுபின்தள்ளப்பட்டுள்ளது.

அன்று குறைந்த மக்கள் தொகையைக்கொண்டுஅதிகளவானசேவை நிர்வாகிகளை இந்த நாட்டுக்குக் கொடுத்த வடக்கு மாகாணம் இன்று மாகாணத்தின் தேவைக்கு ஒரு கூலியாளைக்கூடபிடிக்கமுடியாதஅளவுக்குப்பின்தள்ளப்பட்டுள்ளது. பாடசாலைகளில் உயர்தரத்தில் கணித விஞ்ஞான பிரிவுகளில் மாணவர்கள் படிப்பதற்குப் பின்னடிக்கின்றார்கள்.

பெரும்பாலானவர்கள் வர்த்தகம், கலைப் பிரிவு களையே நாடுகின்றார்கள். இந்த நிலையை மாற்றவேண்டும். வாழ்வாதாரத்துக்கு முக்கியமான விவசாய நிலங்கள் கட்டடங்களாகி வரும் அபாயநிலை காணப்படுகின்றது. இது எங்களுக்கு நாங்களே குழிபறிக்கும்செயல்.

உணவுக்காக எப்போது நீங்கள் கையேந்துகின்றீர்களோஅப்போதேநீங்கள் அடுத்த கட்ட வளர்சியைஇழந்துவீடுகின்றீர்கள், அடிமையாகி விடுகின்றீர்கள். வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமதுநிலங்களைப்பாதுகாக்கவேண்டும்.

பாடசாலைகளில்புலமைப்பரிசில்ஏழ்மையானஆற்றல்கொண்டமாணவர்களை இனம் கண்டு அவர்களின் கல்விக்கு உதவிசெய்யவே உருவாக்கப்பட்டது. இன்று இந்த புலமைபரிசில் நகரபாடசாலைகளில்அனுமதிஎடுப்பதற்காக மாற்றமடைந்துள்ளது.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் இப்போது தேவையில்லை. இந்த நோக்கம்அரசின்கொள்கைக்கேமுரணாக உள்ளது. அருகில் பாடசாலை சிறந்த பாடசாலை என்ற ஒரு எண்ணத்தை அரசு அறிமுகப்படுத்தி பல ஆயிரம் கோடி ரூபாக்களைச் செலவு செய்து கட்டடங்களை கட்டி வளப்படுத்திக் கொண்டிருக்க நகரப் பாடசாலையை நோக்கி நீங்கள் ஓடுங்கள் என்று புலமைப்பரிசில் பரீட்சை வைப்பது ஒன்றுக்கொன்று முரணாகக் காணப்படுகின்றது - என்றார். (எ-ரி3)

## சிறைக்குள் தாக்கினர் என்று பாதிக்கப்பட்டவர் குற்றச்சாட்டு

### *மது நிலைய சிசிரிவி பதிவின்படி கைது செய்யுமாறு நீதிவான் உத்தரவு*

யாழ்ப்பாணம், மே10

யாழ்ப்பாண சிறைச்சாலைவாகனம்மீது தாக்குதல் நடத்தி சேதமேற்படுத்தினார் என்றகுற்றச்சாட்டில்நீதிமன்றக்காவலில் வைக்கப்பட்டிருந்த நபர் மீது சிறைச் சாலைக்குள்வைத்துத்தாக்குதல்நடத்தப்பட்டதாகக்குற்றஞ்சாட்டப்பட்டது. அதுதொடர்பில் நேற்றுமுன்தினம் மருத்துவ அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

“சிறைச்சாலைஉத்தியோகத்தர்கள்பொதுமகனைத்தாக்கியஆதாரம்அங்குபொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராவில் பதிவாகியது. அதனை யாருக்கும் வெளிப்படுத்தக்கூடாது என அச்சுறுத்தி சந்தேநபர் மீது சிறைச்சாலைஉத்தியோகத்தர்கள்தாக்குதல் நடத்தியுள்ளனர். அதனால் சந்தேகநபரின்கண்புருவம்உள்ளிட்டஇடங்களில் காயம் ஏற்பட்டுள்ளது" என மருத்துவச் சான்றிதழை முன்வைத்து சந்தேநபரின் சட்டத்தரணி நீதிமன் றில் சமர்ப்பணம் செய்தார்.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியிலுள்ள மதுபான விடுதியொன்றி னுள் கடந்த 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக சிறைச்சாலை ஜெயிலர் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். அதனால்வாகனம்மீதுதாக்குதல்நடத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

சந்தேகநபர்யாழ்ப்பாணம்நீதிவான்மன்றின்உத்தரவில்விளக்கமறியலில்வைக்கப்பட்டுப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமைக்குத் திகதியிடப்பட்டது. சந்தேகநபர் தனது சட்டத்தரணி ஊடாக மன்றில் முன்னிலையானார்.


“சந்தேகநபரைசிறைஅலுவலர்கள்தாக்கியமைக்கான ஆதாரம் மதுபானச்சாலையில் பொருத்தப்பட்ட சிசிரிவி கமராவில் பதிவாகியிருந்தது. அதனைப் பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்கள், தாமும் கைகலப்பில் ஈடுபட்டமைக்கான ஆதாரம்அதில்உள்ளதைஅறிந்து, சந்தேகநபரை சிறைச்சாலைக்குள் வைத்து தாக்கியுள்ளனர். இந்தவிடயத்தைஎவரிடமும்தெரிவிக்கவேண்டாம்எனவும்சிறை அலுவலர்கள்அச்சுறுத்தியுள்ளனர்.

சிறைச்சாலைக்குள் சந்தேகநபரைக் கொண்டுசெல்லமுன்னர்அவரைபரிசோதித்து வழங்கிய மருத்துவச் சான்றிதழில் அவரது உடலில் காயங்கள் உள்ளமை தொடர்பில் தெரிவிக்கப்படவில்லை.

சிறைச்சாலைக்குள்இருந்தபோதுபரிசோதிக்கப்பட்டுவழங்கப்பட்டமருத்துவச்சான்றிதழில் சந்தேகநபரின் கண் புருவம் உள்ளிட்டபகுதிகளில்தாக்கப்பட்டதற்கான காயங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சிசிரிவி கமரா பதிவைப் பெற்று இந்த தாக்குதலில் சம்பந்தப்பட்ட அனைவர்மீதும்நடவடிக்கைஎடுக்கவேண்டும்" என்று சந்தேதேக நபரின் சட்டத்தரணி மன்றில் சமர்ப்பணம் செய்தார்.

அதனை ஆராய்ந்த நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன், “மதுபானசாலையின் சிசிரிவி பதிவு மன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்தப் பதிவில் உள்ளவாறு தாக்குதலில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு மன்றில் முற்படுத்தப் பட வேண்டும்" என்று பொலிஸாருக்கு உத்தரவிட்டார். “சிறைச்சாலைக்குள்தாக்கப்பட்டமைதொடர்பில்சந்தேகநபர்பொலிஸில் முறைப்பாட்டை வழங்கவேண்டும். அது தொடர்பில் சந்தேகநபரிடம் பொலிஸார் வாக்கு மூலத்தைப் பெறவேண்டும்' 'என்றும் நீதிவான் கட்டளையிட்டார். வழக்கு விசாரணை ஜூன் 18ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. (103)



மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், வலயத்துக்குட்பட்ட மண்முனை தென்மேற்கு கோட்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் வேள்ட்விசன் நிறுவனத்தின் உதவியுடன் வடமாகாண பாடசாலைகளை பார்வையிடுவதற்காக கல்விச்சுற்றுலாவை மேற்கொண்டிருந்தனர். நேற்றுக்காலை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள உடையார்கட்டு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்குச் சென்றிருந்தனர். குறித்த பாடசாலையில் உள்ள திறன்விருத்தி வகுப்பறைகளைப் பார்வையிட்டதுடன், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளையும் அவதானித்தனர்.

# உருவப்பொம்மைஎரிப்பில் கட்சிக்குத்தொடர்பு இல்லை

*அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் யாழ்ப்பாணக் கிளைத் தலைவர் தெரிவிப்பு*



யாழ்ப்பாணம், மே 10

கடந்த 4ஆம் திகதி முஹம்மதியா ஜும்மாபள்ளிவாசல் (புதுப்பள்ளிவாசல்) முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்துக்கும் உருவப் பொம்மைஎரிப்ப்க்கும் கட்சிரீதியான எந்தவிதத் தொடர்பும் இல்லை.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் யாழ்ப்பாண மாவட்ட கிளைத்தலைவரும் யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினருமான கே.எம்.நிலாம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உருவப் பொம்மை எரிப்பை முழுக்க எமது யாழ்ப்பாண மாவட்ட முஸ்லிம் மக்களே செய்தனர் என்பது யாவரும் அறிந்த உண்மை. இந்தவிடயத்தை அரசியலாக்கத் தற்போதைய மாகாண சபை போனஸ் உறுப்பினர் அயூப் அஸ்மீன் மற்றும் அவரது ஊடகச் செயலாளர் எனக் கூறிக்கொண்டு திரியும் அப்துல்லாஹ் என்பவரும் மக்களைத் தவறான வழியில் திசை திருப்புகின்றனர்.

நாளுக்கு நாள் புதுப்புது அமைப்புகளை நிறுவி எமது கட்சிக்கும் தலைவர் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் பெயருக்கும் அபகீர்த்தியைப் பரப்புகின்றனர் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றேன் - என்றார்.

*பாடசாலை அலுவலகங்களில்*

# மாகாணக் கல்வி அமைச்சரின் படம் காட்சிப்படுத்த வேண்டும்

கிளிநொச்சி, மே 10

வடக்குமாகாணப்பாடசாலைகளில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரின் புகைப்படம் காட்சிப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணக்கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரனது புகைப்படம் எடுக்கப்பட்டு அனைத்துப் பாடசாலைகளுக்கும் ஒவ்வொருபடம்வீதம்வழங்கப்பட்டுள்ளது. படங்கள் வலயக்கல்வி அலுவலகங்கள் ஊடாக அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் இந்தப் படம் மட்டை வடிவில் வழங்கப்பட்டது. இதனைபாடசாலைகள்தங்கள்நிதியில்இருந்தேபிரேம் போட்டுக் காட்சிப்படுத்த வேண்டும்.

குறிப்பிட்ட சில பாடசாலைகளேபடத்தைக்காட்சிப்படுத்தியுள்ளன. தற்போதைய வடக்குமாகாணசபையின் இரண்டாவதுகல்வியமைச்சராககந்தையாசர்வேஸ்வரன் பதவி வகித்துவரும் நிலையில் அவரது புகைப்படம் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பல பாடசாலைகளில் கல்வி அமைச்சரது புகைப்படம் இதுவரை காட்சிப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-72)



# நுங்குத் திருவிழா

யாழ்ப்பாணம், மே 10

மன்னார் சுயாதீன இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் நுங்குத் திருவிழா கட்டைக்காடு உயிலம் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மாகாணத்தின் அடையாளத்தை வெளிப்படுத்தும் பனை மரத்தின் புகழைத் தெரியப்படுத்தவும் அதனை பாதுகாக்கும்நோக்கிலும் இந்த நிகழ்வுநடைபெற்றது. இதில் நுங்கு குடித்தல், பதநீர் அருந்துதல், நுங்கு வண்டில் ஓட்டுதல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன. நிகழ்வில் இளையோர் பெரியவர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

இதுதவிர 'அண்மையில் பனைவளத்தை காப்போம்' என்னும் தொனிப்பொருளில் வவுனியாவில் விழிப்புணர்வு நடவடிக்கை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (எ-7)

# கொடும்பாவி எரித்தல் இஸ்லாத்தில் ஆகுமா?

## ரிசாத் பதியுதீனிடம் விளக்கம் கோரினார் யாழ். முஸ்லிம் இளைஞர் கழகத் தலைவர்

**யாழ்ப்பாணம் மே 10**

**கொடும்பாவி எரித்தல் இஸ்லாத்தில் ஆகுமா? ஹராமா? ஹலாலா? யாழ்ப்பாணம் கிளிநொச்சி ஜம்இய்யத்துல் உலமா சபையினர் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமாகிய ரிசாத் பதியுதீன் ஆகியோரிடம் விளக்கம் கோரினார் யாழ்ப்பாண முஸ்லிம் இளைஞர் கழகத் தலைவர் என்.எம்.அப்துல்லாஹ்.**

கடந்த 4ஆம் திகதி யாழ்ப்பாணம் முஹம்மதிய்யா ஜும்ஆ மஸ்ஜித் இல் நடைபெற்ற ஜும்ஆ தொழுகையைத் தொடர்ந்து வடக்கு மாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மினுக்கு எதிராக அகில இலங்கை மக்கள்காங்கிரஸ்யாழ்ப்பாண மாவட்டக் கிளை ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம்நிகழ்த்தப்பட்டு, அவரது உருவப்பொம்மை (கொடும்பாவி)எரியூட்டப்பட்டமை குறித்து யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபையிடம் யாழ்ப்பாண முஸ்லிம் இளைஞர் கழகத் தலைவர் என். எம். அப்துல்லாஹ் விளக்கம் கோரி கடந்த திங்கட்கிழமை கடிதம் ஒன்றை சமர்ப்பித்தார்.

மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

குறித்த தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்ட நிகழ்வை ஜம்இய்யத்துல் உலமாசபை நேரடியாகபார்த்துக்கொண்டுதான் இருந்தது. அந்த வகையில் உங்களிடம் முன்வைக்கப்படும் பின்வரும் கேள்விகளுக்கு குர்ஆன் சுன்னாவழிநின்றுபதிலை (பத்வாவினை) எழுத்து மூலம்எதிர்பார்க்கின்றேன்.

முஸ்லிம் ஒருவருக்கோ? அல்லது முஸ்லிம் அல்லாத ஒருவருக்கோ? அவரது உருவ பொம்மையினை எரியூட்டுவதற்கு முஸ்லீம்களுக்கு இஸ்லாத்தில் அனுமதி உண்டா? இதற்கு உலமாசபையின் பதில் என்ன?

குறித்த தினம் இந்த நிகழ்வு அரங்கேறிய பொழுது உலமாசபை (தலைவர் மற்றும் உறுப்பினர்கள்) குறித்த பள்ளிவாசலினுள்பைத்துல்மால் நிதியம் ஆரம்ப நிகழ்வுக்காககூடிஇருந்தது. அவ்வாறு இருந்தும் இதனை தடுக்காததன் காரணம் என்ன? (தாங்கள் தடுக்காததனால் இதற்கு ஜம்மியத்துல் உலமா ஆதரவு என்று பொருள் கொள்ளலாமா?)

இஸ்லாமிய கடமையான ஜும்மாவை முடித்து விட்டு, தக்வா குறித்தும் அல்லாஹ்வை பற்றியும் பயானில்கேட்டுவிட்டு, 2ரகாயத் தொழுதும் விட்டு, இந்தக் கீழ்த்தரமான செயலை செய்தநபர்கள் குறித்து இஸ்லாத்தின் பார்வை என்ன?

யாழ்ப்பாண கிளிநொச்சி ஜம்மியத்துல் உலமாசபையின் பார்வை என்ன?

இந்தச்செயற்பாடு மார்க்கத்துக்கு முரணான செயற்பாடாக இருப்பின் தங்கள் நிர்வாகத்தின் கட்டமைப்புக்குள் உள்ள பள்ளிவாசல்கள் இவ்வாறான ஆர்ப்பாட்டங்களின்போது இடம்கொடுக்கும் போது குறித்த நிர்வாக சபை மீது தங்களால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் என்ன? இந்தச் செயற்பாடு மார்க்கம் அங்கீகரிக்காத ஒன்றாக இருந்தால்இந்தச்செயற்பாட்டைக் கண்டித்து ஜம்மியத்துல் உலமாசபையினால்யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு துண்டுப் பிரசுரம் மற்றும் பொது அறிவித்தல் மூலம் இதனைத் தெளிவுபடுத்திவிளக்கம்ஒன்றை வெளியீடு செய்வது தொடர்பில் தங்களின் நிலைப்பாடு என்ன? என்ற வினாக்களோடு மேற்படி வினாக்களுக்கான பதிலை விரைவில் எதிர்பார்க்கின்றேன்- என்றுள்ளது. (எ)

# பயன்பாடற்ற நிலையில் கிளிநொச்சி பொருளாதார மத்திய நிலையம்



கிளிநொச்சி, மே 10

கிளிநொச்சிகனகபுரம்பகுதியில் கடந்த ஆண்டு கட்டிமுடிக்கப்பட்டு அரசதலைவரால் திறந்து வைக்கப்பட்ட சிறப்பு பொருளாதார மைய நிலையம் பயன்பாடற்ற நிலையில் காணப்படுகின்றது. குறித்த பொருளாதார மைய நிலையம்நிறைந்தவசதிகள்கொண்டு கட்டப்பட்டது. 20 கடைகள் கொண்ட 2 கட்டடத் தொகுதியில் 40 கடைகள் காணப்டுகின்றன. இவற்றுள் 05 கடைகளில் மாத்திரமே வியாபாரப் பொருள்கள் போடப்பட்டுள்ளன. ஏனையகடைகள்யாவும்பயன்படுத்தப்படாதுமூடப்பட்டநிலையில்காணப்படுகின்றன.

40கடை கள் தவிர 05 களஞ்சியங்களும்காணப்படுகின்றன. இந்தக்கடைகள் யாவும் நிறைந்த வசதியுடன் வாகனங்கள் தரித்து நின்று பொருள்களைஏற்றிஇறக்குவதற்குபொருத்தமான முறையில் கட்டப்பட்டுள்ளன.

இந்தவிடயம்தொடர்பாகநடைமுறையில் உள்ள கடை நடத்துநர்களுடன் கலந்துரையாடியபோது, பொருத்தமான இடத்தில் இந்த நிலையம் அமைக்கப்பட்டிருந்தால் நிறைந்த பயனைப் பெற்றிருக்க முடியும் எனக் குறிப்பிட்டனர். இந்த நிலையம் கிளிநொச்சிநகரில்இருந்து 2கிலோமீற்றர் தூரத்தில்கனகபுரம்பகுதியில்காணப்படுகின்றது. கிளிநொச்சிநகரை அண்டிய பகுதிகளில் இவ்வாறான கடைகளுக்கு இடப் பற்றாக்குறை நிலவுகின்றபட்சத்தில்இந்தநிலையம்பயன்பாடற்றுக் காணப்படுவது குறிப்படத்தக்கது. (எ-72)



# கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தை மாவட்டந்தோறும் அமைக்கத் திட்டம்

*அதன் மாகாண செயலாளர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மே 10

மாவட்டந்தோறும்கூட்டுறவுஊழியர் தொழிற்சங்கங்களைஅமைப்பதற்கு வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. "வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இந்த மாவட்ட கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கங்கள் அமைக்கப்படும்.

இந்த மாவட்ட கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளே எதிர்காலத்தில்இணைந்துதாய்ச்சங்கமான வ்டக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்துக்கு வருடந்தோறும் உறுப்பினர்களைத் தெரிவுசெய்வர்" என்றுமாகாணகூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தின் செயலாளர் சு.சிவலிங்கம்தெரிவித்தார்.

கூட்டுறவுஊழியர்தொழிற்சங்கத்தின் செயற்பாடுகள். நடவடிக்கைகளை விரைவுபடுத்தும் முகமாக மாவட்ட கூட்டுறவுஊழியர்தொழிற்சங்கங்கள் உருவாக்கப்படவுள்ளன.

மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு ஊழியர் தொழிற்சங்கங்கள் கிளைச் சங்கங்களின் பிரதிநிதிகள் மூலம் தெரிவு செய்யப்படும் எனத்தெரிவிக்கப்பட்டது. (எ-4.17)



இணுவில் பரராஜ சேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்தத் திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று ஆரம்பமாகியது. நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றம் நடைபெற்றது. 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை, தேர் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்த திருவிழாவும் நடைபெற்று 22ஆம் திகதி செவ்வாய் கிழமை மாலை வைரவர் பொங்கலுடன் திருவிழா நிறைவுபெறவுள்ளது. (ந-7)


# தங்கத்துடன் பெண் கைது

கொழும்பு, மே10
சுமார்50இலட்சம்ரூபாபெறுமதியானதங்க நகைகளைச் சட்டவிரோதமாக இலங்கைக்குக் கொண்டுவந்தபெண்ணொருவர் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை டுபாயில் இருந்து இலங்கைவந்தபெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. கைதுசெய்யப்பட்டுள்ளவர்நீர்கொழும்பு பகுதியைச்சேர்ந்த45வயதான பெண் என விசாரணைகளிலிருந்துதெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சுங்க அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (ந-ரி5)

# வாகன விபத்தில் ஒருவர் காயம்



ஹற்றன்.மே10
ஹற்றன்பொகவந்தலாவபிரதானவீதியில்ஜீப்வண்டியும் பேருந்தும்மோதியதில்ஜீப்வண்டியின்சாரதிகாயமடைந்தார். இந்த விபத்து நேற்றுமுன்தினம் மாலை நடந்தது.

ஹற்றனில் இருந்து பொகவந்தலாவ நோக்கிப் பயணித்த ஜீப்வண்டியும்பொகவந்தலாவவையில்இருந்துஹற்றன் நோக்கிப்பயணித்தபேருந்தும்மோதியேவிபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயங்களுக்கு உள்ளாகிய ஜீப்வண்டியின் சாரதி டிக்கோயா கிழங்கன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த விபத்து தொடர்பில் மேலதிக விசாரனைகளைக் ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ந-ரி5)

# அரசதலைவர் தேர்தல் கூட்டணி பற்றிப் பேச்சு

## அமைச்சர் ராஜித கூறுகின்றார்



**கொழும்பு, மே10**
**எதிர்வரும் 2020ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலிலும் ஒரே முன்னணியில் களமிறங்கு வது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.**

இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

சுகாதார அமைச்சில் நேற்று இடம்பெற்ற அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகவியலாளர்களுடான கலந்துரையாடலின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நடைபெறவுள்ள அரசதலைவர் தேர்தலில் ஒரே அணியாக களமிறங்க தேசிய அரசில் அங்கம் வகிக்கும் இரு பிரதான கட்சிகளும் இணக்கத்தைத் தெரிவித்துள்ளன.

எனினும் சிலரின் முரண்பட்ட கருத்துக்களால்இரண்டாவதுகட்டப்பேச்சுக்குச் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

ஒரே முண்ணியின் கீழ் களமிறங்குவதற்கான முதலாம்கட்டப்பேச்சு ஐக்கியதேசியக் கட்சியின் தலைவரும் தலைமைஅமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவுடன் இடம்பெற்றது.

இந்தநிலையில், இரண்டாம் கட்டப் பேச்சு ஐக்கியதேசியமுன்னணியில்அங்கம்வகிக்கும் கட்சித் தலைவர்களுக்கிடையில் இடம்பெறவுள்ளது.

நடைமுறையில் காணப்படுகின்ற தேசிய அரசைஎதிர்வரும்2025ஆம்ஆண்டுவரை நீடிப்பதற்கான முயற்சிகளின் ஒன்றாகவே இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

அது மாத்திரமின்றி நாட்டில் குடும்ப ஆட்சியை இல்லாது ஒழிப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார். (ந-ரி5)

# இராணுவ சிப்பாயின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, மே10
மட்டக்களப்பு - வாகரைப்பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பனிச்சங்கேணியில் உள்ள படைமுகாம் ஒன்றில் இராணுவச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுநடந்தது. பனிச்சங்கேணி படைமுகாமில் கடமையாற்றிய இராணுவச் சிப்பாயே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்என வாகரைப் பொலிஸார் தெரிவித்தனர். இந்த இராணுவச் சிப்பாய் தன்னைத்தானே சுட்டுஉயிரைமாய்த்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-ரி5)

# குடைசாய்ந்தது கனரக வாகனம்

கொழும்பு, மே10
கொழும்பு பாலாவி தல்கஸ்கந்த பகுதியில் நேற்று காலை கனரக வாகனமொன்று வீதியின் நடுவே குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த, தனியார் ஆலையொன்றுக்குச் சொந்தமான கனரன வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது எனத் தெரிவிக்கப்பட்டது.

அநுராதபுரத்திலிருந்து சோள மா மூடைகளை ஏற்றிக் கொண்டு நீர்கொழும்புக்குச் சென்ற வாகனமே விபத்துக்குள்ளானது. கனரக வாகனத்தின் பின்புறச் சில்லு கழன்றமையால், வாகனம்கட்டுப்பாட்டைஇழந்துவீதியின்நடுவே குடைசாய்ந்துள்ளது என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. எவருக்கும்காயங்கள்ஏற்படவில்லைஎனவும், பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தையடுத்துசுமார்நான்குமணித்தியாலயங்கள் பகுதியில் வாகன நெரிசல் ஏற்பட்டது. (நரி5)

# தவறான முடிவெடுத்து இளைஞர் உயிரிழப்பு

கொழும்பு, மே10
சிலாபம் அளுத்வத்த பகுதியில் இளைஞர் ஒருவர் தவறான முடிவெடுத்துத் தன்னுயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நடந்தது.

புத்தளம் நோக்கிப் பயணித்து கொண்டிருந்த தொடருந்தில் பாய்ந்தே இளைஞர் உயிரை மாய்த்துக் கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த இளைஞரின் சடலம் சிலாபம் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சிலாபம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-ரி5)

# தொடருந்து விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, மே10
றாகம காமினி மாவத்தை பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவையில் உந்துருளியுடன் தொடருந்து மோதுண்டு விபத்துக்குள்ளானது. இதில் உந்துருளியில் சென்றவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் மாலை நடந்தது. விபத்தில்நீர்கொழும்புப்பிரதேசத்தைச்சேர்ந்த46வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை றாகம பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ந-ரி5)



# வானூர்தி நிலையத்தில் திடீர் தீ விபத்து

கொழும்பு, மே10
கட்டுநாயக்கவானூர்திநிலைய கட்டடத் தொகுதிஒன்றில் நேற்றுத் திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டது.

வானூர்தி நிலைய தீயணைப்புப் பிரிவு மற்றும் வானூர்தி படை தீயணைப்புப் பிரிவு இணைந்து தீயைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர். இந்தத் தீப் பரவல்காரணமாகவானூர்திபோக்குவரத்துக்குஎவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. தீ விபத்தால் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடையசொத்துக்கள்நாசமாகியுள்ளனஎனத் தெரிவிக்கப்பட்டது. பரவலுக்கானகாரணம்இதுவரையில்கண்டறியப்படவில்லைஎனத்தெரிவிக்கப்பட்டது. இதுதொடர்பாகமேலதிகவிசாரணைகளைபொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ந-ரி5)

# ஈரானுடனான ஒப்பந்தம் தொடரும் ஏனைய ஐந்து நாடுகளும் அறிவிப்பு

மொஸ்கோ, மே 10
அணுவாயுதப் பரவல்த் தடை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகினாலும், அந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து செயற்படுத்துவோம் என்று குறித்த ஒப்பந்தத்துடன் தொடர்புடைய ஏனைய ஐந்து நாடுகளும் அறிவித்தன.
பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி, சீனா ஆகியனவே ஏனைய நாடுகளாக உள்ளன. இவற்றில் பிரான்ஸ், பிரிட்டன் இரண்டும் அமெரிக்காவுடன் மிகவும் நெருங்கிச் செயற்படும் நட்பு நாடுகள். சிரியாவுக்கு எதிராக அண்மையில் அமெரிக்கா எடுத்த இராணுவ நடவடிக்கைக்கு பிரிட்டனும் பிரான்ஸும் துணையாக நின்றமை தக்க சான்று. எனவே இந்த இரண்டு நாடுகளும்அமெரிக்காவுடன்இணைந்து ஒப்பந்தத்தில் இருந்து விலகும் என்றே கருதப்பட்டது.
அதேநேரம் சீனா, ரஷ்யா இரண்டும் ஈரானின் நெருக்கமான நட்பு நாடுகள். இவை ஈரானுக்கு எல்லையற்ற ஆதரவைக் கொடுக்கும் என்று கருதப்பட்டது. இவ்வாறு இரண்டு அணிகளாக உருவெடுத்தால் உலகப்போரின் முனையாக ஈரான் விவகாரம் அமையலாம் என்று சொல்லப்பட்ட நிலையில் எதிர்பார்ப்புக்கு மாறாக ஏனைய ஐந்து நாடுகளும் ஓரணியில் நிற்கின்றன. ஈரானுடனான ஒப்பந்தத்தைச் செயற்படுத்த இடையூறு தர வேண்டாம் என்று மேமற்குலக நாடுகள்அமெரிக்காவிடம்கோரிக்கை விடுத்தன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)







# ஈரானுடனான ஒப்பந்தத்

# நிறுத்திய அமெரிக்

வொஷிங்டன், மே 10
ஈரானுடன் கடந்த 2015ஆம் ஆண்டில் செய்துகொண்ட அணுவாயுதப் பரவல்த் தடை ஒப்பந்தத்தை நிறுத்துவதாக அறிவித்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.
மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான ஈரான் அணுவாயுதச் சோதனைகளில் ஈடுபட்டு வருகிறது என்று குற்றம் சுமத்தி வந்த அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா, ஈரானுக்கு எதிராக கடந்த 2015ஆம் ஆண்டு மிகப்பெரிய பொருளாதாரத் தடையை விதித்தார். அமெரிக்காவுடன் பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி, சீனா ஆகிய நாடுகளும் இணைந்து ஈரானுக்கு எதிரான நகர்வுகளைக் காட்டின. இதையடுத்து அணுவாயுதம் என்கிற கொள்கையில் இருந்து வெளிவர சம்மதம் தெரிவித்த ஈரான் மேற்குறித்த ஆறு நாடுகளுடனும் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது.
'அணுவாயுதப் பரவல் தடை ஒப்பந்தம்' என்று அழைக்கப்படும் இந்த ஒப்பந்தத்தின்படி ஈரான் அணுவாயுதச் சோதனைகளைக் கைவிட்டு, தன்னிடம் ஒள்ள செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை (அணுவாயுதங்களைத் தயாரிப்பதற்கான மூலம்) வெளிநாடுகளுக்கு அனுப்பினால் பொருளாதாரத் தடைகள் விலக்கிக் கொள்ளப்படும் என்று குறிப்பிடப்பட்டது. இதற்கு ஈரான் சம்மதம் தெரிவித்தது. ஈரானிடம் இருந்த செறிவூட்டப்பட்ட யுரேனியத்தின் பெரும் பகுதியை ரஷ்யா பொறுப்பேற்றது.
ஆனால், அமெரிக்க அதிபராகக் கடந்த வருடம் பொறுப்பேற்றது முதல் ஈரானுக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்து வருகிறார் ட்ரம்ப். ஒப்பந்தத்தை மீறி ஈரான் தொடர்ந்து அணுவா

# பாகிஸ்தான் எல்லையில் நிலநடுக்கம்



இஸ்லாமபாத், மே 10
பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதி மற்றும் ஆப்கானிஸ்தான் எல்லையோர பகுதிகளில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது.
பாகிஸ்தானின் வடமேற்கு பகுதியில் உள்ள கைபர் மாகாணம் மற்றும் ஆப்கானிஸ்தான் எல்லையோர பகுதிகளான பெசாவர் ஆகிய இடங்களில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. ரிக்டர் அளவில் 5.5 அலகுகளாக இந்த நிலநடுக்கம் பதிவாகியது என்று அந்த நாட்டின் புவியியல் துறை அறிவித்தது. (ம)

# ஆபிரிக்காவில் மீண்டும் தலைதூக்குகிறது எபோலா


காங்கோ, மே 10
உயிர்கொல்லி நோயான எபோலா ஆபிரிகாவில் மனிதப் பேரழிவை ஏற்படுத்த வாய்ப்புள்ளது என்று எச்சரித்தது உலக சுகாதார நிறுவனம். காங்கோவில் எபோலாவின் தாக்கம் உள்ளமை நூறு சதவீதம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்தே இவ்வாறான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
1976ஆம் ஆண்டில் இருந்து ஆபிரிக்க நாடுகளுக்கு அவ்வப்போது கிலிகை ஏற்படுத்தி வருகிறது எபோலா. இதுவரை பல்லாயிரக் கணக்கான மக்கள் இந்த நோயின் தாக்கத்தால் உயிரிழந்துள்ளனர். எனினும் பன்னாட்டுச் சமூகத்தின் முயற்சியாலும் பெரும் நிதிப் பங்கீட்டாலும் கடந்த 2016ஆம் ஆண்டு ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டது எபோலா. எனினும், தெற்கு ஆபிரிக்க நாடான காங்கோவில் 17 பேர் எபோலாவின் தாக்கத்தால் உயிரிழந்துள்ளனர் என்று தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)






# மியன்மாரில் 20 பேர் துய


நைபிட்டோ, மே 10
மியன்மாரில் கடும் மழையினால் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 20 பேர் உயிரிழந்தனர். இதுகுறித்து மியன்மார் ஊடகங்கள் தரப்பில், "மியன்மாரில் கடந்த மே மாதம் 4ஆம் திகதி முதல் கடுமையான மழை பெய்து வருகிறது.
இதில் ஹபாகாண்ட் டவுனில் ஏற்பட்ட



# ட்ரம்பின் முடிவுக்கு இஸ்ரேல் ஆதரவு!

டெல்அவிவ், மே 10
ஈரானுடனான அணுவாயுதப் பரவல்த் தடை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகுகிறது என்று ட்ரம்ப் எடுத்துள்ள முடிவுக்கு தனது ஆதரவைத் தெரிவித்தது இஸ்ரேல்.
மத்திய கிழக்கில் தனது எதிரி நாடாகவே ஈரானைப் பார்க்கிறது இஸ்ரேல். இஸ்ரேல் தன்னை வேவு பார்க்கிறது என்று பலமுறை ஈரான் அரசு அறிக்கைவிட்டுள்ளது.
ஈரானுக்கு எதிரான அணுவாயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தை அமெரிக்கா முறிக்க வேண்டும் என்று பெரியளவில் வலியுறுத்திய நாடும் இஸ்ரேலே. இந்தப் பின்னணியிலேயே அமெரிக்காவின் முடிவுக்கு ஆதரவைத் தெரிவித்தது இஸ்ரேல்.
"ட்ரம்பின் முடிவு சரியான, திடமான, துணிச்சலான, ஆரோக்கியமான முடிவு" என்று குறிப்பிட்டார் இஸ்ரேலின் தலைமை அமைச்சர் பெஞ்சமின் நெத்தன்யாகு.
மத்திய கிழக்கின் வல்லரசு யார் என்ற விடயம் இதுவரை காலமும் இஸ்ரேல், ஈரான், துருக்கி ஆகிய மூன்று நாடுகளுக்கு இடையிலான போட்டியாகவே பார்க்கப்படுகிறது. ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகிமையானது ஈரான் மீது ஏகப்பட்ட பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட காரணமாகலாம். அவ்வாறான தடைகள் ஈரானை முடக்கினால் மத்திய கிழக்கின் வல்லரசு இஸ்ரேல், துருக்கிக்கு இடையிலான போட்டியாக மட்டும் அமையலாம். (ம)





# ட்ரம்பின் முடிவு தவறான ஒன்று

## ஒபாமா சாடல்

வொஷிங்டன், மே 10
"ஈரானுடனான அணுவாயுதப் பரவல்த் தடை ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்தமை தவறான முடிவு" என்று தெரிவித்தார் அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா.
ஈரானுடனான இந்த ஒப்பந்தம் 2015ஆம் ஆண்டு கைச்சாத்திடப்படுவதற்கு மிகப்பெரும் காரணமாக ஒபாமா இருந்தார். எனவே, இந்த ஒப்பந்த விவகாரத்தில் ஒபாமாவின் நிலைப்பாடும், அவரது கருத்தும் காத்திரமானவை. இத்தகைய பின்னணியிலேயே ட்ரம்பின் முடிவைச் சாடினார் அவர்.
"அணுவாயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தை ஈரான் மீறவில்லை. அவ்வாறான நிலையில் ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டமையானது தவறான செயல்" என்று ஒபாமா மேலும் தெரிவித்தார். (ம)

தை

# யது க்கா

யுதச் சோதனைகளில் ஈடுபட்டு வருகிறது என்று குறிப்பிட்டார் அவர். இஸ்ரேலும், ஈரான் அணுவாயுதங்களைத் தயாரிக்கிறது என்பதற்குச் சான்றாக சுமார் 54ஆயிரம் ஆவணங்களை அண்மையில் வெளியிட்டது. இது ட்ரம்புக்கு மிகப்பெரிய பிடிமானத்தைக் கொடுத்தது. இதையடுத்து ஈரானுடனான அணுவாயுத ஒப்பந்தத்தின் இறுதி அறிவிப்பு நேற்று வெளியாகும் என்று அறிவித்திருந்த ட்ரம்ப், "அணுவாயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகுகிறது" என்று நேற்று அறிவித்தார்.
"எந்தப் பிடிமானமும் அல்லாமல் பயனற்ற விதத்தில் இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது" என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டார்.
(ம)

# அமெரிக்காவே உனக்குச் சாவு

## ஈரான் நாடாளுமன்றில் முழக்கம்

அணுவாயுதப் பரவல்த் தடை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகியுள்ள நிலையில், ஈரான் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமெரிக்கக் கொடிகளைக் கிழித்து "அமெரிக்காவே உனக்குச் சாவு" என்று முழக்கமிட்டனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
"ஈரானுடன் ஏனைய நாடுகள் ஒப்பந்தத்தைத் தொடர்கின்றன. ஈரான் அணுவாயுதத்துக்கான மூலமான யுரேனியத்தைக் கையிருப்பில் கொண்டிருந்த போது அமெரிக்காவே அதற்கு எதிராக கொதித்தெழுந்தது. தற்போது அமெரிக்கா ஒப்பந்தத்தில் இருந்து விலகியுள்ளது. இதனால் யுரேனியத்தை மீண்டும் செறிவூட்ட வேண்டிய காலம் இது என்று உணர்கிறோம். அதற்குரிய பணிகளை ஆரம்பிக்குமாறு உத்தர விட்டுள்ளேன்' என்று ஈரானின் அதிபர் ரவுகானி தெரிவித்தார். (ம)

# கிம் ஜோங் – ஜி ஜின் பிங் நேற்றுமுன்தினம் சந்திப்பு



பீஜிங், மே 10
வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் சீன-அதிபர் ஜி ஜின் பிங் இருவரும் சீனத் தலைநகர் பீஜிங்கில் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
அணுவாயுதச் சோதனைகளை கைவிடத் தயார் என்று வடகொரியா அறிவித்ததன் பின்னர் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் தென்கொரிய அதிபர் மூன் ஜெ இன் இடையிலான சந்திப்பு அண்மையில் இடம்பெற்றது. இதைத் தொடர்ந்து கிம் - அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இடையிலான சந்திப்பு விரைவில் இடம்பெறவுள்ளது. இன்னும் மூன்று வாரங்களுக்குள் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது. அது தொடர்பான நகர்வுகள் தற்போது துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இவ்வாறிருக்க கிம் – ஜி ஜின் பிங் இடையிலான இந்தத் திடீர்ச் சந்திப்பு பன்னாட்டு உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. அமெரிக்காவுடனான சந்திப்பில் பேச வேண்டிய விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்தாலோசிக்கப்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டன.
(ம)



# ல் நிலச்சரிவு யரச் சாவு

நிலச்சரிவில் சிக்கி 20 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இன்னும் பலர் நிலச்சரிவில் சிக்கி உள்ளதால் மீட்புப் பணிகள் நடந்து வருகின்றன. இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம்" என்று செய்தி வெளியிட்டன.
(ம)



உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அடுத்த கட்டம் என்ன ?

தமிழர்களின் வாக்குகளால் ஆட்சி பீடமேறிய 'நல்லாட்சி' அரசின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, தனது கொள்கை விளக்க உரையில் தமிழர்களின் தலையில் மிளகாய் அரைத்து விட்டுப் போயிருக்கின்றார். சிறிலங்காத் தீவு சுதந்திரமடைந்தது முதல் சந்தித்து வரும் இனப்பிரச்சினைக்கு, தீர்வு காண்பதற்கு முக்கியத்துவம் கொடுக்காத – தொட்டும் பார்க்காத அரச தலைவரின் கொள்கை விளக்க உரை, முழுக்க முழுக்கச் சிங்கள தேசத்தின் நலன்சார்ந்து, பொருளாதார சிக்கல்களுக்கு விடை தேடும் வகையில் அமைந்திருந்தது.

நீண்ட நெடிய போராட்டத்தால் பலலட்சம் உயிர்களைப் பறிகொடுத்து, இன்னமும் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க முடியாமல் இந்தத் தீவில் தவித்துக் கொண்டிருக்கும் தமிழர்கள், ஜனநாயக வழியில் தீர்வு கிடைக்கும் என்று நம்பியே, 'நல்லாட்சி'யின் கதாநாயகனுக்கு 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி வாக்களித்திருந்தார்கள். ஆமையை விட மெதுவான வேகத்தில் அரசியல் தீர்வுக்கான சில கருமங்கள் முன்னெடுக்கப்பட்டன. மலை போன்று உயர்ந்த தடைகள் ஒவ்வொன்றையும் தட்டுத் தடுமாறி கடந்து வந்தது அரசியல் தீர்வு முயற்சி.

உள்ளூராட்சித் தேர்தலுடன் இந்தக் கருமங்கள், காணாமற் போனோர் பட்டியலில் சேர்ந்து கொண்டது. அதனை மீள ஒப்பேற்றுவதில் தமிழர் தரப்பான, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கணிசமான அளவு முயற்சிகளை முன்னெடுத்தாலும், அது நகரவில்லை. அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் உரை, இந்த முயற்சிகள் இனி நகரப் போவதில்லை என்பதையே கட்டியம் கூறுகின்றன.

எஞ்சிய இரண்டு ஆண்டு காலப்பகுதிக்குள், தமிழ் மக்கள் எதிர்பார்க்கும், அரசியல் தீர்வோ, ஐ.நா. தீர்மானம் நடைமுறைப்படுத்தலோ நடக்காது என்பது தெளிவாகிவிட்டது. இனித் தமிழர்கள், தமிழ் மக்களுக்கு தலைமை தாங்கும் அரசியல் தரப்புக்கள் என்ன செய்யப் போகின்றன ?

பொருளாதாரநலனுக்காக, சிங்களத் தேசத்துக் கட்சிகளை அணிதிரள அரச தலைவர் அழைக்கின்ற அதேவேளையில் மறுபுறம், அந்தச் சிங்கள தேசத்தால் சின்னா பின்னமாக்கப்பட்ட நாங்கள், எங்கள் பெருந்துயரின் அடையாளமாக இருக்கின்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வைக் கூட ஒன்றித்து ஒரு குடையின் கீழ் கடைப்பிடிக்க மறுக்கின்றோம். ஆளுக்கொரு பக்கம் அணியாகப் பிரிந்து நின்று, சாவடைந்த உடல்கள் மீது நாட்டியம் ஆடுகின்றோம்.

இந்த அரசு தமிழ் மக்கள் நலன்சார்ந்து, தமிழ் மக்களின் வேணவாவான அரசியல் தீர்வையே நிறைவேற்றாத சூழலில் நாம் என்ன செய்யப் போகின்றோம் ? தமிழர் தரப்பிடம் இருக்கும் திட்டம்தான் என்ன ?

கொழும்பு அரசு அரசியல் தீர்வை வழங்கும் என்று இனியும் நம்பி, அவர்களுக்கு முட்டுக் கொடுப்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறுத்தவேண்டும். இந்த அரசால் எதுவும் ஆகப் போவதில்லை என்று வெட்டையாய் தெரிந்த பின்னரும், அவர்களுக்கு ஆதரவு வழங்குவது தமிழர் விரோதப் போக்கே.

எங்களுக்குள் கன்னை பிரிந்து சண்டை பிடித்துக் கொண்டிருந்தால் நடக்கப் போவது எதுவுமில்லை. பாலபாடத்தில் படித்த ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்தாவது ஓரணியில் தமிழர் தரப்பு திரளவேண்டியது காலத்தின் அவசியமாகியிருக்கின்றது. ஒற்றுமையாய், தமிழர்களின் விடிவுக்கான அடுத்த தெரிவு என்ன என்பதை ஆராய வேண்டும்.

அதைவிடுத்து மீண்டும், இந்த அரசு தீர்வு தரும் என்று கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு வழங்குவதும், கூட்டமைப்பை விமர்சித்துக் கொண்டு மாற்றுத் திட்டங்களை முன்வைக்காமல் அரசியல் நடத்துவதும் என்று தமிழ்த் தலைமைகளின் போக்குச் செல்லுமானால், தமிழர்களைக் கடவுளால்கூட காப்பாற்ற முடியாது.



# அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாகவே நாட்டின் இனப்பிரச்சினைக்கான தீர்வு

இந்துமதி



நாட்டின் இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதில் தெற்கு அரசியல்வாதிகள் தொடர்ந்தும் அலட்சியப் போக்கையே கடைப்பிடித்து வருகின்றனர். அதிலும் தற்போது ஆட்சியில் உள்ள அரசு, இனப் பிரச்சினையை மறந்து விட்டது போன்று நடந்து கொள்கின்றமை, தமிழ் மக்களைப் பெரும் ஏமாற்றத்துக்குள் தள்ளி விட்டுள்ளது.

**தெற்கு அரசியல்வாதிகள் நாட்டு நலனில் அக்கறை செலுத்துவதில்லை**

இனப்பிரச்சினையால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நாடும் வளர்ச்சி கண்டதாகச் சரித்திரம் கிடையாது. இந்த நிலையில், கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக இனப்பிரச்சினையால் அவதிப்படும் இந்த நாட்டில் அபிவிருத்தியை எந்த வகையிலும் எதிர்பார்க்க முடியாது.

தெற்கு அரசியல்வாதிகள் பதவிச்சுகத்தை அனுபவிப்பதிலும், தத்தமது நிதிவளத்தைப் பெருக்கிக் கொள்வதிலும் காட்டுகின்ற அக்கறையை நாட்டு நலனில் காட்டுவதில்லை. அது மட்டுமல்லாது இனவாதப் போக்குடன் இவர்கள் இனப்பிரச்சினையை அணுகுவதால், அதற்கு உரிய தீர்வொன்றைக் காண்பதற்கு இவர்களால் முடியவில்லை. வெறுமனே 13,18,19.20 என இலக்கங்களைக் குறிப்பிடுவதால் அதை மக்களும் புரிந்து கொள்ள மாட்டார்கள் என்பதுடன், பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும் அவை அமைந்து விடாது.

அரசமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 13 ஆவது திருத்தத்தின் மூலமாகத் தமிழர்களின் பிரச்சினைகள் யாவும் தீர்க்கப்பட்டு விடுமென எதிர்வு கூறப்பட்டது. இதன் மூலமாகவே இரண்டாகக் காணப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே மாகாண சபையின் நிர்வாகத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. தமது தாயக பூமி இணைக்கப்பட்டதில் தமிழர்கள் அளப்பறிய மகிழ்ச்சியும் அடைந்தார்கள். ஆனால் ஒரு நீதிமன்றத் தீர்ப்பின் மூலமாக, இந்த மகிழ்ச்சி நீடிக்க விடாமல் தடுக்கப்பட்டது. ஆனால் தென்னிலங்கை அரசியல்வாதிகள் அரசமைப்பில் 13 ஆவது திருத்தத்தை தமது கையில் எடுத்து வைத்துக் கொண்டு இதன் மூலமாகத் தமிழர் கொண்டு இதன் மூலமாகத் தமிழர்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு விடுமெனக் கூறி ஏமாற்றி வந்தனர். முன்னாள் அரச தலைவரான மகிந்த ராஜபக்ச, இந்தியா உள்ளிட்ட அயல் நாடுகளுக்குச் செல்லும்போதெல்லாம் இதைக் கூறியே சமாளித்து வந்தார். 13 க்கு அப்பால் செல்வதற்கும் தாம் தயாராக இருப்பதாகவும் கூறினார். காலப்போக்கில் இது 13 பிளஸ் என அழைக்கப்பட்டது. ஆனால் செயலளவில் தமிழ் மக்களுக்குச் சாதகமான செயற்பாடுகள் எதுவுமே நடந்து விடவில்லை.

**அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் குறித்து விடுதலைப்புலிகள் அக்கறை காட்டவில்லை**

1987 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே கைச்சாத்தான இந்திய இலங்கை ஒப்பந்தத்துக்கும், இந்த 13 ஆவது திருத்தத்துக்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. இந்தியப்படைகள் இலங்கை மண்ணில் காலடி எடுத்துவைப்பதற்கும் இதுவே வழி கோலியது. விடுதலைப் புலிகள் இந்திய இலங்கைஒப்பந்தத்தை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்தனர். ஆனால்தமிழ்த் தலைவர்களில் சிலர் இதற்கு ஆதரவு வழக்கவும் செய்தனர். ஆனால் விடுதலைப் புலிகள் எடுத்த நிலைப்பாடு சரியானதென்பது பின்னர் நிரூபணமானது.

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வாக அமையவில்லையெனக் கூறியுள்ளமை காலம் கடந்த ஒன்றாகும். சுமார் 31 ஆண்டுகளுக்குப்பின்னர் அவரது வாயிலிருந்து இந்த வார்த்தைகள் வெளிவந்துள்ளன. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தராத 13 ஆவது திருத்தத்தையும் சில இனவாதிகள் எதிர்க்கவே செய்தார்கள் என்பதை இங்கு குறிப்பிட்டு ஆகத்தான் வேண்டும்.

**ஒரு நாட்டின் அரசமைப்பு அந்த நாட்டின் வேதம் என மதிக்கப்படுகிறது**

ஒரு நாட்டின் அரசமைப்பு, அந்த நாட்டின் வேதமெனவே கருதப்படல் வேண்டும். ஏனென்றால் அரசமைப்பின் ஊடாகவே சகல அரசியற் செயற்பாடுகளும் இடம் பெற்று வருகின்றன. ஆனால் சில தன்னலம் மிக்க அரசியல்வாதிகள், தமது சுய நலத்துக்காக அரசமைப்பில் அடிக்கடி திருத்தங்களை மேற்கொள்ளத் தலைப்படுகின்றனர். தாம் மூன்றாவது தடவையும் அரச தலைவருக்கான தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பதற்காக நாடாளுமன்றில் தமது கட்சிக்கிருந்த பெரும்பான்மையைப் பயன்படுத்தி அரசமைப்பில் திருத்தத்தைக் கொண்டு வந்தார். இதுவே 18 ஆவது திருத்தமென அழைக்கப்படுகின்றது. பின்னர் கொண்டுவரப்பட்ட 19 ஆவது திருத்தத்தின் மூலமாக இவை இல்லாமற் செய்யப்பட்டன. தற்போது 20 ஆவது திருத்தம் தொடர்பாகப் பலரும் கருத்து வெளியிட்டு வருகின்றனர். இது நிறைவேற்றப்பட்டு விட்டால், மகிந்த ராஜபக்ச மீண்டும் தேர்தலில் போட்டியிட முடியுமெனக் கூறப்படுகின்றது.

> ஒரு நாட்டின் அரசமைப்பு, அந்த நாட்டின் வேதமெனவே கருதப்படல் வேண்டும். ஏனென்றால் அரசமைப்பின் ஊடாகவே சகல அரசியற் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றன. ஆனால் சில தன்னலம் மிக்க அரசியல் வாதிகள் தமது சுய நலத்துக்காக அரசமைப்பில் அடிக்கடி திருத்தங்களை மேற்கொள்ளத் தலைப்படுகின்றனர்.

இவ்வாறு சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு அரசமைப்பில் அடிக்கடி திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக எந்தத் திருத்த மும்இடம் பெறவில்லை.

இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டுவிட்டால் நாடு வளமான எதிர்காலத்தை நோக்கிய பாதையில் பயணிக்க முடியும். ஆனால் நாம் ஒற்றையாட்சியா? கூட்டாட்சியா? என விவாதம் நடத்திக் கொண்டிருக்கிறோம். புளித்துப்போன ஒன்றைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடுகின்றோம். இதைவிடுத்து அனைவரும் ஒன்றிணைந்து, அரசமைப்பில் உரிய திருத்த ங்களை றேகொண்டு சகல இனத்தவருக்கும் சம உரிமை கிடைக்கும் வகையிலான தீர்வொன்றைக் காண வேண்டும். இதில் தவறுவோமானால், இந்த நாடு ஒரு போதுமே உருப்பட மாட்டாது என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

சேரலாதன்

மகிந்தவின் ஆட்சிக்கு ஆள்களைச் சேர்க்கின்ற கைங்கரியத்திலும் எம்மவர்களில் சிலர் ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது. இவர்கள் இன உணர்வு என்பதையே அறியாதவர்களாக இருக்கிறார்கள். இனத்தை விற்றுப் பிழைப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள். எட்டப்பனையும், காக்கை வன்னியனையும் இவர்களோடு ஒப்பிட்டுக் கூறமுடியும்.



# பேரினவாத கட்சிகளால் உருவாகின்றது பேராபத்து

தமிழ் மக்களை வளைத்துப் போடுகின்ற முயற்சிகளில் தென்னிலங்கையைச் சேர்ந்த கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. ஏற்கனவே ஐக்கிய தேசியக்கட்சியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் தமிழர்களிடையே ஊடுருவியுள்ள நிலையில் மக்கள் விடுதலை முன்னணியும் அந்த முயற்சியில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

**வடக்கில் கால்பதிக்க முயலும் ஜே.வி.பி.தரப்பினர்**

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய அந்தக் கட்சியின் தலைவரான அநுர்குமார திசநாயக்க " வடக்கு மக்களும் எம்முடன் இணைந்து உரிமைகளுக்கான போராட்டத்தில் ஈடுபடவேண்டும்" என அழைப்பு விடுவித்துள்ளமை இதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

தமிழர்களின் உரிமைக்கான போராட்டங்களை இந்தக் கட்சி எப்போதுமே எதிர்த்து வந்துள்ளது. தமிழ் மக்களுக்கு எவ்வித உரிமையும் வழங்கக் கூடாது என்பதில் குறியாகவே இருந்துள்ளது. முன்பு சுனாமி பேரிடர் இடம்பெற்றபோது அதற்குப் பிந்திய மீள்கட்டுமானச் செயலணியில் விடுதலைப் புலிகளும் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இதற்கு எதிராக நீதிமன்றம்வரை சென்று புலிகளை அந்தச் செயலணியில் இருந்து நீக்கிய பெருமையை இந்தக் கட்சி கொண்டுள்ளது. வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டதற்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்ததும் இந்தக் கட்சிதான் என்பதை எவருமே மறந்துவிட முடியாது. இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள், இனவாதத்தைக் கக்குவதிலும் முன்னணி வகித்தார்கள். தற்போது புதிய கட்சியொன்றை அமைத்து அதன் தலைவராக இருக்கும் விமல் வீரவன்ச ஒரு கடைந்தெடுத்த இனவாதி என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். இவர்கூட ஜே.வி.பியில் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இன்று அநுரகுமார திசநாயக்க தம்முடன் இணைந்து செயற்படுமாறு தமிழர்களை அழைப்பது அவரது சுயநலத்தையே காட்டுகின்றது. தமிழர்களின் வாக்குகளைக் கவர்கின்ற கபடத்தனத்தையும் இது எடுத்துக் காட்டுகின்றது. இவரது மாய வலையில் சிக்கிக் கொள்ளாது தமிழர்கள் தப்பித்துக் கொள்ள வேண்டும்.

**ஏற்கனவே வடக்கில் கடை விரித்துள்ள கொழும்பின் முக்கிய அரசியல் கட்சிகள்**

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் வடக்குக் கிழக்கில் கணிசமான வாக்குகளைப் பெற்றன. சில சபைகளின் ஆட்சிப் பொறுப்பும் அவற்றுக்குக் கிடைத்தன. தமிழ்க் கட்சிகளின் எதிர்காலத்துக்கு இவை நல்லதாகத் தெரியவில்லை. அதுமட்டுமல்லாது, தமிழ்ப் பிரதேசங்களில் பேரினவாதிகள் ஊடுருவுவதற்கும் இது வழிகோலிவிடும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும், ஐக்கிய தேசியக் கட்சியையும் தமிழர் பகுதிகளில் முன்னிலைப்படுத்துவதில் தமிழர்கள் சிலரே தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதற்காக வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்ற இவர்கள், சில உதவிகளைச் செய்வதிலும் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் பசப்பு வார்த்தைகளால் ஈர்க்கப்பட்டவர்கள் இவர்களுக்குப் பின்னால் அலைந்து திரிவதையும் காணமுடிகின்றது. ஆனால் இந்த இரண்டு கட்சிகளும் இணைந்து அமைந்துள்ள அரசு, தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டதா? என்பதை இவர்கள் சிந்தித்துப் பார்ப்பதாகத் தெரியவில்லை. மாறி மாறி ஆட்சிக்கு வந்த இந்த இரண்டு கட்சிகளும் தமிழர்களைத் தொடர்ந்தும் ஏமாற்றியே வந்துள்ளன. சிறுபான்மையின மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இனக்கலவரங்களுக்கும் இந்தக் கட்சிகள்தான் பொறுப்புக் கூற வேண்டும். இந்த நிலையில் தமிழர்கள் தேசியக் கட்சிகளை ஆதரித்து நிற்பதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

**தேர்தல்களில் தமிழர்கள் தமது பேதங்களை கைவிட்டு ஒன்றிணைந்து செயற்படுதல் அவசியம்**

உள்ளூராட்சித் தேர்தல் போன்று ஏனைய தேர்தல்களிலும் தமிழர்கள் பொறுப்பில்லாத வகையில் நடந்து கொண்டால் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதித்துவம் பறிக்கப்பட்டுவிடும் என்ற உண்மையை எம்மவர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்.

மகிந்தவின் ஆட்சிக்கு ஆள்களைச் சேர்க்கின்ற கைங்கரியத்திலும் எம்மவர்களில் சிலர் ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது. இவர்கள் இனவுணர்வு என்பதையே அறியாதவர்களாக இருக்கிறார்கள். இனத்தை விற்றுப் பிழைப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள். எட்டப்பனையும், காக்கை வன்னியனையும் இவர்களோடு ஒப்பிட்டுக் கூறமுடியும்.

தமிழர்களிடையே ஆயிரம் வேறுபாடுகள் இருக்கலாம். அரசியல் ரீதியில் அவர்கள் பிரிந்து நிற்கலாம். ஆனால் தமிழ் மக்கள் அந்நிய சக்திகளிடம் சரணடைவதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழர்களின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு தென்னிலங்கை அரசியல் கட்சிகள் தமிழர் பிரதேசங்களில் கடைவிரித்துத் தமது வியாபாரத்தை நடத்துவதற்கான அறிகுறிகள் மிகத் தெளிவாகத் தெரிகின்றன. இதை நாம் அனுமதிப்பதால் எமது எதிர்காலச் சந்ததிக்கே பெரும் பாதிப்பு ஏற்படுமென்பதை இவர்கள் உணராது விடுவார்களாயின் அதைவிட வேறொரு முட்டாள்த்தனம் இருக்கவே முடியாது.

## ஆசிரியருக்கான கடிதம்

# எவர் குற்றியானாலும் அரிசியானால் நன்மையே

தென்மராட்சி கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான கட்டடத்தை அழிய விடலாமா? என்ற தலைப்பில் தென்மராட்சி கிழக்கைச் சேர்ந்த வாசகரொருவர் அனுப்பி வைத்த கடிதம் கடந்த 2018.04.24ஆம் திகதிய உதயன் பத்திரிகையின் ஆசிரியருக்கான கடிதம் பகுதியில் பிரசுரமாகியிருந்தது. அது விடயம் தொடர்பாக தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளரால் அனுப்பி வைக்கப்பட்ட தன்னிலை விளக்கக்கடிதம், இந்த விடயத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரத் தரப்பினரது கவனத்துக்கும், சாதகமான நடவடிக்கையை முன்னெடுப்பதற்காகவும் இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

இது விடயத்தை சாதகமான விதத்தில் பரிசீலித்து வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகம் பொருத்தமான, சமூக நலன் பயக்கத்தக்க நடவடிக்கையை மேற்கொள்ளும் என நம்புகிறோம். குறித்த கடிதத்தில் பின்வரும் விடயங்கள் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

"மேற்படி விடயம் தொடர்பில் 24.04.2018 செவ்வாய்க்கிழமை உதயன் பத்திரிகையின் 17வது பக்கத்தில் வந்துள்ள செய்தி தொடர்பில் கீழ்க்காணும் தகவல்கள் தரப்படுகின்றன. எமது சங்கம் 2015.12.27ஆம் திகதிய வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தில் 2016ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவிருக்கும் புதிய முயற்சிகளில் கிளைக் கட்டடங்கள் புனரமைத்தல் என்ற விடயம் பொதுச்சபையால் அங்கீகாரமளிக்கப்பட்டதற்கிணங்க 2016.09.17ஆம் திகதிய இயக்குனர் சபைக்கூட்டத்தில் E/8 வடவரணிக்கிளை வளாகத்திற்கு உட்பட்ட எல்லைக்குள் சங்கத்திற்குச் சொந்தமான குறித்த கட்டடத்தை புனரமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டு, எமது சங்கம் 04.10.2016 திகதிய கடித வாயிலாக யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரூடாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும் (வடமாகாணம்) அவர்களுக்கு விண்ணப்பித்து உரிய முன்னனுமதியைக் கோரியிருந்தது.

இதற்கு யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் 2017.02.02ஆம் திகதியிட்ட கடித மூலம், சங்க பொதுச்சபைத் தீர்மானத்தில் குறித்த கட்டடத்தைப் புனரமைப்பது என தீர்மானம் எடுக்கப்படவில்லை எனவும், இந்தக்கட்டடத்தைப் புனரமைக்க செலவீனம் மேற்கொள்வதால் என்ன நன்மை? என்று கோரியிருந்ததுடன், எமது சங்கம் சமர்ப்பித்த கோவையையும் திருப்பி அனுப்பியுள்ளனர். குறித்த சங்கக் கட்டடத்தை அழிவில் இருந்து மீட்டு புனரமைக்கவும், இதனை பயன்பாட்டுக்கு உட்படுத்தவும் எமது சங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கையை 2015/2016 காலப்பகுதிகளில் எடுத்திருந்தும், பலன் எதுவும் கிட்டவில்லை. இது விடயத்தில் சங்கத்தால் தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சினிமா



# மீண்டும் இணைகின்றனர் சிவகார்த்திகேயன் நயன்தாரா

வேலைக்காரன் படத்துக்குப் பிறகு சிவகார்த்திகேயன், பொன்ராம் இயக்கத்தில்சீமராஜாபடத்தில்நடித்துவருகிறார். இந்தப்படத்தைஅடுத்து எஸ்.கே13படத்தில்நடிக்கவுள்ளார். இந்தபடத்துக்குப்பிறகுஎஸ்.எம்.எஸ். ராஜேஷ் இயக்கும் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளார்.

இந்த படத்தின் கதாநாயகியாக நயன்தாரா ஒப்பந்தமாகி இருப்பதாக படக்குழு அதிகார பூர்வமாகத் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே ராஜேஷ் இயக்கத்தில் 'பாஸ் என்கிற பாஸ்கரன்' படத்தில்நயன்தாராநாயகியாகநடித்திருந்தார். மேலும்சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளியான வேலைக்காரன் படத்திலும் அவர் தான் கதாநாயகியாக நடித்திருந்தார்.

இந்த நிலையில் சிவகார்த்திகேயனுடன் மீண்டும் இணைகிறார் நயன்தாரா.

எத்தனை துன்பங்கள் எதிரே வந்தாலும், அதனை எதிர்த்துப் போரிட்டு வெற்றிகாணும் மனது, ஏனோ! எமக்குப் பின்னால் இருந்து தாக்கும் துரோகத்திடம் மட்டும் தோற்றுவிடுகிறது.

டாக்டர், எனக்கு உங்க ஆஸ்பத்திரியில 6 ஆம் நம்பர், 100 ஆம் நம்பர் தவிர எது வேணுமானாலும் கொடுங்க!'
ஏன்?....'
ஆறிலும் சாவு, நூறிலும் சாவு என்று சொல்றாங்களே!' அதில தான் டாக்டர்.





# இன்றைய நாள்

**மேடம்:** நண்பரின் ஆலோசனையை ஏற்று முன்னேறுவீர்கள். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். இலாபம் உயரும்.

**இடபம்:** பிறரது விமர்சனத்தைப் பொருட்படுத்த மாட்டீர்கள். முக்கிய செயல்களை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மற்றவர் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**கடகம்:** எதிர்பார்ப்புடன் சிலர் நெருங்கி வருவர். கூடுதல் உழைப்பு தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி நிலையை உருவாக்கும். வருமானம் அளவாக இருக்கும். ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும்.

**சிங்கம்:** சூழ்நிலை அறிந்து செயல்படுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் ஆதாயம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்க வாய்ப்புண்டு.

**கன்னி:** உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். தாரள பணவரவு கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**துலாம்:** மற்றவர் விமர்சனத்தால் வருத்தம் தரலாம். தொழில் வியாபாரத்தில் இருக்கிற நன்மையைப் பாதுகாப்பது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாறுதல் உண்டாகும்.

**விருச்சிகம்:** உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். இலட்சியம் எளிதில் நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிரிக்கும்.

**தனுசு:** குடும்ப விஷயம் பிறரிடம் பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் இருக்கிற அனுகூலம் பாதுகாக்கவும். பெண்களுக்கு செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும்.

**மகரம்:** குடும்ப பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு நிறைவேறும். அதிக பணவரவுடன் நிலுவைப் பணமும் வசூலாகும்.

**கும்பம்:** நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் கிடைக்கும். தெய்வ அருளால் சுப விஷயத்தில் நல்ல முடிவு கிடைக்கும். தொழில்வியாபாரத்தில்வருமானம்உயரும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை சந்தித்தாலும் வருமானம் கூடும்.






## சிந்திக்க....

நாம் எதை ஆதாரமாக வைத்து ஆணவப் படுகிறோம்

**எமது பதவியா?**
**எம் சேர்த்த சொத்து சுகங்களா?**
**எமது படிப்பா?**
**எமது வீடா?**
**எம் முன்னோர்களின் ஆஸ்தியா?**
**எமது அறிவா?**
**எமது பிள்ளைகளா?**
**எது எம்மைக் காப்பாற்றப் போகிறது?**

குருதி சுருங்கி, எமது சுற்றமெல்லாம் ஒதுங்கிய பின் எதுவுமே எம்மைக் காப்பாற்றப் போவதில்லை

பசித்தவனுக்கு உணவு கொடுத்து, உடை இல்லாதவனுக்கு உடை கொடுத்து, எல்லாரையும் நேசித்து , மனத் தூய்மையான வாழ்க்கையை வாழுபவர்கள் மட்டுமே என்றென்றும் வாழ்பவர்கள்.

அப்பாவி ஆண்களை எப்பொழுதும் கேள்வி கேட்டு 'டீஸ்' செய்வதால் பெண்களை லேடீஸ் எனவும்



அப்பவும் கூட அன்புடனும் அமைதியான சிரிப்புடனும் 'ஜென்' மனநிலையில் அதை எதிர்கொள்வதால் ஆண்களை 'ஜென்'ஸ் எனவும் அழைக்கிறார்கள்.

# கல்லறை வாசகம்

*உலகப்பேரழகிகிளியோபாட்ராவின் கல்லறை வாசகம்*
உலகத்திலேயே அழகான பிணம் இங்கே உறங்கிக்கொண்டு இருக்கிறது. நல்ல வேளை இவள் பிணமானாள், இல்லாவிட்டால் இந்தக் கல்லறைக்குள் ரோமாபுரி சாம்ராஜ்யமே பிணமாகியிருக்கும்.

*மகா அலெக்சாண்டரின் கல்லறை வாசகம்*
இந்த உலகம் முழுவதுமே போதாது என்று சொன்னவனுக்கு , இந்தக் கல்லறைக் குழி போதுமானதாக ஆகிவிட்டது.

*ஒரு தொழிலாளியின் கல்லறை வாசகம்*
இங்கே புதை குழியில் கூட இவன் கறையான்களால் சுரண்டப்படுகிறான்.

*அரசியல்வாதியின் கல்லறையில்*
தயவு செய்து இங்கே கை தட்டி விடாதீர்கள், இவன் எழுந்து விடக்கூடாது.

ஹோட்டல்ல சாப்பிட்டு பணம் கொடுக்கலைனா மாவு ஆட்டச்சொல்ற மாதிரி



பாங்க்ல லோன் வாங்கிட்டு பணத்தை கட்டலைனா அதே பாங்க்ல ஒரு வேலை கொடுத்தா நல்லது...

# அன்னை நாகா பூட் சிற்றி

ANNAI NAGAA FOOD City




இப்பரிசுக் கூப்பனுக்கு மின்சார உபகரணங்கள், சமையலறை பொருட்கள், பரிசுப் பொருட்கள் மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள் என்பவற்றை பெற்றுக் கொள்ளலாம்.




ANNAI NAGAA FOOD City

யாழ்ப்பாணம்.
✆ : 021 492 7081
கிளை : நல்லூர்.
✆ : 021 492 7082



யாழ் மாநகரில்...

# வெளிநாட்டு மருத்துவப் பட்டப்படிப்பிற்கான

## கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு

12th May 2018
10.00 am

இடம் ஞானம் ஹோட்டல்

அனுமதி இலவசம்

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

தகவல்களுக்கு : 0777 444 407

(C 6681)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 06 . 03 . 1920



இறைவன் திருவடி நிழலில் 21 . 04 . 2017

## நமசிவாயம் செல்லமுத்து

திதி:- 10.05.2018)

அம்மா நீங்கள் காலமாகவில்லை. காலத்தை வென்று காசினியில் எமக்கு கதிர் ஒளியாய் வழிகாட்டும் தேவதை! தாயே உன் திருவுடல் மறைந்து ஓராண்டு ஓடியும், ஒரு கணமேனும் உன் திருநாமம் மறவாத உன் பிள்ளைகள். இன்று நீங்கள் ஐயனாரின் பாதம் பற்றிய நாளை நினைவு கொண்டு நிற்கின்றோம். 97 ஆண்டுகள் வாழ்ந்து நாங்கள் உங்களுக்குப் புனித சேவை செய்து புனிதமடைய வழிதந்த தாயே! எங்களுக்கு கங்கையும் நீயே. காசியும் நீயே அம்மா! உன் பாதம் தொழுது எம்மை வழிநடத்த வேண்டி நிற்கின்றோம். அன்னையே நீ பூத்த மலர்கள் பூத்துக் குலுங்கிப் பூந்தோட்டமானதைப் பார்த்தும் கேட்டும் ரசித்து மகிழ்ந்தீர்கள். ஐயனாரை கூப்பிட்டு அத்தனை உறவுகளுக்கும் ஆசியை வழங்கி வழங்கி வாழ்த்தினீர்கள். மனித குணம் மறைந்த தெய்வநிலை மேலோங்கி எமக்குத் தேவதையாய் ஆகினீர்கள். தென்னையும் மாவும். செழித்து நிற்கும் அனலை மண்ணில் பொன்போலே புதைந்து கிடக்கின்றாய் ஐயனாரின் பொற்பாதத்தில் இது ஐயமில்லை அம்மா ஐயமில்லை. ஐயனாரின் திருவடியில் இளைப்பாறும் எங்கள் அன்னையின் ஆன்மா சாந்தியடைய எங்கள் ஆயிரம் கோடி நமஸ்காரங்கள்.

அனலை தீவு,
5ஆம் வட்டாரம்,
ஐயனார் கோயிலடி.

(CS/16443)(11,17)

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
கொப்பாட்டப்பிள்ளைகள்.

# நான்காம் ஆண்டு நினைவு

மலர்வு 27 . 10 . 1931



உதிர்வு 24 . 04 . 2014

## அமரர் கனகர் சிவசம்பு

திதி - தசமி

காலங்கள் தோறும் உங்கள் மடிதேடி
கலங்கும் எங்கள் மனமே
வரும் காற்றினிலும்
பெரும் கனவிலும்
நாம் காண்பது உங்கள் முகமே



நீங்கா நினைவுகளுடன்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

(CS 15778)(14.17)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு உண்டு

ஊர்க் கோழி, பிறவுண்லேயர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

**076 405 6861**

## வாகனம் வாடகைக்குண்டு

TATA ZENON வாகனம் வாடகைக்கு விடப்படும் பொருள்கள் விநியோகத்திற்கு

**077 318 6561, 076 523 5012**

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (12.04.2018) வியாழக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர் திருமதி**

**நாகேஸ்வரி நவரத்தினராசா**

(யா/ வேம்படி உயர்தர மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியர்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர் வரும் (12.05.2018) சனிக்கிழமை.
மதியபோசனம் 13.05.2018 முற்பகல் 11.00 மணியளவில் NK Function Hall Urelu இல் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஊரெழு மேற்கு, ஊரெழு. 077 810 6673, 077 040 9530 — குடும்பத்தினர்.

(CS 16483/15/17)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 29.03.2018 அன்று
சிவபதமடைந்த

**அமரர் சசிகுமார் சஜீவன் (றாயு)**


அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.05.2018) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் வெள்ளை கடற்கரை (சாட்டி) மண்டபத்திலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 12.05.2018 சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வேலணை கிழக்கு,
3 ஆம் வட்டாரம்.

மலைமாணிக்கம்
குடும்பத்தினர்.

(CS 16459)(4.17)

## மரண அறிவித்தல்



## விஸ்வநாதன் சிவஞானசேகரம்

யாழ் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கீத கலா பூஷணம், பண்ணிசைவாணர், கலாவித்தகர், கலைஞானச்சுடர், செல்விசைக்கலைஞர், ஓய்வுநிலை இசை ஆசிரியர்(யாழ் பரியோவான் கல்லூரி), பொருளாளர் வட இலங்கை சங்கீதசபை, யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீடம் வருகை விரிவுரையாளர் விஸ்வநாதன் சிவஞானசேகரம் 08.05.2018 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வநாதன் - இலட்சுமிஅம்மா தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவயோகராணியின் அன்புக் கணவரும் தர்ஷிலா(கனடா), நிக் ஷலா(ஆசிரியர் - சிமாட் கிட்ஸ்), கலைவாணி(விவசாயபீடம் - யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவராம்(கனடா), திருவானந்தன்(பிரதேச செயலகம் - மருதங்கேணி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ரிஷ்வினின் அன்புப் பேரனும் திருமதி விக்னேஸ்வரி கந்தையா (ஓய்வு நிலை ஆசிரியை), திருமதி சி.மங்கயற்கரசி(ஓய்வு நிலை ஆசிரியை) மற்றும் காலஞ்சென்றவர்களான சிவராஜசிங்கம், சிவானந்தராசா, சிவதாசன், சிவரூபன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வநாயகி, ஆதிரை, சிவநேசன், மற்றும் காலஞ்சென்றவர்களான மனோராணி, கந்தையா, அன்னலட்சுமி, சிவராசா மற்றும் நேசமலர், ஞானமலர், பரமசிவம், பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற தம்பிமுத்து, இராசையா, பேராயிரவர், விஜயலட்சுமி, இந்திராதேவி ஆகியோரின் உடன்பிறவாச்சகோதரரும்சிவதாசன், சிவதர்ஷினி, சிவதர்மினி, கபிலன், நவநீதன், நந்தகுமார் ஆகியோரின் சிறியதந்தையும் சிவானுஜன், பிரணவி ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2018) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், பெரியோர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

(CS 16472) (14,17)

**021 205 3378/ 076 669 5217**

## சேவை நலன் பாராட்டு



யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகஸ்தராகக் கடந்த 29 ஆண்டுகளாகப் பணியாற்றி இன்று (10.05.2018) வியாழக்கிழமை தனது சேவையில் இருந்து ஓய்வுபெறும்

**குமாரசாமி சிறிமுருகன்**

Congratulations

அவர்களை நீண்ட ஆயுள் பலத்துடன் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்

**தாதிய உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.**

(cs.16474) (13.17)

## கண்ணீர் அஞ்சலி

சங்கத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய முன்னாள் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலரும் தற்போதைய கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலருமான உயர்திரு. சி.சத்தியசீலன் அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி**

**மங்கையர்க்கரசி சிவபாதசுந்தரம்**

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முல்லையடி,
பளை.

நிர்வாகத்தினர்
பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கம்

(IN 6700)(10)

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

## தேவை

AIR Ticketing இல் அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.
Marketing செய்யக்கூடிய வேலையாள் தேவை.

Address:-No.160, Temple Road,
Nallur.
No.212, Kasthuriyar Road,
Jaffna.

**Tel. No:- 021 222 7666**

(IN6697)(10)

## வீடு விற்பனைக்கு

நந்தாவில் லேனில் அமைந்துள்ள 4½ பரப்புக் காணியில் உள்ள மாடிவீடு விற்பனைக்குண்டு. (7 அறைகளுடன் பெரிய வீடு)

**077 187 7754**

(CS15715)(11.17)

## வேலையாள்கள் தேவை

சிமெந்து உற்பத்தி பொருள்கள் நிலையத்தில் இயந்திரம் மூலம் வேலைசெய்யக்கூடிய அனுபவமுள்ள வேலையாள்கள் தேவைப்படுகின்றனர்.
தொடர்புகளுக்கு:

**ஷன் இரும்பகம்**

பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தி.

(CS 16476)(10)

## கண்ணீர் அஞ்சலி



8.5.2018 இல் அமரத்துவமடைந்த
சங்கீதபூஷணம்-திருநெறியதமிழிசைவாணர்

**விஸ்வநாதன் சிவஞானசேகரம்**

இணுவிலில் இயங்கும் திருவாவடுதுறை ஆதீனச் சைவத்திருமுறைப் பயிற்சி மையத்தில் பண்ணிசை ஆசிரியராகப் பணியாற்றிய இவரது ஆன்மா எல்லாம் வல்ல தில்லைக் கூத்தனின் திருவடிநிழலில் அமைதிபெறப் பிரார்த்திக்கின்றோம்.

இவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.


**திருவாவடுதுறை ஆதீனப்பயிற்சி மையத்தினர்- இணுவில்**

(CS 16477)(10)

## மரண அறிவித்தல்

## செல்லன் சிவசரவணமுத்து

(உரிமையாளர் - SKT Super Store & Rasa Food & wine)



யாழ், கைதடி குமரநகரைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி, லண்டன் East Ham ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லன் சிவசரவணமுத்து 05.05.2018 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் செல்லன் - தெய்வானை தம்பதியரின் பாசமிகு மகனும், சுப்பிரமணியம் இலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மரு மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கம்சிகா, தர்ஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகேஸ்வரி, யோகேஸ்வரன், நாகேஸ்வரி, புவனேஸ்வரி, மாவீரர் நகுலேஸ்வரன், பாலசுப்பிரமணியம், கல்பனா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சின்னத்தம்பி, கோணேஸ்வரி, கனகலிங்கம், சந்திரகாசன், தசாந்திகா, ராசு, பாலசூரியன், மனோரஞ்சிதம், ஞானகௌரி, ஞானசுந்தரி, பாலகிருஷ்ணன், சந்திரிகா, திலீபன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், விஜயன், மனோகரன், சுப்பிரமணியம், தனுஷியா, விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகலனும், நிரோஜன், நிதர்ஷன், நிதுஜன், சியானா, வர்ஷினி, மிதுஷா, யதுசன், யதுசா, அதுசியா, அதிசினி, கஸ்வினி, சாருஜா, கஸ்மிதா, சதுர்ஸன், கிசாளன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், சகிகரன், கவிதா, ரஜீபன், கவிதா, துஷியந்தி, இந்துசன், எழுச்சி, ரது, துஷா, கோபி, கோபிநாத், அக் ஷயா, அனிருத், சமிரா, சாதனா ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**சுப்புறு சகோதரர்** (பிரித்தானியா - 447 905 393 144)
**மனைவி, பிள்ளைகள்** - 447 958 386 047
**கல்பனா** - 077 408 7663

(cs.16479)(13.17)

# மனித இயல்பு நீங்கி பயணம் கொள்ளாது இருப்போம்

கே. எஸ். சிவஞானராஜா



வாழ்வியலின் கோலங்கள் விசித்திரமானவை. படைப்பார்ந்து தனித்துவங்களை உடைய தனிமங்களை வெளித்தருவது. ஆறறிவு, ஐந்தறிவு ஜீவன்கள் என்ற வகை மொழிவுகளை அறிவு, பண்பியல்பு, நடத்தைக் கோலங்களின் செயலுரு, வெளிப்பாடு, சமூக இணைவு, அவற்றுக்கு இடையயேயான ஊடாட்டம், உறவு நிலையில் குழுவாச் செயற்படுதல் என்ற பரிமாணங்கள் ஊடே நிலைநிறுத்தி நிற்கின்றன. அந்தவகையிலே மனிதப் பிறவி என்பது புனிதமானது.

செயற்கரிய காரியங்களை அறிவு நிலை சார்ந்து வெற்றி கொள்ளவும், கொண்டாடவும் பணிக்கும் கதைப் பாங்குடைய பாத்திர மொழிவாக திகழ்கிறது. ஆனாலும் இந்தச் செயல் வெளி என்பது பல்வேறு சமூக இடைவினைகளையும், அது சார்ந்து பண்பாட்டின் சீரழிவுகளையும், பிறழ்வுகளையும் சிந்தனை வெளியினின்றும் நீங்கி ஆங்காங்கே அரவணைத்து நிற்கிறது. அழிவுகளை அழைத்து நிற்கிறது.

**மனித இயல்பின் திரிபு**

ஆம், மனித நடத்தைக் கோலங்கள் கால ஓட்டத்தில் மாற்றம் கண்டுகொண்டுள்ளது. மனிதம் தாண்டி நடை, உடை, பாவனை மட்டுமல்ல உடலிலும் போதைகள் சேர்மானமாகின்றன. இலவசமாக அனுபவிக்க ஏதுவானதொரு அமானுஷ, அபாக்கிய நிலையை ஏற்படுத்தி நிற்கின்றன. நவீனத்துவத்தின் செயலூக்கங்களுள் பயணம் கொள்ளும் தற்கால இளைய சமுதாயத்தையும், முதுமையின் அரும்புகளையும் கட்டிப் போட்டு நடத்தைப் பிறழ் நிலைகளுள் சிக்கித் தவிக்க வைக்கின்றன. அற்ப சொற்ப இன்பங்களைப் பகிர்ந்து கொள்வதையே போதையாளர்கள் தினமும் எதிர்பார்க்கின்றனர்.

ஆண், பெண் என்ற வேறுபாடுகள் ஒரு புறம் இருக்க, ஆணும் ஆணும் ஓரினச் சேர்க்கையில் அதீத முனைப்புடன் ஈடுபடுகின்றனர். குற்றம் என்று தெரிந்த போதும் குறிக்கப்பட்ட ஒரு தொகையினர் அதிர்ச்சி தரும் வகை யில் இதில் ஈடுபாடும் நாட்டமும் கொள்கின்றனர். வெளிநாடுகளிலிருந்து நம் நாட்டவர்க்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ள இந்தப் பழக்க தோசமானது நாடளாவிய ரீதியில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகிறது.

**செயல் வேகங்களின் இழி நிலை**

இலங்கையில் கடந்த 2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 20 ஆயிரம் ஓரினச் சேர்க்கையாளர்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 8 ஆயிரத்து 500 ஆக காணப்பட்ட ஓரினச் சேர்க்கையாளர்களின் எண்ணிக்கை இவ்வாறு சடுதியான அதிகரிப்பை வெளிக் காட்டி நிற்பது கவலைக்குரிய விடயம். இந்த நிலையிலே நடப்பாண்டில் மொத்தமாக ஐம்பதினாயிரம் பேர் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டுள்ளார்கள் என்ற தகவலை அவதானிக்கவும் ஊகிக்கவும் முடிகிறது. இந்த வகைமாதிரிகளுள் படித்தவர்களும், வளர்ந்து வரும் இளைய சமூகமும் அகப்பட்டிருக்கின்றனர் என்ற செய்திகள் மிகத் துயரமானவை.

இந்தச் செயலுக்க நிலையுள் ஆண்கள் மட்டுந்தான் ஈடுபாடு கொண்டுள்ளனர் என்று சொல்ல முடியாத அளவுக்கு நாடு முழுமையுமாக இதன் தீவரத்தன்மை பரவியுள்ளது. ஆம், படைப்பார்ந்து இறை செயலாக ஆறறிவு படைத்தவர்கள் மிருகங்களைத் திருமணம் செய்து கொள்கின்ற ஒரு பயங்கர நோய் காவியின் தன்மை வெளி ஏற்படாமலிப்பது மகிழ்ச்சிக்குரிய விடயம்.

**உயிர்கொல்லிநோய்**

ஓரினச் சேர்க்கையாளர்களிடையே தற்போது எயிட்ஸ்நோய் பரவிவருகிறது. பெண்களோடு மட்டும் பலதரப்பப்பட்ட உறவு நிலையை வைத்துக் கொள்ளும் செயல்நிலைக்கு அப்பால், ஓரினச் சேர்க்கையாளர்களிடையே மிக வேகமாக எயிட்ஸ் நோய் பரம்பலடைந்துள்ளது. அவர்களை தாக்கி மரணத்தை பரிசளிக்கிறது. எயிட்ஸ் நோய் தொற்றுக்குள்ளானவர்களில் 7 ஆயிரத்து 500 பேர் ஓரினச் சேர்க்கையாளர்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்களைச் சமூகம் இனங் கண்டுகொள்வது என்பது கடினமான காரியமாக இருந்தாலும், அவர்கள் தரிக்கின்ற நடை, உடை, பாவனை, நாட்டம், கூட்டம், வாட்டம், ஆட்டம், ஊட்டம், பேச்சு, தர்க்கம், நடத்தை வெளி என்பன கொண்டு அவதானித்து இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும். குறிப்பாக இவர்களுடைய நண்பர்களை அடையாளம் கண்டுகொண்டால் போதும் நிலமை இலகுவில் தெரியவரும்.

**அவதானம் கொள்வோம்**

இதன் விளைவால் உடல் தேய்மானம் கொள்ளும். மெலிந்து ஆவலாதியாக வெருண்டு ஓடியாடித்திரிவர். புதுப் புது நண்பர்களை அழைத்து வந்து உறவுநிலையில் நெருங்கிப் பழகுவர். உரையாடுவர். தொட்டுக் கதைப்பர். பாசாங்கு செய்வர். உண்டு உறங்குவது போல் நடித்து தம்மையே இழப்பர். உயிரையும் வருத்தி இழப்பர். என்ன சொல்ல, குறிப்பாகப் பிள்ளைகள் கவனம் பாருங்கோ..! பெற்றோர்கள் அவதானத்துடன் செயலாற்றுங்கள்.






## மரண அறிவித்தல்



பிறப்பு 20 . 05 . 1936

இறப்பு 07 . 05 . 2018

### திருமதி பரமேஸ்வரி நடராஜா

புலோலி கிழக்கு, கணையந்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி நடராஜா 07.05.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு - லட்சுமிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நடராஜாவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற மோகன், குகன்(சீசெல்ஸ்), ஜெகன்(சுவிஸ்), வாசன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் பிறேமளா, சாந்தினி, பாக்கியலட்சுமி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கௌதம், அக்ஷனா, மேதினி, அபர்ணா, அஜய் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு, காலஞ்சென்ற கமலநாதன், காலஞ்சென்ற திருஞானசம்பந்தமூர்த்தி, தங்கமணி தேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற விக்கினேஸ்வரமூர்த்தி, காலஞ்சென்ற ஞானாம்பிகை, சதாசிவமூர்த்தி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2018) வியாழக்கிழமை காலை 8.00 மணி முதல் 3.00 மணி வரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் அன்னாரின் இறுதிக்கிரியைகள் முடிவடைந்த பின் 5.00 மணியளவில் அன்னாரின் பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.19½A, அருத்துஷா வீதி, கொழும்பு - 06


தகவல்: குடும்பத்தினர்.

(IN 9222) (14.17)

075 410 5270/ 011 236 1591




# புறாவுக்கு அருளிய புரவலன்



நீர்வளமும் நிலவளமும் மிக்க பாரத நாட்டில் கங்கை நதி சூழ்ந்த பகுதி கோசல நாடாகும். இந்த நாட்டை முன்னொரு காலத்தில் சிபி என்னுமோர் அரசன் அற நெறி வழுவாது ஆண்டு வந்தான். எவ்வுயிரும் தன் உயிர் எனப் போற்றும் தயாளன் அவன்.

சிபி ஒருநாள் தன் அரண்மனையை அடுத்த பூங்காவில் ஓய்வாக அமர்ந்திருந்தான். அப்போது திடீரென்று ஒரு புறா பறந்து வந்தது. அவன் மடியில் பதை பதைத் தபடி வீழ்ந்தது. அதனைத் துரத்திக் கொண்டு ஒரு பருந்து சினந்தபடி வந்தது.

தன் உடலெல்லாம் நடுங்க அச்சம் மிகுந்து அடைக்கலம் புகுந்த புறாவைக் கண்ட மன்னன் மனம் இரங்கினான். பருந்திடமிருந்து அதனைக் காக்க உறுதி பூண்டான்.

அப்போது புறாவைத் துரத்தி வந்த பருந்து அவனிடம் பேசத் தொடங்கியது. "அரசே உணவுக்காகப் புறாவைத் துரத்தி வந்தேன். எனக்குரிய உணவை நான் பெற முடியாமல் தடுப்பது நீதியன்று. அரசர்கள் சகல உயிர்களையும் சமமாகப் பாவிக்க வேண்டும்"என்றது.

பருந்தின் பேச்சைக் கேட்ட பார்த்தீபன் அதிசயித்தான். பின்னர் பருந்தை நோக்கி, 'பருந்தே இந்தப் புறா என்னிடம் அடைக்கலம் புகுந்து விட்டது. ஆகையால் இதனைக் காக்க வேண்டியது எனது கடமையாகி விட்டது. எனவே இந்தப் புறாவைத் தவிர வேறு எதையாவது கேள்"என்றான்.

அரசன் பேச்சைக் கேட்ட பருந்து "மன்னா, நீதி தவறாத நெறிமுறையைக் கடைப்பிடிக்கும் உனது பெருமையெல்லாம் உலகம் உரைக்கக் கேட்டிருக்கிறேன். அத்தன்மையை இன்று நேரில் கண்டு கொண்டேன். ஆயினும் எனது பசிக்கு எனக்குக் கிடைத்த இரையை நான் கைவிட விரும்பவில்லை. அதனை எனக்குக் கொடுத்து விட வேண்டும்"என்றது.

அரசன் ஒரு கணம் பருந்தின் சொல்வன்மையை வியந்தான். ஆனாலும் ஒரு வழியாகத் துணிந்து "நீ சொல்வது சரிதான். ஆனாலும் என் மனம் ஒப்பவில்லை. ஆகவே புறாவுக்கு ஈடாக வேறு ஏதாவது கேள்" மறுக்காமல் தருவேன்" என்றான். பருந்தோ "அப்படியாயின் புறாவின் எடைக்கு அளவாக உன் உடலிருந்து ஊனைக் (தசை) கொடு"என்றது. அரசனோ இதனைக் கேட்டு சற்றும் தயங்காது ஒரு தராசைத் தருவித்து தனது உடைவாளை உருவினான். ஒரு தட்டில் புறாவை வைத்து தனது தசையை அறுத்தெடுத்து மறுதட்டில் வைத்தான். ஆனால் எவ்வளவு தசை வைத்தபோதும், புறாவின் தட்டு தாழ்ந்தே இருந்தது. இதனைக் கண்ட சிபி இறுதியாகத் தானே அந்தத் தட்டில் ஏறி உட்காந்தான். எடையும் புறாவுக்கு சமனானது. இதனைக் கண்டவர்கள் அரசனது அருள் நெஞ்சத்தை வியந்து போற்றினர். ஆனால் சிறிது வேளையில் பருந்துக்கு இரையாகி விடப் போகிறானே! எனக் கவலைகொண்டனர்.

இந்த நிலையில் ஒரு அதிசயம் நிகழ்ந்தது. பருந்தும் புறாவும் மறைய அங்கே இரு தேவர்கள் தோன்றி "அரசே உயிர்களிடத்து தாங்கள் செலுத்தும் அன்பின் ஆழத்தைச் சோதிக்கவே நாம் வந்தோம். வாழ்க உன் அரசு. வாழ்க உனது சேவை" என வாழ்த்தி மறைந்தனர். இதனையே வள்ளுவரும் "**அன்பிலாரெல்லாம் தமக்குரியர், அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு**" எனக் கூறியுள்ளார்.



# பொழுதுபோக்குகள்

எமக்கு ஆர்வம் இருப்பதால் மட்டும் செய்யும் விடயங்கள் தான் பொழுது போக்கு. சில பொழுது போக்குகளே எமக்கு வாடிக்கையாக, வியாபாரமாக மாறி விடவும் கூடும். சிலரது பொழுது போக்குகள் வாழ்நாள் முழுவதும் நீடித்த ஆர்வமாக இருக்கும். சிலருக்கு இது நேரத்தைக் கடத்தும் பொழுது போக்காக மட்டும் இருக்கும்.

**சமையல்:-** உங்களுக்குச் சமையல் நன்றாக வருமென்றால் சமைத்துப் பார்க்கலாம். சமைப்பதற்குப் பயன்படுத்தும் எல்லாப் பொருள்களையும் புதிதாக தூயதாக வாங்குவது உணவை என்றும் சிறந்த சுவையுடையதாக ஆக்கும். இதற்காக சமையல் புத்தகங்கள் வாங்க வேண்டியதில்லை. இணையத்தளத்தில் ஏகப்பட்ட சமையல் குறிப்புகளைப் பெறலாம்.

**தோட்ட வேலை:-** பூக்கள் காய்கறிகளை வளர்க்கும் மகிழ்ச்சியை அடைய வீட்டுத் தோட்டம் போடலாம். அது உங்களைப் பூமியுடன் இணைக்கிறது. வெட்ட வெளியில் தூயகாற்றை சுவாசித்தபடி வேலை செய்யலாம். வீட்டில் சமையலுக்கான காய்கறிகளும் இலவசமாகக் கிடைக்கும்.

**நல்ல உடல் தகுதியுடன் இருத்தல்:-** உங்களின் ஓய்வு நேரத்தை உடல் திறனை வலுப்படுத்த பயன்படுத்துவது நல்ல யோசனை 'ஜீம்'முக்குப் போக தயக்கமாக இருந்தால் நீண்ட தூர நடைப்பயிற்சி செய்யுங்கள். எல்லா உடற்பயிற்சிகளும் நல்லது தான்.

**வாசிப்பு:-** ஏற்கனவே வாசிப்புப் பழக்கமுடையவர்கள் புதிய விடயங்களைப் படிக்கலாம். நல்ல புனை கதை திரைப்படத்தை விட பரபரப்பு ஊட்டுவதாக இருக்கும். வாசகர் வட்டத்தை உருவாக்கிக் கூடி வாசிக்கலாம் வாசித்து முடிந்த பின்னால் அதுபற்றி விவாதிக்கலாம். அப்படிச் செய்வது மனதுக்கு இனிமையானதாக அமைவதுடன் அறிவும் விசாலமாகும்.

**எழுத்து:-** நீங்கள் ஒரு வளரும் எழுத்தாளர். உங்களின் ஆர்வம் கவிதையாக பாடலாக அல்லது புனைகதையாகவும் இருக்கலாம். மற்ற விடயங்களைப் போல பயிற்சி செய்யச் செய்ய இயல்பான ஒன்றாக வந்துவிடும். சிறுகதைகளையும் கவிதைகளையும் பிரசுரிக்கும் பல்வேறு பத்திரிகைகள் உள்ளன. அந்தப்பத்திரிகைகளுக்கு உங்கள் படைப்புக்களை அனுப்புங்கள்.

**செல்லப்பிராணிகள்:-** பூனை, நாய் வளர்ப்பதற்குப் பதிலாக மீன், முயல் வளர்ப்பது மாற்று ஆர்வமூட்டும் விஷயமாகும். வளர்ப்புப் பிராணிகள் நூற்றுக்கணக்கில் உள்ளன. அவற்றில் உங்களுக்கு விருப்பமானதைத் தேர்ந்தெடுத்து வளர்க்கலாம். வளர்ப்புப் பிராணிகள் என்பது வெறும்பொழுது போக்கு என்பதைத் தாண் [illegible] வ உங்களின் குடும்ப உறுப்பினர்களில் ஒன்றாக மாறிவிடும் [illegible] உள்ளது.

**கைவினைப் பொருள்கள்:-** கையால் செய்த வாழ்த்து அட்டைகள் போன்றவற்றை விற்பனை செய்தால், அவற்றை அனைவரும் வாங்கி வரவேற்பார்கள். உங்கள் கைகளாலேயே செய்வதால், அது உங்களுக்கு பெரும் திருப்தியைத் தரும். அதற்கு மலிவாக எளிதில் கிடைக்கும் பொருள்களையே பயன்படுத்தலாம். இதற்கு அதிக செலவும் ஆகாது.

# மாற்றாற்றல் உடையோர்



ஔவையார் மனிதனின் நற்பிறப்புப்பற்றிக் கூறுகையில், அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது. மானிடராயினும் கூன் குருடு செவிடு நீங்கிப் பிறத்தலரிது" என்று பாடியுள்ளார்.

இயற்கைக் காரணிகளாலும், சிலவகை நோய்களாலும், பலவகை விபத்துக்களாலும், மனிதர் கூனராய், குருடராய், செவிடராய், முடவராய், மன நோயாளராக ஆகி உலகெங்கும் வாழ்கிறார்கள். அவர்கள் சாதாரண மக்களில் இருந்து ஒரு வகையில் வல்லமை குறைந்தவர்கள். மற்றவர்கள் போல் வாழ வேண்டும் என்ற வேட்கை உடையவர்கள். எல்லாவற்றிலும் மேலாக ஆயிரம் ஆயிரம் உணர்வுகளும் உடையவர்கள். இவர்கள் சமுதாயத்தில் பல இன்னல்களுக்கு ஆளாகி வருகிறார்கள்.


இறைவன் படைப்பு விசித்திரமானது. வல்லமை இழந்த ஊனமுற்றவர்களுக்கு வேறு சில ஆற்றல்களை அவன் வழங்கியுள்ளான். குறிப்பாக பார்வை இழந்தவர்களுக்கு கேள்விப்புலனும், ஞாபக சக்தியும், கூர்மை பெற்று விளங்குவது கண்கூடு. குருடரும் முடவருமான இரட்டைப் புலவர்கள் முன்னைய காலத்தில் கவிமழை பொழிந்த கதை எல்லோருக்கும் தெரிந்ததே! இவ்வாறு பார்வையற்றவர்களும் ஏனைய குறைபாடுகள் உடையவர்கள் பலரும் சட்டத்தரணிகளாகவும், ஆசிரியர்கள், அதிபர்களாகவும், விஞ்ஞானிகளாகவும் விளங்குகிறார்கள். இசை மேதைகளாகவும், கவிஞர்களாகவும் மிளிர்கின்றார்கள். ஆக இவர்களை ஆற்றல் அற்றவர்கள் என்று கூற முடியாது. மாற்றாற்றல் உடையோர், மாற்றுத் திறனாளிகள் என்றே குறிப்பிடவேண்டும்.

இவர்கள் ஒவ்வொருவருள்ளும் மறைந்திருக்கும் இந்த மாற்றங்களை வெளிக் கொணர்வதற்கு உதவி செய்வது எமது சமுதாயத்தின் தலையாய பணியாகும்.

இந்தப்பணியில் பொதுமக்களும் தொண்டர் ஸ்தாபனங்களும், அரசும் ஆர்வம் காட்டுதல் அவசியமாகும். அந்த ஆர்வமும் அதன் வழியான செயற்பாடுகளுமே மாற்றுத் திறனாளிகளுக்கு ஒளிமயமான வாழ்வைக் காட்ட வல்லவை.

இன்று மருத்துவத் துறையின் வளர்ச்சியால் பார்வையற்றோர் விழி பெற்று பார்க்கும் திறனுடையவர்களாகிறார்கள் இன்றைய நிலையில் எம்மால் இவர்களுக்கு வழங்கக்கூடிய தானம் கண்தானமாகும். இறந்தவர்களின் கண்களை உடனே எடுத்து இவர்களுக்குப்பொருத்தி பார்வையளிக்க முடியும். நெருப்பில் எரிந்தும், மண்ணினுள் உக்கியும் அழிந்து போகும் கண்களை நாம் தானமாக (இறந்தபின்) வழங்கினால் இப்படிப் பலர் நன்மையடைவர்.

இன்று தொண்டர் ஸ்தாபனங்களாலும் பொது தாபனங்களாலும் நடத்தப்படும் அறநிலையங்கள், மாற்றுத் திறனாளிகளைப் பேணிப்பாதுகாத்து அவரவர் இயல்புக்கு ஏற்ப தொழிற் பயிற்சியளித்து வருகின்றன.




புள்ளிகளை இணைத்துப் படத்தை முழுமை செய்வோம்

### நீர்வேலி வாள்வெட்டு

# சந்தேக நபர்கள் 3 பேர் கைது

### வாளும் மீட்பு

நீர்வேலியில் கடந்த திங்கட் கிழமை இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அவர்களிடமிருந்து வாள் ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட் கிழமை இரவு, நீர்வேலி செம்பாட்டுப் பிள்ளையார் கோவிலில் வைத்து இரண்டு இளைஞர்கள் மீது வாள்வெட்டு நடத்தப்பட்டிருந்தது. ஆவாக் குழுவைச் சேர்ந்த 8 பேரே இதனை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் மூவரை இணுவில் பிரதேசத்தில் வைத்துக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். எதிர்வரும் 17ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (5,8,114)

---

### பல்கலை...

றம்சாட்டினார்.

பொதுஅமைப்புக்களுடனான கூட்டத்திலேயே முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மேற்படி குற்றச்சாட்டை பகிரங்கமாக முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை கடந்த மூன்று ஆண்டுகளாக வடக்கு மாகாண சபையே பொறுப்பெடுத்து நடத்தி வருகின்றது. அன்றைய காலங்களில் பல்கலைக்கழக மாணவர்கள் பங்குகொள்ளவில்லை. ஆனால் இப்போது வந்து நாங்கள் கடைப்பிடிக்கத் தீர்மானித்துள்ளோம், எம்முடன் இணைய விரும்புபவர்கள் இணையலாம் என்று அறிக்கை விடுகின்றனர். இவர்களின் செயற்பாடுகளை பார்க்கும் போது மாணவர்களுக்கு எங்கிருந்தோ வருமானம் வருகின்றது. இதனால்தான் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் போல் தெரிகின்றது.

பல்கலைக்கழக மாணவர்கள் பங்களிப்புச் செய்வது என்றால் ஆரம்பத்திலேயே எம்முடன் கதைத்து ஆலோசனையைப் பெற்றிருக்கலாம். அதனை விடுத்து ஊடகங்கள் வாயிலாக தாம் நடத்தவுள்ளோம் இணைய விரும்புபவர்கள் வரலாம் என்று கூறுவது சரியானதல்ல. எது எவ்வாறாயினும் பல்கலைக்கழக மாணவர்கள் எமக்கு எதிரி அல்ல. எனவே எம்முடன் சேர்ந்து எப்படிப் பயணிக்க முடியும் என்பதையே அவர்கள் சிந்திக்க வேண்டும். வடக்கு மாகாண சபையுடன் இணைந்து செயற்பட நான் அவர்களுக்கு மீண்டும் அழைப்பை விடுக்கின்றேன் - என்றார்.

'முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை வடக்கு மாகாண சபை பொறுபேற்று நடாத்தக் கூடாது என்று கூறப்படுவதற்கு பின்னால் அரசியல் சக்திகள் உள்ளனவா' என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த முதலமைச்சர், வடக்கு மாகாண சபைக்கு எதிராகச் செயற்படுகின்றனர் என்றால் இதுவரைக்கும் எத்தனையோ பேர் மாகாண சபைக்கு எதிராக செயற்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவராக யாராவது செயற்படக் கூடும். இவற்றை எல்லாம் நாம் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. கரவன் போய்க் கொண்டிருக்கும் நாய்கள் குரைத்தால் அதனைப் பார்த்துக் கவலைப்படுவதில்லை. இதற்கு மேல் சொல்ல ஒன்றுமில்லை - என்றார். (5,8)

### பேரெழுச்சியுடன்...

மாகாண சபையுடன் இணைந்து கடைப்பிடிக்க ஆர்வம் உள்ள பொது அமைப்புக்களுக்கும் வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் இடையில் அவரது அலுவலகத்தில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது. சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துக் கூறும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை கடந்த மூன்று ஆண்டுகளாக வடக்கு மாகாண சபையே ஒருங்கிணைத்து வருகின்றது. இந்த ஆண்டும் நாமே ஒருங்கிணைத்து நடத்தத் தீர்மானித்து எம்முடன் இணைந்து செயற்பட ஆர்வம் உள்ள பொது அமைப்புக்களுக்கு அழைப்பு விடுத்திருந்தேன். அந்த அழைப்பை ஏற்று வந்த பொது அமைப்புக்களுடன் கலந்துரையாடினோம். அதில் பலரும் பலவாறான கருத்துகளை முன்வைத்த னர்.

வடக்கு மாகாண சபையின் ஆயுள்காலம் நடப்பாண்டுடன் நிறைவடையவுள்ளது. அத்துடன் முள்ளி வாய்க்கால் நினைவு தினத்தின் பத்தாண்டு நிறைவு அடுத்த ஆண்டாகும். அந்த நினைவு நாளை நாம் உணர்வுபூர்வமாக பேரெழுச்சியுடன் கடைப்பிடிக்கத் தீர்மா னித்துள்ளோம். முள்ளி வாய்க்கால் நினைவு தினத்தை ஆண்டுதோறும் ஒருங்கிணைத்து நடத்த அனைத்துச் சமூக மட்ட அமைப்புக்களையும் இணைத்துக் குழுவை அமைக்கவுள்ளோம் - என்றார். (5,8)

---


## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம்

எருவன் சந்தி, வரணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை சுப்பிரமணியம் நேற்று (09.05.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் பார்வதிப்பிள்ளை (லண்டன்), சரஸ்வதிப்பிள்ளை இராஜேஸ்வரி அன்னலட்சுமி (லண்டன்), தெய்வநாயகி (லண்டன்), சாந்தநாயகி (லண்டன்), குகனேசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுப்பையா பாலசுந்தரம் நகுலபாஸ்கரன்(லண்டன்), ஈஸ்வரன்(லண்டன்), பாலேந்திரன் (லண்டன்), சிவசோதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் பகலவன், கயந்தன், சாளினி, அபிசேக், சிந்துஜா, கரிகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2018) வியாழக் கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குடமியன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

எருவன் சந்தி, வரணி. (C 6702/15/17) தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செபமாலை அன்ரனி இம்மானுவேல்

(நவநாதன்)



பிறப்பு 15.11.1954 இறப்பு 09.05.2018

ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி மாதா கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை அன்ரனி இம்மானுவேல் (நவநாதன்) நேற்று (09.05.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபமாலை - நேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் நேசரத்தினத்தின் அன்புக் கணவரும் லியோ, சாள்ஸ், அமல்ராஜ் (பொலிஸ் உத்தியோகத்தர், பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சர்மிளா (பொலிஸ் உத்தியோகத்தர், நெல்லியடி) வின் அன்பு மாமனும் பாருயனின் அன்புப் பேரனும் றீற்றா, காலஞ்சென்ற லீலா, கமலா, ஜசிந்தா, லலிதா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் மற்றும் துரைசிங்கம், தங்கராசா, சாமிநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான இதயன், ரேணுகா மற்றும் தவம், அமலன், வாணி, ஜான்சிகா, ரூபிகா, சுகிர்தா, சுரேகா, தர்சிகா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை கரவெட்டி மாதா கோவிலில் இன்று (10.05.2018) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கரவெட்டி கீரிப்பல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாதா கோவிலடி,
கரவெட்டி தெற்கு. (ANE 466/15/17)

தகவல்: குடும்பத்தினர்.
077 348 8104

## மகோற்சவகால கடைகள் கூறுவிலை கோரல்

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் மகோற்சவகால கடைகள் கூறுவிலை கோரல் எதிர்வரும் (13.05.2018) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் கடைகளை ஏலத்தில் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(CS 16458) (14.17) தர்மகர்த்தாக்கள் சபை.

## கண்ணீர் அஞ்சலி

26.04.2018 இல் காலஞ்சென்ற
எமது சங்க அங்கத்தவர்

**திருமதி**
**கனகசேகரமூர்த்தி**
**மகேஸ்வரி**



அவர்களுக்கு
கண்ணீர் அஞ்சலி செலுத்துகின்றோம்.

**நிர்வாகமும், அங்கத்தவர்களும்**
**நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் சிக்கன**
**கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் (வ -து)**

(cs.16471) (13.17)

## கண்ணீர்க் காணிக்கை



*இசை ஆசான் கலாபூஷணம்*

**விஸ்வநாதன் சிவஞானசேகரம்**

*பண்ணுடன் இசைதனை பண்புடன் எமக்கூட்டி*
*பற்பல அரங்குகளில் எமை ஏற்றி அழகுபார்த்த*
*பார்புகழ் ஆசானே காலன் உமை அழைத்ததேனோ*
*குருவடிவான இசையே உமை இழந்து தவிக்கின்றோம்.*

***மண்ணுலகில் இசைத்த ஒலி விண்ணுலகில் ஒலிக்கட்டும்!***

*அன்பு மாணவர்கள்,*
**அ.அமிர்தலோஜனன், அ.அமிர்தசிந்துஜன்**

## மரண அறிவித்தல்

### கனகர் செல்லத்துரை அன்னலிங்கம்



தோற்றம் 27.12.1931 மறைவு 09.05.2018

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்பொழுது லண்டனில் வசித்தவருமாகிய கனகர் செல்லத்துரை அன்னலிங்கம் லண்டனில் காலமானார்.

அன்னார் லீலாராணியின் அன்புக் கணவரும் சரஸ்வதி (நந்தினி - லண்டன்), றோகினி (கோண்டாவில்), காலஞ்சென்ற சந்திரமோகன் மற்றும் சந்திரதாசன் (ஜேர்மன்), நந்தவதனி (கனடா), நந்தகுமார் (சுவிஸ்), சசிகலா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஞானபண்டிதன் மு.விமலநாதன், ரஜனி (ஜேர்மன்), விஜயகுமார் (கனடா), பத்மலோஜினி (சுவிஸ்), பிரபாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான ராசையா (பிள்ளையார்), வேலாயுதபிள்ளை, அன்னம்மா, அன்னலக்ஷ்மி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெயபிரதா, லவப்பிரதா, இராஜேஷ்கண்ணா, நிரூஜிதா, விஜிகிறிஸ்ணா, சந்தியா, இலக்கியா, சுகன்யா, நயனிகா, நந்தனா, யாஜினி, சாலினி, தோகுலன், யதுகுலன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

74/17, திருச்செல்வம் வீதி,
பலாலிவீதி, கோண்டாவில்.

தகவல்: மு.விமலநாதன் (மருமகன்)
0044 203 674 6049, 077 813 0116

(CS 16485/15/17)

# அடிப்படை வருடத்தின் மீதான, வருட பணவீக்கம் குறைவடைந்துள்ளது

## தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரப் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டு

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்கள் அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கம் கடந்த டிசெம்பர் மாதத்தில் 7.3 வீதத்திலிருந்துடன், ஜனவரி மாதத்தில் 5.4 வீதமாக குறைவடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து பதிவான ஆகக் குறைந்த பணவீக்கப் பெறுமானமாக இது காணப்படுகிறது.

இந்த தகவலை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

கடந்த ஜனவரி மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்துக்கான பங்களிப்புகள் முறையே 6.9 வீதமாகவும், 1.9 வீதமாகவும் காணப்படுகிறது. 2016 ஆண்டு இதேகாலப்பகுதியில் பணவீக்கத்துகான மேற்படி இரு பிரிவுகளில் இருந்து பங்களிப்புகள் முறையே 4.0 வீதமாகவும், 1.4 வீதமாகவும் பதிவிடப்பட்டுள்ளன.

அதேவேளை 6.5 வீதம் என்ற முதன்மை பணவீக்கத்தின் பெறுபேறாக, 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இந்த இரு பிரிவுகளினதும் பணவீக்கத்துக்கான பங்களிப்புகள் முறையே 2.9 வீதமாகவும், 3.6 வீதமாகவும் காணப்பட்டன.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிட்டு நோக்குகையில் 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் பதிவாகிய 126.6 என்ற சுட்டெண் பெறுமானம் கடந்த ஜனவரி மாதத்தில் 125.8 சுட்டெண் பெறுமானமாக குறைவடைந்துள்ளது. இந்த குறைவானது 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் ஜனவரி மாதத்தில் 0.8 சுட்டெண் புள்ளி அல்லது 0.6 சதவீத குறைவினை வெளிக்காட்டியுள்ளது. உணவுப்பொருள்களின் செலவுப் பெறுமதியானது 0.78 வீதத்தாலும், உணவல்லாப்பொருள்களின் செலவுப் பெறுமதியானது 0.11 வீதத்தாலும் அதிகரித்துள்ளமையே இந்த மாதாந்த மாற்றங்களுக்கான முதன்மைக் காரணமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

உணவுப்பொருள்களின் செலவுப் பெறுமதியின் குறைவுக்கு காரணம் மரக்கறி, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய், தேங்காய், பெரிய வெங்காயம், அரிசி, தேங்காய், எலுமிச்சம்பழம், மைசூர்பருப்பு, உருளைக்கிழங்கு, வெள்ளைப்பூடு மற்றும் முட்டை ஆகியவற்றின் விலைகளில் ஏற்பட்ட குறைவே காரணமாகும். (ஒ)

## UNIVERSITY OF JAFFNA
## 33rd GENERAL CONVOCATION
## (Part II) - 08.06.2018

The 33rd General Convocation (**Part II**) of the University of Jaffna rescheduled to be held on **8th June, 2018 Friday** for the conferment of Post-Graduate Degrees / Degrees and Diplomas. Those who have passed the following Examinations after **11th January, 2017** are kindly requested to supplicate on or before Friday the **18.05. 2018.**

**UNIVERSITY OF JAFFNA**
**Doctor of Philosophy**
**Master of Philosophy**
**Master of Arts in Saiva Siddhantha**
**Maser of Business Administration**
**Bachelor of Medicine and Bachelor of Surgery**
**Bachelor of Science**
**Bachelor of the Science of Engineering**
**Bachelor of Science in Computer Science**
**Bachelor of Arts**
**Bachelor of Fine Arts**
**Bachelor of Arts in Translation Studies**
**VAVUNIYA CAMPUS**
**Master of Education**

**INSTRUCTIONS**

1. **SUPPLICATION FORMS:**
   A sample supplication form is given below. Candidates can either prepare the same in an A4 sheet or copy the same from the University of Jaffna website **www.jfn.ac.lk** for supplication.
2. **FEES:**
   **Under Graduate –Rs.1,500.00**
   - Supplication Fee Rs. 500.00
   - Certificate Fee Rs. 500.00
   - Gown Fee Rs. 500.00

   **Post Graduate - Rs. 2,000.00**
   - Supplication Fee Rs. 500.00
   - Certificate Fee Rs. 500.00
   - Gown Fee Rs. 1000.00

   **Note:** Following grandaunts need not pay the Gown fee.
   i. Those who opt to get their degree **IN ABSENTIA**
   ii. Those who were conferred with ordinary Diplomas of one /two years
3. **METHOD OF PAYMENT**
   Payments should be made at any branch of the Peoples' Bank in favour of the University of Jaffna, Account No **162 100160000880 of the Peoples' Bank,** Jaffna University Branch. (Please write your name & student registration number in the bank slip).
   **Please note that the original copy of the payment receipt should be sent along with the Supplication Form whilst retaining a photocopy for candidate's record.**
4. **GOWNS &GUEST TICKETS**
   Graduands who supplicate to receive degree **'IN PERSON'** will be issued a gown and a guest ticket for the Convocation at the Academic Branch.
5. **DUES TO THE UNIVERSITY**
   Certificates will not be issued to those who fail to discharge any Liabilities or dues to the University.
6. **SUBMISSION OF SUPPLICATION FORMS**
   Supplication Forms duly perfected with Payment Receipt should be either handed over or posted under registered cover to the following Addresses on or before **18.05.2018**

(1) **Graduands of the University of Jaffna**
Senior Assistant Registrar/ Admissions,
University of Jaffna,
Jaffna.

(2) **Graduands of the Vavuniya Campus of the University of Jaffna**
Senior Assistant Registrar/ Examination,
Vavuniya Campus
University of Jaffna,
Vavuniya

**CLOSING DATE OF SUPPLICATION: Friday, 18.05.2018**
Late supplication will not be entertained. For further details, please contact:
Senior Assistant Registrar / Admissions,
University of Jaffna,

**TP: 021 222 6714.**
**REGISTRAR**
**08.05.2018**

(JN6696)(10)













### தேவை

சாவகச்சேரியில் இயங்கும்
தேநீரகத்திற்கு ரீ மேக்கர் தேவை.
**தொடர்பு-076 432 9633**

### தேவை

பெண்களுக்கான ஆடைகள் வடிவமைப்பாளர் (Fasion Designer) , கட்டிங் தெரிந்தவர் தேவை. **0774701495**

### அபிவிருத்திச்சங்க பொதுக்கூட்டம்

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் 2018 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி சங்க பொதுக் கூட்டம் எதிர்வரும் 16ம் திகதி புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து பெற்றோர்களையும் தவறாது சமூகமளிக்குமாறு அழைத்து நிற்கின்றோம்.

**பாடசாலை சமூகம்,**
**புனித தெரேசாள் மகளிர் கல்லூரி**
**அச்சுவேலி**

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை - காங்கேசன்துறை
## கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் 2018

வலிகாமம் வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்படும் கடைகளினை யாழ்ப்பாண மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்கமைய மாதாந்த வாடகைக்கு வழங்குவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :- 10.05.2018 தொடக்கம் 23.05.2018 பிற்பகல் 3.00 மணி வரை
கேள்விப் பத்திரம் ஏற்கப்படும் இறுதித்திகதி:- 24.05.2018 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணி வரை
கேள்விப் பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:- 24.05.2018 வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணி

கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து அரக்கு முத்திரையிட்டு மூலப்பிரதியினை தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை எனும் முகவரிக்கு 24.05.2018 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். மறு பிரதியினை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் , யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்படல் வேண்டும்.

01. இக் கேள்வியானது யாழ்மாவட்டத்தை நிரந்தர வதிவிடத்தினை கொண்ட கேள்வியாளர்களுக்கு மட்டும் வழங்குவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கேள்வியாளர்கள் கேள்வியுடன் யாழ் மாவட்டத்தில் இறுதியாக 05 வருடங்கள் வசித்தமையினை உறுதிப்படுத்தி கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது வாக்காளர் பட்டியலின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி சமர்ப்பிக்க வேண்டும். வதிவிடத்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்காத கேள்விகள் நிராகரிக்கப்படும்.
02. சித்தி பெற்ற கேள்விதாரர் கேள்வி திறத்தல் தினத்திலிருந்து 14 நாட்களிற்குள் ஒருங்கிணைந்த கட்டுப்பணத்தின் முழுத்தொகையையும் ஒரே தவணையில் செலுத்த வேண்டும்.

| விபரம் | பரப்பளவு (சதுரஅடி) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ஒருங்கிணைந்த கட்டுப்பணம்) | கேள்விப் பத்திர கட்டணம் | கேள்வி வைப்பு | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| தெல்லிப்பழை | | | | | |
| கடை இல 1 முதலாம் மாடி | 3170 சதுரஅடி | 6,000,000.00 | 2000.00 | 600,000.00 | 25,000.00 |
| வீமன்காமம் | | | | | |
| கடை இல1 | 370 சதுரஅடி | 1,000,000.00 | 2000.00 | 100,000.00 | 1,500.00 |
| கடை இல2 | 180 சதுரஅடி | 500,000.00 | 2000.00 | 50,000.00 | 1,000.00 |

குறிப்பு : மேலதிக தகவல்களை 18.04.2018 ம் திகதி வெளியான "வலிகாமம் வடக்கு பிரதேசசபை காங்கேசன்துறை கடைகள் வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் 2018" இல் பார்வையிடவும்.

சோமசுந்தரம் சுகிர்தன்
தவிசாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

10.05.2018

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| கத்தரி | 50 | 60 | 40 | 60 | 60 |
| முள்ளங்கி | – | 50 | 60 | 60 | 30 |
| மரவள்ளி | 50 | 40 | 30 | 40 | 30 |
| பயிற்றை | 60 | 120 | 100 | 80 | 140 |
| பாகல் | 100 | 200 | 120 | 120 | 100 |
| க.கிழங்கு | 60 | 60 | 60 | 80 | 40 |
| பெ.வெங்காயம் | 90 | 140 | 90 | 90 | 60 |
| சி.வெங்காயம் | 160 | 150 | 140 | 160 | 140 |
| பூசணி | 40 | 50 | 20 | 30 | 40 |
| தக்காளி | 100 | 50 | 100 | 100 | 100 |
| வாழைக்காய் | 40 | 70 | 60 | 40 | 60 |
| கீரை | 30 | 30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 35 | 20 |
| ப.மிளகாய் | 50 | 60 | 40 | 60 | 60 |
| புடோல் | 60 | 70 | 60 | 60 | 40 |
| கோவா | 60 | 60 | 40 | 60 | 50 |
| வெண்டி | 60 | 100 | 60 | 70 | 80 |
| போஞ்சி | 200 | 140 | 160 | 180 | 80 |
| லீக்ஸ் | 200 | 180 | 180 | 200 | 140 |
| தேங்காய் | 65 | 80 | 90 | 70 | 70 |
| உ.கிழங்கு | 100 | 70 | 100 | 100 | 80 |
| தேசிக்காய் | 250 | 200 | 180 | 240 | 240 |
| வல்லாரை | 20 | 20 | 35 | 20 | 15 |
| கறிமிளகாய் | 80 | 120 | 80 | 100 | 100 |
| கரட் | 100 | 100 | 80 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 80 | – | 220 | 100 | 300 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 900 | 1000 | 1000 |
| நண்டு | 500 | 600 | 500 | 300 |
| கணவாய் | 800 | 800 | 800 | 1000 |
| பாரை | 500 | 500 | 700 | 1100 |
| சுறா | 600 | 700 | 1000 | – |
| சீலா | 350 | 450 | 500 | 600 |
| விளை | 400 | 450 | 500 | 700 |
| முரல் | 300 | 400 | 500 | 600 |
| கும்பிளா | 450 | 350 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 400 | 600 | – |
| ஒரா | 350 | 400 | 500 | 400 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 250 | 400 | – |
| சூடை | 200 | 180 | 200 | 200 |
| ஒட்டி | 200 | 200 | 300 | – |
| திருக்கை | 300 | 300 | 400 | 400 |
| மதனம் | 300 | 300 | 300 | – |
| கொய் | 100 | 100 | 100 | 100 |
| பாலை | 250 | 300 | 500 | 300 |
| வாளை | 250 | 300 | 400 | – |

# குருதிக்கொழுப்பை குறைக்கும் கிவி பழம்



கிவி பழத்தில் விற்ற மின் சி அதிகமாக உள்ளது. இதனை ஒரு நாளைக்கு ஒன்று என்ற வாறாகச் சாப்பிட்டு வந்தால் மூச்சுக்கோளாறான ஆஸ்துமா நீங்கும். கிவி பழங்களைப் போன்று வாழைப்பழங்களில் பொட்டாசியம் அதிகம் இருக்கிறது. ஆனால் வாழைப்பழங்களுடன் ஒப்பிடுகையில் கிவி பழத்தில் கலோரியின் அளவு குறைவு. கலோரியின் அளவு குறைவாக இருப்பதால் சோடியத்தின் அளவு குறைகிறது. குருதி அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் சோடியத்தின் அளவு குறைவதால் இதய நோய் வராமல் தடுக்கிறது.

விற்றமின் ஈ அதிகமாக இருக்கும் உணவில் கொழுப்பும் அதிகமாக இருக்கும். ஆனால் கிவி பழத்தில் விற்றமின் ஈ அதிகமாகவும், கொழுப்பு குறைவாகவும் உள்ளது. இதனால் 'ஆன்டிஆக்ஸிடன்ட்' அதிகமாவதால் ஆரோக்கியமான இதயத்தையும் தருகிறது.

போலிக் அமிலம் கிவி பழத்தில் அதிகமாக, இருப்பதால் கர்பிணிகளுக்கு மிகவும் சிறந்தது. ஏனென்றால் குழந்தைகளுக்கு நரம்புக்குழலில் ஏற்படும் பிரச்சினைகளை தடுப்ப தோடு, கர்ப்பிணிகளுக்குத் தேவையான விற்றமின்களையும் தருகிறது.

மேலும் குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு சிறந்ததோடு மட்டுமல்லாமல் இதய நோய் வராமலும் தடுக்கிறது. உணவுக்கட்டுப்பாட்டை மேற்கொள்வதற்கு சிறந்ததாகவும் உள்ளது. ஏனென்றால் இதில் இரும்புச்சத்து இருப்பதால் பசியையும், செரிமானத் தன்மையையும் அதிகரிக்கச் செய்கிறது.

மேலும் இரும்புச்சத்து குருதிக் கொழுப்பை குறைப்பதோடு இதய நோய் மற்றும் சில வகை புற்றுநோய்களையும் தடுக்கிறது. இது உடல் எடையைக் குறைப்பதோடு உடலுக்குச் சிறந்த பழமுமாகும்.

# அல்சர் உள்ளவர்கள் அவசியம் தவிர்க்கவேண்டிய உணவுகள், பானங்கள்!

மாறிவரும் உணவு முறை எமக்கு நல்லதைச் செய்கிறதோ இல்லையோ, விதவிதமான நோய்களை எம்மிடம் சேர்க்கிறது. அவற்றில் முக்கியமான ஒன்று, 'பெப்டிக் அல்சர்' எனச் சொல்லப்படும் வயிற்றுப்புண்.

'அனுபவித்தவர்களுக்குத்தான் அல்சரின் வேதனை புரியும்'. சாப்பிட வேண்டும் என ஆசை இருந்தாலும், சரியாகச் சாப்பிட முடியாது. இது உணவுக்குழாய், இரைப்பை மற்றும் சிறுகுடலின் உட்சுவரில் உருவாகும் ஒருவகைப் புண். இது பாதிக்கப்பட்டவரைப் பலவிதத் தொந்தரவுகளுக்கு ஆளாக்கும். அல்சர்வருவதற்கான அறிகுறிகளை இனங்கண்டால் அதை வராமல் தடுக்க முடியும்.

அல்சரால் பாதிக்கப்பட்டவர்கள் எந்த வகை உணவுகளைச் சாப்பிடலாம், எவற்றைச் சாப்பிடக் கூடாது என்பதைத் தெரிந்துவைத்திருக்க வேண்டும். உணவுப் பழக்கத்தில் கவனமாக இருந்தாலே அல்சர் பிரச்சினையில் இருந்து எளிதாக விடுபட்டுவிடலாம். உணவுகளில் கவனமாக இருந்தால், செரிமானமின்மை, வாயுத்தொல்லை, வாந்தி எடுத்தல், உணவைப் பார்த்தாலே அருவருப்பாக உணர்தல் ஆகியவை தவிர்க்கப்படும். வயிற்றில் ஏற்படும் கடுமையான எரிச்சல் உணர்வையும் இதனால் தடுத்துவிடலாம். அல்சர் உள்ளவர்கள் அவசியம் தவிர்க்கவேண்டிய உணவுகள், பானங்கள் என்னென்ன?

**காரமான உணவுகள்**

அல்சருக்கு ஆகவே ஆகாதது காரம். காரமான உணவுகளும் அதிக மசாலா சேர்த்த உணவுகளும் அமிலத்தின் அளவை அதிகரிக்கும். எதுக்களிப்பை ஏற்படுத்தும். அதனால் வயிற்றின் ஓரங்கள் எல்லாம் பாழாகும். ஏற்கெனவே அல்சர் இருப்பவர்களின் நிலை இன்னும் மோசமாக மாறிவிடும். எனவே, அதிகம் மிளகாய்த்தூள், மிளகாய் சேர்த்த உணவுகளைத் தவிர்ப்பது நல்லது.

தொடர்ந்து கோப்பி குடிப்பதாலும் பெப்டிக் அல்சர் ஏற்படும்' என்கிறது நவீன மருத்துவம். கோப்பிக்குப் பதிலாக, வயிற்றுக்கு இதம் தரும் மாதுளை ஜூஸ், அப்பிள் ஜூஸ் போன்ற வேறு ஏதேனும் பானங்களை அருந்தலாம். இவற்றால் வயிற்றுப் புண் ஆறவும் வாய்ப்புள்ளது.

**சிவப்பு இறைச்சி**


சிவப்பு இறைச்சி வயிற்றுப் புண்ணுக்கு பெரிய காரணமாக இருக்காது என்று பலரும் நினைக்கிறார்கள். அது தவறு. இந்த இறைச்சி, வயிற்று ஓரங்களைப் பழுதடையச் செய்யும். இதில் உள்ள அதிக அளவிலான புரதச்சத்தும் கொழுப்புச் சத்தும் செரிமானமாவதற்கு அதிக நேரம் எடுத்துக் கொள்ளும். அதனால் வயிற்றிலேயே அதிக நேரம் இறைச்சி உணவு தங்கிவிடும். இதனாலும் வயிற்றில் அமிலம் அதிகம் சுரக்க நேரிடும். இதுவும் அல்சரை அதிகரிக்கச் செய்யும்.

சோடாவிலும் குளிர்பானங்களிலும் இருக்கும் சிட்ரிக் அமிலம், வயிற்றின் அமிலத் தன்மையை அதிகரிக்கக்கூடியது. இது செரிமானத்திலும் பிரச்சினையை ஏற்படுத்தும். அல்சர் இருப்பவர்கள் சோடாவையோ, குளிர்பானங்களையோ அருந்துவதைத் தவிர்க்க வேண்டும்.

**பால்**

அல்சர் உள்ளவர்கள் பால் மற்றும் பால் உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. சிலர் பாலைக் குடித்தால்.அல்சர் குணமாகும் என நினைக்கிறார்கள். ஆனால், பாலில் இருக்கும் புரதச்சத்தும் கொழுப்புச்சத்தும் வயிற்றுப் புண்ணுக்கு ஆபத்தைத்தான் ஏற்படுத்தும். பால், வயிற்றின் அமிலத் தன்மையை அதிகரிக்கச் செய்யும்.

அல்சர் உள்ளவர்கள் நேரத்துக்குச் சாப்பிடவேண்டியது அவசியம். நார்ச்சத்துள்ள காய்கறிகள், பழங்கள் செரிமானத்தை சீராக வைத்திருந்து, அல்சரில் இருந்து காக்கும். முட்டை, தயிர், மீன், பீன்ஸ் ஆகியவற்றை அதிகமாக உட்கொள்ளலாம். உணவில் புதினாவைச் சேர்த்துக்கொள்ளலாம். தேங்காய்ப்பால், மணத்தக்காளிக்கீரை ஆகியவை வயிற்றுப் புண்ணை ஆற்றும். தானியங்கள், பழங்கள், காய்கறிகள் ஆகியவற்றைச் சேர்த்துக்கொள்ளலாம்.



தேவையற்ற உணவுகளைத் தவிர்ப்பது விரைவில் அல்சர் பிரச்சினையிலிருந்து மீள உதவும்.

**கண்ணீர் அஞ்சலி**


எமது துறையின்
நீண்டகால வருகை
விரிவுரையாளராகவும்
பரீட்சகராகவும் பணியாற்றி வந்த
**சங்கீத பூஷணம்**
**வி. சிவஞானசேகரம்**
அவர்களின் திடீர் மறைவானது
ஈழத்தின் இசைத்துறை வரலாற்றில்
ஈடுசெய்யமுடியாத ஒரு இழப்பாகும். இவரது மறைவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



**தலைவர், விரிவுரையாளர்கள், பணியாளர்கள்**
**இசைத்துறை, இராமநாதன் நுண்கலைக்கழகம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

# ஸ்ரான்லி, வித்தியானந்தா ஒருநாள் ஆட்டம் நாளை





யாழ்ப்பாணம், மே 10

நண்பர்களின் போர் என வர்ணிக்கப்படும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் (ஸ்ரான்லி) முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரிக்கும் இடையிலான 50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டம், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நாளை இடம்பெறவுள்ளது.

2013ஆம் ஆண்டு முதல் இதுவரை 5 தடவைகள் இந்த இரண்டு அணிகளும் மோதியுள்ளன. அவற்றில் ஸ்ரான்லிக் கல்லூரி அணி 4 ஆட்டங்களிலும், முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரி அணி ஓர் ஆட்டத்திலும் வெற்றிபெற்றுள்ளன.

(ம-23)

## ஆட்டம் சமநிலை!

யாழ்., மே 10

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்று சமநிலையில் முடிவடைந்தது.

யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் சென். லூட்ஸ், பலாலி விண்மீன் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற ஆட்டமே அவ்வாறு சமநிலையில் முடிவடைந்தது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன.


(ம-23)

## நவஜீவன்ஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், மே 10

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தக் காலிறுதி ஆட்டத்தில் நாவாந்துறை சென். யூட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.



கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியின் சார்பில் இரண்டு கோல்களும், சென். யூட் அணியின் சார்பில் ஒரு கோலும் பதிவாக முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி.


(ம-23)

## யாழ். பிரதேச செயலகம் கால்பந்தில் சம்பியனானது

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணி சம்பியனானது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலக அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலக அணி.

(ம-23)



## ஞானமுருகன் கழகம் அரையிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், மே 10

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் மயிலங்காடு ஞானமுருகன் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் காலிறுதி ஆட்டத்தில் ஞானமுருகன் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதியது. 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று ஞானமுருகன் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. ஞானமுருகன் அணியின் சார்பில் வாகீசன் 4 கோல்களையும், கஜனுஜன், ஜெகன் இருவரும் தலா ஓர் கோலையும் பெற்றனர்.

(ம-23)

## வலைப்பந்தாட்ட நடுவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பித்தல்

யாழ்ப்பாணம், மே 10

இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்படும் வலைப்பந்தாட்ட ஏ, பி, சி தர நடுவர்களுக்கான பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள வடமாகாணப் பரீட்சார்த்திகள் யாழ்ப்பாண மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளரிடமிருந்து தமது விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

## எல்லேயில் பளை சம்பியன்

யாழ்ப்பாணம், மே 10

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான எல்லே தொடரில், தொடர்ந்து இரண்டாது வருடமாகவும் கிண்ணத்தைக் கைப்பறியது பளை பிரதேச செயலக அணி.

உருத்திரபுரம் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் பளை பிரதேச அணி களமிறங்கியது. அதை எதிர்த்து கரைச்சி பிரதேச செயலக அணி மோதியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பளைப் பிரதேச செயலக அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கரைச்சி பிரதேச செயலக அணி 30 பந்துகளில் ஓர் ஓட்டத்தை மாத்திரம் பெற்றது. வெறும் எட்டுப் பந்துகளில் பளை பிரதேச செயலக அணி வெற்றிபெற்றது.

(ம-6)

## வெற்றிபெற்றது யங்ஹென்றிஸ்



யாழ்ப்பாணம், மே 10

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி போராடி வெற்றி பெற்றது.

கம்பர்மலை யங்கம்ன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து திக்கம் விளையாட்டுக் கழக அணி மோதியது. 1:0 என்ற கோல் கணக்கில் இளவாலை யங்ஹென்றிஸ் அணி வெற்றி பெற்றது.

(ம-23)

# சைவத்தமிழ் வித்தி. இறுதிக்கு சென்றது



யாழ்ப்பாணம், மே 10

வடமாகாண கல்வித் திணைக்களம் நடத்தும் வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான எல்லேயில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தை எதிர்த்து அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலய அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலய அணி 33 பந்துகளில் சகல இலக்குகளையும் இழந்து ஓட்டமெதையும் பெறவில்லை.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய அணி 19 பந்துகளில் 5 இலக்குகளை இழந்து வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-422)

# எல்லே இறுதியில் மெதடிஸ்த பெண்கள் அணி



வடமாகாண கல்வித் திணைக்களம் நடத்தும் வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான எல்லேயில் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து சாவகச்சேரி மகளிர் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி நிர்ணயிக்கப்பட்ட 40 பந்துகளில் 8 இலக்குகளை இழந்து 18 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக காருண்யா 5, அஜிதா 4, சுவர்ணசீலி 3, மனோஜா 3, தயாலசீலி 2 ஓட்டங்களையும், ஜசிந்தா ஓர் ஓட்டத்தையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி மகளிர் கல்லூரி அணி 24 பந்துகளில் 7 இலக்குகளை இழந்து ஓர் ஓட்டத்தை மாத்திரம் பெற்றது. இதையடுத்து 17 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி. (ம)

## வடக்கு பாடசாலைகள் கரப்பந்தாட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது

*யாழ்ப்பாணம், மே 10*

வடமாகாண கல்வித் திணைக்களம் நடத்தும் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான இருபாலாருக்குமான கரப்பந்தாட்டத் தொடர் இன்று ஆரம்பமாகிறது.

இன்று முதல் எதிர்வரும் நான்கு நாள்களுக்கு இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன. ஆண்கள் பிரிவு ஆட்டங்கள் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்திலும், பெண்கள் பிரிவு ஆட்டங்கள் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன. (ம-422)




# சென். பற்றிக்ஸ் எல்லே இறுதியாட்டத்தில்

யாழ்ப்பாணம், மே 10

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான எல்லே தொடரில் ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

சென். பற்றிக்ஸ் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில், சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 40 பந்துகளில் 10 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குக் களமிறங்கிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியும் 10 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதையடுத்து இரண்டு அணிகளுக்கும் தலா 10 பந்துகள் மேலதிகமாக வழங்கப்பட்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் 4 ஓட்டங்களைப் பெற்றது. சாவகச்சேரி இந்துக் கல்லூரியால் 2 ஓட்டங்களையே பெறமுடிந்தது. இதையடுத்து 2 ஓட்டங்களால் வெற்றிபெற்றது யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி. (ம-23)



## சதுரங்கத் தொடர் தெரிவுப் போட்டி

இலங்கை சதுரங்கச் சம்மேளனம் நடத்தும் 20 வயதுக்குட்பட்ட இருபாலாருக்குமான சதுரங்கத் தொடருக்கான தெரிவுப் போட்டிகள் நாளை ஆரம்பமாகவுள்ளன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நாளை முதல் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை வரை இந்தத் தெரிவுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. (ம-23)

## இந்திய அணி அறிவிக்கப்பட்டது

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்துக்கான இந்திய அணி ரகானே தலைமையில் அறிவிக்கப்பட்டது.

ரகானே, தவான், முரளி விஜய், லோகேஸ் ராகுல், புஜாரா, கருண் நாயர், சகா, அஸ்வின், ஜடேயா, குல்தீப்யாதவ், உமேஸ்யாதவ், சமி, ஹார்டிக் பாண்டியா, இசாந் சர்மா, தாக்குர் என்றவாறாக அமைந்துள்ளது அணி. (ம)

# மீண்டது மும்பை இந்தியன்ஸ்

ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என்று அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கி 102 ஓட்டங்களால் கொல்கத்தாவைத் தோற்கடித்தது மும்பை இந்தியன்ஸ் அணி. இந்த வெற்றியை அடுத்து பிளே ஆப் சுற்றுக்குச் செல்லக்கூடிய வாய்ப்பையும் அந்த அணி சிறிது அதிகப்படுத்தியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. மும்பை அணியின் ஆரம்ப வீரர்களாக சூரியக்குமார் யாதவ் மற்றும் லூயிஸ். அணி 46 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் லூயிஸ். அடுத்த சில நிமிடங்களில் 36 ஓட்டங்களடன் சூரியக்குமார் யாதவும் வீழ்ந்தார். ரோகித், இசான் கிசான் இணைந்து அற்புதமான இணைப்பாட்டத்தை வழங்கினர். ரோகித் நிதானிக்க இரட்டிப்பு அதிரடியை வெளிப்படுத்தினார் இசான் கிசான். உலகின் ஆகச் சிறந்த சுழல்பந்து வீச்சாளர்களில் ஒருவர் என்று சமீபகாலமாக அடையாளப்படுத்தப்படும் குல்தீப் யாதவின் பந்துவீச்சில் தொடர்ச்சியாக 4 சிக்சர்களை விளாசினார் இசான் கிசான். 17 பந்துகளில் இசானின் அரைச்சதம் பதிவானது. நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் குறைந்த பந்துகளில் அரைச்சதம் பதிவுசெய்தவர்களின் வரிசையில் மூன்றாவது இடத்தில் உள்ளார் இசான். அவர் 21 பந்துகளில் 62 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். ஹார்டிக் பாண்டியா, கட்டிங் இருவரும் கிடைத்த வாய்ப்புக்களை சிறப்பாகவே பயன்படுத்தினார்கள். முடிவில் 6 இலக்குகளை இழந்து 210 ஓட்டங்களைக் குவித்தது மும்பை இந்தியன்ஸ்.

பந்துவீச்சில் சாவ்லா 3 இலக்குகளையும், கிறிஸ்னா, நரைன், கரண் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு முதல் பந்துப்பரிமாற்றத்தின் இரண்டாவது பந்திலேயே ஆட்டமிழந்து ஏமாற்றினார் சுனில் நரைன். பிறிதொரு ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான லின் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். உத்தப்பாவால் முடிந்தது 14 ஓட்டங்கள். ரணா பதின்மத்தைத் தாண்டினார். எனினும் 21 ஓட்டங்களுடன் கட்டுப்படுத்தப்பட்டார். முன்வரிசை வீரர்கள் தாம் பெற்ற ஓட்டங்களுக்கு நிகரான பந்துகளையே கிட்டத்தட்ட எதிர்கொண்டனர். ஆக, ஒருபுறத்தில் இலக்குச் சரிவு மறுபுறத்தில் பந்துகள் போதாமை என்று இருமுனைப் போராட்டத்தில் சிக்கியது கொல்கத்தா. கொல்கத்தாவின் இன்னிங்ஸ் 10 பந்துப்பரிமாற்றங்களை எட்டுவதற்குள்ளேயே அந்த அணியின் தோல்வி உறுதியானது. மத்திய வரிசையின் அதிரடி வீரரான ரசல் 2 ஓட்டங்களுடனும், டினேஸ் கார்த்திக் 5 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க 108 ஓட்டங்களில் கொல்கத்தாவின் அனைத்து இலக்குகளும் சரிந்து முடிந்தன. பந்துவீச்சில் குருனல் பாண்டியா, ஹார்டிக் பாண்டியா இருவரும் தலா 2 இலக்குகளையும், மக்கலிநகன், பும்ரா, மார்கன்டே, கட்டிங் நால்வரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். (ம)






வட மாகாண முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை விசேட இறுதி கருத்தரங்கு
சனி (12/5), ஞாயிறு (13/5)
காலை 9.00 → 3.00
த.தவசேகர் மற்றும் துறைசார் வளவாளர்கள்
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /-Kg
கனடா-900/-Kg
ஜேர்மனி-700/-Kg
நெதர்லாந்து-700/-Kg
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• வல்வெட்டித்துறை
0768228240
V2 TRAVELS

வேலையாள்கள் தேவை
யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள விடுதிக்கு வேலையாள்கள் தேவை.
1. முகாமையாளர் ஆண்-1 (மும்மொழியும் தெரிந்திருத்தல் வேண்டும்.)
2. வரவேற்பாளர் பெண்-1 (ஆங்கிலம், கொம்பியூற்றர் தெரிந்திருத்தல் வேண்டும். வயது 18-40)
3. கிளினிங் ( Room Boy )-02
077 523 5266 / 077 248 7642
(CS 16475)(10)

## மரண அறிவித்தல்

### திருமதி கவிதா ஜெயசீலன்

(BA (Hons), MA, SPL.in. Tamil, PGD)



குமுழமுனை, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் அம்மன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தைப் வசிப்பிடமாகவும் கொண்ட யாழ். ஒஸ்மானியா கல்லூரியின் முன்னாள் ஆசிரியையும் தற்போது யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியையுமான (MA, PGD) திருமதி கவிதா ஜெயசீலன் கடந்த (08.05.2018) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி மற்றும் பத்மாவதி தம்பதிகளின் அன்பு மகளும் சண்முகலிங்கம் சீதாலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும் ஜெய சீலனின் (பவித்திரன் பல்பொருள் வாணிபம்) பாசமிகு மனைவியும் பவித்திரன் (சென்.ஜோண்ஸ் கல்லூரி), துவிஷன் (சென்.ஜோண்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் தயாழினி, சகிலா, காலஞ்சென்ற சாந்தி மற்றும் காமினி (லண்டன்), கவிதீபன் (தீபன் சவுண்ட் திருநெல்வேலி), திருக்குமரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் திருமதி கேதீஸ்வரி யோகராசன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் கட்டடங்கள் திணைக்களம் யாழ்ப்பாணம்), திருமதி கிருஸ்ணரூபி கேதீஸ்வரன் (லண்டன்), திருமதி கிருஸ்ணவேணி உதயசங்கர், ச.ஜெயபாலன், ச.ஜெயகாந்தன், நா.நாகேஸ்வரநாதன், சோ.கருணாகரன், குணா (கனடா), மன்மதராசா (மதன் - லண்டன்), சிவாஜினி (மாகாண சுகாதாரப் பணிமனை, யாழ்ப்பாணம்), சகிர்தா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று நாளை (11.05.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்கா்க திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### செல்வி கருணாதேவி பொன்னுத்துரை



அளவெட்டி வடக்கு, கணேஸ்வரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கருணாதேவி பொன்னுத்துரை நேற்று (09.05.2018) புதன்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் செல்வராசசிங்கம், ஜெயராஜசிங்கம், வரதராஜசிங்கம், குமாரகுலசிங்கம், பரராசசிங்கம், நவரத்தினசிங்கம், யோகரத்தினசிங்கம், நிர்மலாதேவி காலஞ்சென்றவர்களான புவிராஜசிங்கம், தனபாலசிங்கம், தருமகுலசிங்கம், மதனசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற சீவரத்தினத்தின் மைத்துனியும் நிர்மலேந்திரன், சுகந்தன், சுகன்யா, தீபிகா ஆகியோரின் அன்புச் சித்தியும் துஸ்யந்தி, சுமன் ஆகியோரின் மாமியும் நிஷாந், பிரவீன், லோஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10.05.2018) வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து மல்லாகம் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர். 077 476 6510**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.05.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.